

ரவிப்ரியா
மறுபடியும் ஒரு மனுநீதி

m I. kumarathasan

# மறுபடியும் ஒரு மனுநீதி

## ஆசிரியரின் நூல்கள்

சந்தண ரோஜாக்கள் (நாவல்)

ஒரு வானவில் ரோஜாவாகிறது (நாவல்)

# மறுபடியும் ஒரு மனுநீதி

– ரவிப்ரியா –

வெளியீடு – 47

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்
***WRITERS MOTIVATION CENTRE***
இல. 64, கதிர்காமர் வீதி, அமிர்தகழி,
மட்டக்களப்பு, இலங்கை.
T. P. : 065-2226658, 077-6041503
e-mail: okkunaa@yahoo.com

இந்நூலானது தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் உள்ள உள்ளடக்கமானது, தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை என்பது கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை தேசிய நூலகம் - வெளியீட்டில் உள்ள பட்டியற் தரவு

ரவிப்ரியா
(ரவிப்ரியா வை.க. ரவீந்திரன்)
மறுபடியும் ஒரு மனுநீதி / ரவிப்ரியா;
பதிப்பாசிரியர் ஓ.கே. குணநாதன். - மட்டக்களப்பு:
எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம். - 2008 ப. 120; ச.மீ. 18.-

ISBN 978 - 955 - 8715 - 10 - 7   விலை : 250/-

i. 894.813 டிடிசி வ ii. தலைப்பு
iii. குணநாதன், ஓ.கே. பதிப்பு
i. சிறுகதை

**மறுபடியும் ஒரு மனுநீதி**

▲

**சிறுகதைத் தொகுப்பு**

| | | |
|---|---|---|
| எழுதியவர் | : | ரவிப்ரியா - (வை.க.ரவீந்திரன்) |
| வெளியீடு | : | எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் (பிரியா பிரசுரம் – 47) |
| முதற் பதிப்பு | : | செப்டம்பர் – 2008 |
| அட்டை வடிவமைப்பு | : | சி. பாலேந்திரா (பாலன் போட்டோ) |
| கணனி வடிவமைப்பு | : | ஜெலீலா காதர் முகையதீன் |
| அச்சுப்பதிப்பு | : | ஏ. ஜே. |
| விலை | : | ரூபா: 250/- |

**ISBN : 978 - 955 - 8715 - 10 - 7**

# அணிந்துரை

**தமிழறிஞர் அகளங்கன்**

புதுக்கவிதை, சிறுகதை, நாவல் முதலான மேலைத்தேய இலக்கிய வடிவங்களில், சிறுகதை தமிழில் மிகவும் வளர்ச்சி-யடைந்த இலக்கிய வடிவம் எனலாம்.

தமிழகத்து புதுமைப்பித்தன் முதலான மணிக்கொடி எழுத்தாளர்களும் ஈழத்து, இலங்கையர்கோன் க. தி. சம்பந்தன், சி. வைத்தியலிங்கம் ஆகிய சிறுகதை முன்னோடிகளும், சிறுகதை இலக்கிய வடிவத்தை பல பரிமாணங்களில் வளர்த்தெடுத்தனர்.

இன்று பத்திரிகைகள், சஞ்சிகைகள் யாவும் சிறுகதைகளைத் தாங்கியே வெளிவருகின்றன. பத்திரிகைகளின் வாரமலர்களில் சிறுகதைகள் நிச்சயம் இடம்பெறுகின்றன.

'ரவிப்ரியா' அவர்களின் சிறுகதைகள் பல வீரகேசரி, தினகரன், ஈழநாடு வாரமலர்களிலும் சிந்தாமணி பத்திரிகையிலும் (தினபதி பத்திரிகையின் வாரமலர்) சுடர், தாரகை முதலான சஞ்சிகைகளிலும் வெளிவந்திருந்தன.

பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவந்த அவரது சில நாவல்கள் நூலுருப்பெற்றுள்ளன. இந்நூலில் இடம்பெற்றுள்ள சிறுகதைகள் யாவும் 1979 பிற்பகுதியிலிருந்து 1997 பிற்பகுதிவரை 18 ஆண்டுக் காலத்தில் வெளிவந்தவை.

'இணைகரம்', 'சுகந்தம்' என்ற சஞ்சிகைளின் ஆசிரியரான

ரவிப்ரியா கல்லாறைச் சேர்ந்தவர். இவரது 'ஒரு வானவில் ரோஜாவாகின்றது', 'சந்தன ரோஜாக்கள்' ஆகிய நாவல்கள் ஏற்கனவே வெளிவந்து பலரையும் அவருக்கு ரசிகர்கள் ஆக்கியிருக்கின்றன.

நான் 'ரவிப்பிரியா' வை நேரில் சந்திக்கவில்லை. அவரது இந்தத் தொகுப்பிலுள்ள சிறுகதைகளினூடாகவே தான் நான் அவரைச் சந்திக்கிறேன்.

இது ஒரு நல்ல மிகுந்த சந்திப்பு என்பது எனது எண்ணம். ஏனெனில் அவரது தனிப்பட்ட ஆளுமைப் பண்புகள் எதுவும் எனது இந்த அணிந்துரையைப் பாதிக்காது. முழுக்க முழுக்க அவரது சிறுகதைகளின் கருக்களும், அக்கருக்களை அவர் வளர்த்துச் செல்லும் விதமும், அவ்வளர்ச்சிக்கு அவர் பயன்படுத்தும் சொற்பிரயோகங்களும், அவரது சமூக அக்கறையும் பார்வையும் என்பனவே என்னை இவ்வணிந்துரைக்கு இட்டுச் செல்கின்றன.

இவரது சிறுகதைகள் யாவும் எதுகை மோனை கொண்ட அழகிய கவிதை நடையிலேயே பெரும்பாலும் அமைந்துள்ளன. இது இன்றைய விமர்சகர்கள் பலருக்குப் பிடிக்காத விடயம். ஆனால் எனக்கு அது மிகவும் பிடித்திருக்கிறது. வலிந்து அத்தகைய நடையை இவர் கையாண்டிருந்தால் அது செயற்கைத் தன்மை கொண்டதாக அமைந்திருக்கும். ஆனால் அவரது நடை அப்படி இல்லை.

அத்தோடு, ஒரு மொழியிலுள்ள இலக்கியம் அம்மொழியை-யும் வளர்க்கவேண்டும். மண்ணிலே வளர்கின்ற மரம் மண்ணரிப்பைத் தடுத்து மண்ணையும் பாதுகாக்கின்றது. அப்படிப் பாதுகாத்தாற்தான் வேறுமரங்கள் வளர்வதற்கும் மண்மிஞ்சும். அதேபோல மொழியைப் பாதுகாத்து வளர்த்தெடுத்தாற்தான் அம்மொழியில் மேலும் மேலும் இலக்கியங்களைப் படைக்கலாம். அந்த வகையில் பார்க்கும்போது ஆசிரியரின் தமிழ்மொழி வளர்ச்சியில் கொண்ட அக்கறையும், மொழிஆற்றலும், கையாளும் திறமும், என்னைக் கவர்ந்து பாராட்ட வைக்கின்றன.

இத்தொகுப்பிலுள்ள 14 சிறுகதைகளில், காலத்தை முற்றுமுழுதாகப் பிரதிபலித்துக் காட்டும் நோக்கம் கொண்டவை இரு சிறுகதைகள். அவை 'மறுபடியும் ஒரு மனுநீதி', 'ஒரு ஆரம்பமும் அதன் முடிவும்' ஆகியவை. இவற்றில் மிகச்சிறந்ததாக மறுபடியும் ஒரு மனுநீதி கதையைக் குறிப்பிடலாம்.

ஒரு அதிகாரி பதவி மமதையால் சமூக அக்கறையில்லாமல் செய்த தவறை அவருக்கு உணர்த்தும் வகையில் அமைந்தது இச்சிறுகதை. வாசகர்களின் உணர்வைத் தொடும் வகையில் இச்சிறுகதை அமைக்கப்பட்டுள்ளது.

நாட்டுச் சூழலை, மக்களின் துன்பத்தைப் புரிந்து கொள்ளாத சுயநலம்மிக்க அரச அதிகாரிகள் பலரை நாங்கள் நாளுக்கு நாள் சந்தித்து சலிப்படைந்திருக்கிறோம். கோபப்பட்டிருக்கிறோம். சண்டையும் பிடித்துள்ளோம். இருப்பினும், இக்கதை சற்று வித்தியாசமாக பொருத்தமான ஒரு தலைப்பில் எழுதப்பட்டுள்ளது.

சுழலும் இருக்கை, வாகனம், தொலைபேசி, அரச விடுதி ஆகிய யாவும் தமது உத்தியோகத்துக்காக வழங்கப்பட்ட கௌரவங்கள் எனக்கருதி சுயதேவைக்குப் பயன்படுத்திக் கொண்டு மக்களைப் பற்றிய சிந்தனையோ கடமை உணர்வோ இல்லாத அதிகாரிகள் இக்கதையிலுள்ளபடி தான் திருத்தப்பட வேண்டும் என்று எண்ணும் வண்ணம் இக்கதை அமைந்துள்ளது.

மட்டக்களப்பு மண்வாசனைச் சொற்கள் மணமூட்ட இக்கதை விறுவிறுப்பாக வளர்ந்து செல்கிறது. வைத்தியசாலையில் வேலை செய்யும் சாதாரண காவல் தொழிலாளிக்குரிய மனிதநேயம், சமூக உணர்வு, காயம் பற்றிய கணிப்பு பெரிய படிப்புப் படித்து பெரிய உத்தியோகம் பார்க்கின்ற அதிகாரியிடம் இல்லை. காட்டுவதை பெருமளவு ஏற்றுக் கொள்ளவேண்டியே இருக்கிறது. இது தமிழ்ச் சமூகத்தின் ஒரு சாபக்கேடு என்றே நான் அடிக்கடி வருந்துவதுண்டு.

"ஒரு ஆரம்பமும் அதன் முடிவும்" என்ற சிறுகதை

வதந்தியினால் ஏற்பட்ட கலவரம் பற்றி சிறப்பாகச் சொல்கின்றது. பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனம் என்ற பாகுபாடு உணர்ச்சியைத் தூண்டும் விதம் உணர்த்தப்பட்டுள்ளது. எமது நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டாதவரை இக்கதையில் உள்ளது போன்ற சம்பவங்கள் நிறையவே நடைபெறும் என அஞ்சுவதைத் தவிர வேறென்ன செய்ய.

புத்த பகவானின் கொல்லாமைக் கோட்பாடு பிழையாக அர்த்தப்பட்டு விட்டதோ, அன்றி தமிழன் இக் கோட்பாட்டுக்குள் அடங்காத சடப்பொருளாக அவர்களால் கருதப்பட்டானோ என்ற எண்ணம் கடந்த காலச் சம்பவங்களைப் பார்க்கும்போது எனக்கு வருகிறது. இதே உணர்வு இவ்வாசிரியரையும் உந்தியிருக்கிறது. இக்கதை பிறந்திருக்கிறது.

ஏனைய 12 கதைகளும் குறித்த காலத்தோடு மட்டும் சம்பந்தப்படுபவையல்ல. எக்காலத்துக்கும், பொருந்தக்கூடியன. அன்று நடந்தது இன்று, உனக்கு மட்டுமல்ல, சுபா, இப்படியும் ஓர் இதயம், வரம்பில்லாத வாய்க்கால்கள், தெய்வ காணிக்கை, சில நேரங்களில் சில பஸ்களில், ஒரு டாக்டர் நோயாளியாகிறார், அவர்கள் சிரிக்கிறார்கள், அர்த்தங்கள் தெளிவாகின்றன, வழியும் பழியும் வயதுக்கு வரும் வரை சிறுகதைகள் மிகவும் சமூகப் பிரக்ஞையோடு எழுதப்பட்டுள்ளன.

**அவர்கள் சிரிக்கின்றார்கள்** பல்கலைக்கழகப் பகிடிவதைகளில் வித்தியாசமான ஒருவகையைச் சொல்கிறது. **வயதுக்கு வரும் வரை** வேலைக்காரச் சிறுமியின் அவலத்தையும், அறியாமையும், அவளை வீட்டுக்காரி கொடுமைப்படுத்துவதையும் அனுதாபத்தோடு பார்க்க வைக்கிறது. பலரும் எழுதிய கரு இது.

**அர்த்தங்கள் தெளிவாகின்றன** நல்ல மனமுள்ள குணமுள்ள ஆண்களும் தமது சகோதரிகளுக்காக சீதனம் வாங்கவேண்டியிருக்கும் எமது சமூகக் குறைபாட்டை விளக்குகிறது. **ஒரு டாக்டர் நோயாளியாகிறார்,** இக்கதா நாயகி போல எல்லா

வைத்தியர்களும் இருந்தால் எமது சமூகம் ஆரோக்கியமான சமூகமாக மாறிவிடும். ஆனால் அந்த வைத்தியரே நோயாளி ஆகிவிடுகிறாரே என எண்ணத் தோன்றுகிறது.

**சில நேரங்களில் சில பஸ்களில்** பற்றி வாசகர் ஒருவரின் அபிப்பிராயத்தை இங்கு தருகிறேன். சில நேரங்களில் சில பஸ்களில் பயணஞ் செய்த பெரிய கல்லாறு வி. கே. ரவிப்ரியா நடைமுறை உண்மைகளைப் புட்டுக் காட்டினார். அழகி வந்ததும் அகன்ற விழிகளுடன் வரவேற்கும் சாரதி கிழவியைக் கண்டதும் சீறி விழுவதும்....." எனத் தொடர்கிறது நேயர் கடிதம்.

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள சிறுகதைகள் யாவும், வாசகர்களது மனத்தில் பெருந்தாக்கத்தை விளைவிக்க வல்லன. சமூக முரண்பாடுகள் பலவற்றை அழகாக இந்நூலாசிரியர் காட்டுகிறார்.

இது பொழுதுபோக்காக வாசிப்பதற்குரிய சிறுகதைத் தொகுப்பல்ல. கொஞ்சம் மன உறுத்தலைத் தரவல்லதொரு தொகுப்பு எனலாம்.

சில சிறுகதைகளின் வளர்ச்சி இன்னும் மெருகூட்டப்பட்டிருக்கலாம். குறிப்பாக **"அன்று நடந்தது இன்று"** என்ற சிறுகதையில் தாலிக்கொடி கிலிற் என்ற விபரத்தின்பின் கதையை நகர்த்துவது வாசகர்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கும். கதையை உச்சக்கட்டமாக அமைத்து முடித்திருக்கலாம் போல் தோன்றுகிறது.

**வரம்பில்லாத வாய்க்கால்கள்** சிறுகதையின் முடிவு, **சுபா** சிறுகதையின் முடிவு இவை சினிமாத்தனமானவை போல உள்ளன. **உனக்கு மட்டுமல்ல** சிறுகதையும் அதே ரகமே. பலவிடயங்களை சொல்ல முயல்வது ஒரு குறை எனலாம்.

சிறுகதை என்பது ஒரு கருவை மட்டும் தகுந்த வகையில் வளர்த்துச் சென்று நிறைவுறுத்தும் ஒரு இலக்கிய வடிவம்.

பலவற்றைச் சொல்ல விரும்பினால் குறுநாவல், நாவல் வடிவங்களுக்குச் செல்லவேண்டும்.

இங்கே சில சிறுகதைகளைப் பற்றியே சொல்லியிருக்கிறேன். வாசகர்களின் தரத்துக்கேற்ற வகையில் சகல சிறுகதைகளும் வரவேற்பைப் பெறத்தக்கன.

ஓவியனுக்கு மயிலின் நிறம் பிடிக்கும். நடனக் கலைஞனுக்கு மயிலின் நடனம் பிடிக்கும். விவசாயிக்கு மயிலின் மகிழ்ச்சி பிடிக்கும்.

வாசகர்களிலும் பல தரம், பலரகம் இருப்பதால் இச்சிறுகதைத் தொகுப்பு பலரையும் கவரும் எனலாம்.

திரு. "ரவிப்ரியா" அவர்களது இந்நூல் வெற்றிபெறவும், அவர் இன்னும் பல ஆக்கங்களை உருவாக்கவும் எனது வாழ்த்துக்கள்.

**- அகளங்கன்**

**90, திருநாவற்குளம்,**
**வவுனியா.**

## மனம் திறந்து உங்களுடன் சில நிமிடங்கள்...

ரவிப்ரியா

மிக நீண்ட இடைவெளிக்குப் பின்னர்,
ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் அருளால்,
வாசகர்களை மீண்டும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி.
இரு நாவல்கள் புத்தக வடிவம் பெற்ற போதும்,
சிறுகதைத் தொகுதி வெளியிடுவதற்கான ஆக்கமும் ஆர்வமும்
அதிகமாக இருந்த போதும், அதற்கான வாய்ப்பும், வசதியும்,
தொலைவிலேயே இருந்தன.
எனினும், நண்பர் ஓ.கே. குணநாதன் அவர்களின்
தீவிர விடாமுயற்சியினால் "மறுபடியும் ஒரு மநுநீதி"
பிறந்திருக்கின்றது.
இதன் மூலம் எனது நீண்ட நாள்
ஆசையும் ஆதங்கமும் அரங்கேறுவதில் அகமகிழ்ச்சி.
வாசகர்களே தீர்ப்பாளர்கள் என்பதில்
எனக்கு திட நம்பிக்கை.
நான் என் படைப்புக்களை கிலாகிப்பதை விட,
வாசகர்களாகிய உங்கள் மூலம்,
என் படைப்புக்களைப் பற்றி அறிந்து கொள்ளவே
அதிக விருப்பம்,
"மறுபடியும் ஒரு மநுநீதி" - சிறுகதைத் தொகுதியில்,

எனது நெஞ்சைத்தைத்த மாறுபட்ட விடயங்கள்,
ஒவ்வொரு கதையிலும், ஒவ்வொரு செய்தியை
உங்களிடம் முன்வைக்கும் என்பதை மட்டுமே
என்னால் உறுதிபடக் கூற முடியும்
'இணைகரம்', 'சுகந்தம்', 'மலரும் வாழ்வு' - சஞ்சிகை
வெளியீட்டு அனுபவங்கள்,
இச் சிறுகதை வெளியீட்டில்
நீண்டகால தாமதத்தை ஏற்படுத்தியுள்ளது.
கையைக் கடிக்கும் என்ற நிலையிலும்,
சொந்த நிதி தேடி, தேடி மனமே சோர்ந்தது.

"கடமையில் நேர்மைகாத்தால்,
கடைசிவரை கடனாளிதான்" - என்பதற்கு
நானே நல்ல உதாரணம் என நினைக்கின்றேன்.
வேலை கிடைத்ததிலிருந்து இன்று வரை,
வங்கியில் படும் தொடர் கடனுக்காக
செலுத்தும், செலுத்திய வட்டிகளைக் கணித்தால்,
அத் தொகையில் பல புத்தகங்களை வெளியிட்டிருக்க முடியும்
என்ற பெருமூச்சு அடிக்கடி நண்பர் குணநாதனையும்,
சூடாக்கி விட்டது போலும்,
அதனால் என் நிலையும் சுபாவமும் உணர்ந்து
நண்பர் ஓ. கே. குணநாதன்
இந்த வெளியீட்டிற்காக எடுத்த முயற்சிகள் பல.
இப்போதுதான் அந்த முயற்சி கைகூடியுள்ளது.
இந்த கடின முயற்சியின் கனி.....
வாசகர்களுக்கு இனிக்குமா? கசக்குமா?
என்பதே தற்போதைய ஆதங்கம்.
இவ்வேளையில் இத் தொகுதிக்கான ஆரம்ப தெரிவை மேற்கொண்ட
பிரபல எழுத்தாளரும் நண்பருமான,
உமா வரதராஜன் அவர்களுக்கும்,
இறுதியில் தெரிவைப் பூரணப்படுத்தியதுடன்,

அணிந்துரையும் அளித்துள்ள பெருமதிப்பிற்குரிய
அகளங்கன் ஐயா அவர்களுக்கும்,
நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.
அத்துடன் எனது எழுத்துப் பணிக்கு ஆரம்பத்தில் இருந்தே
ஆக்கபூர்வமான உந்து சக்தியாக இருந்த பின்வருவோர்
என் நெஞ்சம் நிறைந்தவர்கள்,
திருமதி. செ. தம்பிராசா எனது ஆரம்ப தமிழாசிரியை
அமரர் சு. விசுவலிங்கம் பண்டிதர் எனது உயர்வகுப்பு தமிழாசிரியர்
(இருவரும், பள்ளிப்பருவத்தில் எனது தமிழ் ஆற்றலை
ஊக்குவித்தவர்கள். அப்போதே ஆசீர்வதித்தவர்கள்)
மறைந்த சிந்தாமணி ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம், தினகரன்
முன்னாள் ஆசிரியர் திரு எஸ். சிவகுருநாதன், நண்பரும்
பத்திரிகையாளருமான பொன் சுரேந்திரன்,
ஓய்வு பெற்ற அதிபர் மு. பொன்னையா,
அன்புமணி ஐயா, அமரர் ரீ. பாக்கியநாயகம் (சுமைதாங்கி)
அமரர் சிவதாசன் (உதயம்)
வண. ஆனந்தராஜா (தொடுவானம்) கண மகேஸ்வரன் (தாரகை)
ஆகியோர் எனக்குள் நிறைந்தவர்கள் .

என்றென்றும் அன்புடன்,
உங்கள் கூட்டுறவாளன்
**ரவிப்ரியா.**

'திலகா',
விநாயகர் வீதி,
பெரியகல்லாறு -02,
கல்லாறு.
06.03.2007.

## பதிப்புரை

ஓ. கே. குணநாதன்
மேலாளர், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்.

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் 47 வெளியீடாக ரவிப்ரியாவின் 'மறுபடியும் ஒரு மனுநீதி' சிறுகதைத் தொகுப்பை வெளியிடுவதில் மகிழ்ச்சி.

பெரியகல்லாற்றில் 25-11-1949 இல் பிறந்த ரவிப்ரியாவின் இயற்பெயர் வை.க.ரவீந்திரன்.

ரவிப்ரியா, வள்ளிமைந்தன், கதிர்வேந்தன் ஆகிய புனைபெயர்களில் சிறுகதை, நாவல், குறுநாவல், புதுக்கவிதை, நாடகம் எனப் பல்வேறு தளங்களில் நின்று எழுதி வருபவர்.

ஏலவே, 'சந்தண ரோஜாக்கள்', 'ஒரு வானவில் ரோஜாவாகிறது' ஆகிய இரு நாவல்களை நூலாகத் தந்தவர்.

மட்டக்களப்பில் இருந்து வெளிவந்த சுகந்தம், மலரும் வாழ்வு, இணைகரம் ஆகிய மூன்று சஞ்சிகைகளின் ஆசிரியராக இருந்த அனுபவஸ்தர்.

குறுநாவல், சிறுகதைகள், நாடகங்கள், புதுக்கவிதைகள் என 100க்கும் மேற்பட்ட ஆக்கங்களை கைப்பிரதியாக வைத்திருக்கும் ரவிப்ரியாவினால் அதனை நூலுருக்கொண்டுவர முடியவில்லை. அதற்குக் காரணம் மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவுச்

சபையின் செயலாளராக இருக்கும் இவர், ஒரு நேர்மையான உத்தியோகஸ்தராக இருப்பதேயாகும்.

நேர்மையும் உண்மையுமான எழுத்தாளனுக்கு நிதி ஒரு தடைக்கல்லாக இருக்கக்கூடாது என்பதனை உணர்ந்தும், அவர்கள் தொடர்ந்தும் எம் மண்ணுக்கு நல்ல படைப்புக்களைத் தரவேணும் என்ற நோக்கிலும் இந்த நூலை எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம் வெளியிடுகின்றது.

இவ்வெளியீடு ரவிப்ரியாவை இன்னும் பல நூல்களை எழுதத் தூண்ட வேண்டும், உந்து சக்தியாக இருக்க வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

மீண்டும் இன்னுமொரு நூலில் சந்திப்போம்.

என்றும் அன்புடன்,
ஓ. கே. குணநாதன்
மேலாளர்,
எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்.

# சில நேரங்களில் சில பஸ்களில்

பஸ் புறப்படுவதற்கு ஆரம்ப அறிவிப்பாகச் சாரதி ஆசனத்தில் அமர்ந்து கொள்கின்றார். நானும் அவசரமாக ஓடிவந்து மிதிபலகையில் தொற்றிக் கொள்கின்றேன், நடாத்துநர் இறுதி அறிவிப்பாக இரட்டை மணியை அடிக்கின்றார். பஸ் அசைகின்றது.

"நேரத்திற்கு வேலைக்குப் போய்விடலாம்" என்ற நிம்மதி என் நெஞ்சத்தை நிறைக்க, பயணச் சீட்டிற்குப் பணத்தை நீட்டுகின்றேன் நடாத்துனரிடம்.

ஒரு ரூபா எண்பது சத டிக்கட்டுக்கு இரண்டு ரூபாயைக் கொடுக்கின்றேன். ஐந்து சதம் சில்லறை கேட்கின்றார் நடாத்துநர்.

பொக்கற்றைத் துளாவுகின்றேன். ஐந்து சத நாணயம் அபூர்வப் பொருள் என்பதை அது எனக்கு அறிவுறுத்துகின்றது.

"இல்லை" என்று நான் கையை விரிக்க, "இறங்கும் போது இருபது சதத்தை வாங்கிக் கொள்ளுங்கள்" என்று அவர் கூறுகின்றார்.

எதையோ உண்டியலுக்குள் போட்ட உணர்வோடு அந்தச் சீற்றில் உட்காருகின்றேன். "ஐந்து சதத்தைச் சாட்டாக வைத்துப் பலரிடமும் இருபது சதமாகப் பிடித்து வைத்துக் கொள்ளும்

இவர்கள், ஒருவருக்காவது ஐந்து சதத்தை விட்டுக் கொடுத்து, இருபத்தைந்து சதமாகக் கொடுத்தால் குறைந்து விடுவார்களா?" என்று எனக்குள் நானே கேட்டுக் கொள்கின்றேன். இப்படிப் பலரும் பல தடவை தங்களுக்குள் கேட்டுக் கொள்கின்றார்கள்.

அந்த பஸ்ஸில், அநேகமாகக் காரியாலயங்களில் கடமை புரிவோர்தான் நிறைந்திருக்கின்றனர்.

மடியில் 'பைல்கள்', கையில் 'பொண்ட் சூட்கேஸ்கள்', தோளில் 'ஹான்ட் பேக்'குகள் - நடமாடும் காரியாலயம் போல் கவர்ச்சியாக இருக்கின்றது பஸ்.

கலகலப்பான பேச்சுக்கள், கலக்கத்தை ஏற்படுத்தும் விலைவாசிகள் பற்றிய விமர்சனங்கள், இளசுகளின் இங்கிதமில்லா விஷமத்தனங்கள் எல்லாவற்றையும் விளம்பரப்படுத்தியவாறே பஸ் விரைந்து கொண்டிருந்தது.

அது 'கடுகதி' பஸ் என்பதை யன்னல்களினூடாக, வேகமாக வரும் சாலைக்காற்று மூச்சைத் திணறவைத்துக் காட்டிக் கொண்டிருந்தது.

அந்தக் கடுகதித் தரிப்பில் பஸ் நிற்கின்றது. நெசவு நிலையங்களில் வேலை செய்யும் கன்னிப் பெண்கள் பலர், இறங்கி நிற்கும் பஸ் நடாத்துநரை முற்றுகை இடுகின்றனர்.

"வாசிற்றிப் பிள்ளைகளெல்லாம் ஏறி முன்னுக்குப் போங்கோ பார்ப்பம்" - அவர்களுக்கு டிக்கட்டைக் கிழித்துக் கொடுத்து, ஏதோ 'நக்கல் அடிக்கும்' தனித்துவத்தோடு கூறுகின்றார் நடாத்துநர்.

அந்த இளம் உள்ளங்களில் அவர் 'குத்தல்' உறைத்திருக்க வேண்டும். அவர்கள் சிலரின் முகங்கள் திடீரென நிறம் மாறி. தங்கள் நிலைமையை உணர்ந்து பழைய நிலைக்குத் திரும்பி விடுகின்றன.

"வாசிற்றிப் பெட்டைகளுக்கு மட்டுந்தானாக்கும் பஸ்...... அவங்க வாசிற்றிக்குப்போய் வந்ததும் வீட்டுக்குப் பாரமாகத்தான் இருப்பாங்க.... நாங்க வீட்டுப் பாரத்தையே குறைக்கும் பணியில்தானே இறங்கியிருக்கின்றோம்... அவங்க படிக்கிறதும் பிழைக்கத்தான். நாங்க இந்த பஸ் படி ஏறுவதும் பிழைக்கத்தான்... அதுக்குள்ள இவருக்கு நாங்க ஏதோ குறைவெண்ட எண்ணம்...." அந்தக் கன்னிப் பெண்களில் துணிச்சலான ஒருத்தியின் வாய் சற்றுப் பலமாகவும் வேகமாகவும் அசைந்தது.

திடீரெனச் சாரதி பிடித்த 'பிறேக்கில்' அவள் கையிலிருந்த அந்தச் சிறு பொட்டலம் பிடி தளர்ந்து விட்டது. தவறி விழுந்து விட்டது அது.

அதிலிருந்து இரண்டு ரொட்டித்துண்டுகள் பஸ்ஸுக்குள் உருண்டோடுகின்றன. காலையிலிருந்து மாலை வரை அந்தக் கன்னியின் வயிற்றைக் காப்பாற்றக் கையில் கொண்டு வந்ததும் அவளைக் கைவிட்டு விட்டது.

அதைப்பார்த்த பலர் பகிரங்கமாகச் சிரித்தார்கள். சிலர் ரகசியமாகச் சிரித்தார்கள். சிலர் பரிதாபப்பட்டார்கள். பரிதாபமாக நின்றாள் அவள்.

சாரதி அவருடைய கண்ணாடிக்குள் அவளைப் பார்த்துப் பெரிதாகப் பல்லைக் காட்டுகின்றார். அதற்குச் 'சிக்னல்' கொடுப்பதுபோல் நடாத்துநரும் சிரிக்கின்றார்.

அவசியமில்லாமல், அந்த அவசர 'பிறேக்'கின் காரணம் எனக்கு அப்போது தான் புரிந்தது. கன்னியவள் கண்டக்டரைக் கண்டித்துக் கதைத்தது, சாரதியின் காதில் விழுந்ததால் ஏற்பட்ட விளைவுதான் அது.

அந்தக் கன்னிப்பெண் கூறியதில் என்ன தவறு? அதைச் செவிமடுத்த சாரதி, சாதித்ததை நினைக்க எனக்கு ஆத்திரம்

எழுகின்றது. காந்தியவாதியான நான் கடவுளின் கையில் எனது ஆத்திரத்தைப் பாரம் கொடுத்துவிட்டு பொறுமையோடிருக்கின்றேன்.

பஸ் நிற்கின்றது. 'வாசிற்றி ஆக்களெல்லாம் இறங்குங்கோ....!' நடாத்துநரின் குரல் ஒலிக்கின்றது. அந்தக் கன்னிகள் தங்கள் குரல்களை ஒடுக்கிக்கொண்டே இறங்குகின்றார்கள். 'நாளைக்கும் இதே பஸ்ஸில் பிரயாணம் செய்ய வேண்டிய நிலை ஏற்படக்கூடாது....' என்று இறைவனை இறைஞ்சுகின்றார்களா அல்லது "நாளைக்கும் இதே பஸ்ஸில்தானே பிரயாணஞ் செய்ய வேண்டும்...' என்று நினைத்துச் சலித்துக் கொண்டார்களா தெரியாது.

பஸ் அசையத் தொடங்கி விட்டது. சாதாரண தரிப்புமல்லாத அந்த இடத்தில் தானாக நிற்கின்றது.

கறுப்புக்கண்ணாடி, கவர்ச்சியான உடை. மிதிபலகையில் ஏறும்போது உடையை விட இடையே பெரிதாகத் தெரிகின்றது. சுமாரான அழகு - அதற்குச் சுவைசேர்ப்பதுபோல், சுருண்டு நீண்ட கூந்தலை கழுத்தைக் காட்டி, கட்டியிருக்கும் விதமும் கலாதியாகவே இருக்கின்றது.

"தம்பி, டிக்கட்டைக் கொடுத்து பிள்ளையை முன்னுக்கு அனுப்பு..." சாரதியின் குரலில் தவிப்புத் தெரிகின்றது. அது சலுகையாக, சருகைச் சேலைபோல் சரசரக்கின்றது.

சாரதியின் அவசரம் நடாத்துநருக்குத் தெரிந்தும் ஒரேயொரு டிக்கட் கிழிக்க, அவருக்கும் அதிகளவு அவகாசம் தேவைப்-படுகின்றது.

சாரதியின் பொறுமையை நடாத்துநர் பரிசோதிக்க பஸ் பிரயாணத்தைத் தொடர்கின்றது.

'பற்றறி'ப் பெட்டியில் தனக்குப் பக்கவாட்டில் அவளை அமரவைக்க அவர் அசாத்திய கவனம் எடுத்தார். அதுவரை அவர்

பார்வை பாதையில் பதியாமல், பாவையவளைத் திரும்பிப்-பார்ப்பதிலேயே அடிக்கடி பதிந்தது.

பஸ் நிற்கின்றது. அதுவும் பஸ் தரிப்பிடம் அல்ல. 'பற்றறி'ப் பெட்டியில் பள்ளி கொண்டிருந்தவள், சாரதியிடம் பல்லைக்காட்டாமல் பக்குவமாகச் சிரித்து விட்டு இறங்கிச் சென்று கொண்டிருந்தாள்.

அந்தச் சிரிப்பு, அந்தச் சாரதிக்குத் தற்காலிகச் சிறைபோலும்! அவள் அந்தப் பாடசாலைக் கேற்றைத் திறக்க... சாரதிக்கும் சிறைக்கதவு திறக்க.... திடுக்கிட்டு பஸ்ஸைச் செலுத்துகின்றார்.

“ஏதோ ஸ்ரூடியோவிற்குப் போகப்போகின்றாள்” என்ற எனது எண்ணத்திற்கு இடி விழ, அவள் ஸ்கூலுக்குள் நுழைகின்றாள். “கலைமான் போல் கண்ணியமாகக் கலைக்கூடம் சென்று கற்றுக்கொடுக்க வேண்டியவர்கள் காட்டுகின்ற கோலமா இது?....” என்று எனக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த வயதான ஒருவரின் குரல்கேட்டு அவரை நிமிர்ந்து பார்க்கின்றேன்.

நல்லவேளை அவர்குரல் சாரதியின் செவிப்பறையைத் தாக்கவில்லை. தாக்கியிருந்தால் அந்த வயோதிபர், பஸ்ஸுக்குளேயே 'தடார்' என அஷ்டாங்க நமஸ்காரம் செய்திருப்பார். எழுந்து அவருக்கு இடத்தைக் கொடுக்கின்றேன்.

“அடுத்த தரிப்பில் இறங்குறன் தம்பி. உபகாரம்....”- அவர் கூறிவிட்டு மணிக்கயிற்றை இழுக்கின்றார். வேகத்தைக் கூட்டி பிறேக்கைப் போடுவதில் அந்தச் சாரதிக்கு ஆர்வம் அதிகம். பஸ் குலுங்கி நிற்கின்றது. கூட்டம் சற்று அதிகமாகவே பஸ்ஸுக்காக காத்திருக்கின்றது.

அந்த ஆச்சி ஐம்பதுக்கு குறையாமல் இருக்கும் பஸ்ஸின் முன் வாசலால் வெற்றிலைப் பெட்டியுடன் நுழைகின்றான்.

“ஆச்சி.... பின்னால....”- சாரதியின் குரலில் கடுகடுப்பு.

"பெட்டியை வெச்சுத்துப்போறன் தம்பி...." ஆச்சி - பெட்டியைக் கையிலிருந்து இறக்கியபடி கூறுகின்றாள்.

"ஆச்சி பெட்டியைத் தூக்கித்துப் பின்னால் போய் ஏறு..." ஆத்திரமும், அதிகாரமும் சாரதியின் குரலை அலங்கரிக்கின்றன.

ஆச்சி பரிதாபமாகப் பெட்டியை இழுத்துத் தூக்கிப் படிகளால் பக்குவமாக இறங்கி பின் வாசலை அடைகின்றாள்.

நடாத்துநர் அவளை நச்சரிக்கின்றார்: "முன்னால பெட்டியை வெச்சுத்து வா ஆச்சி" அவள் மீண்டும் முன்னால் வருகிறாள்"

"பெட்டியை வெய்யாதே..... பின்னால போ...." - விசர்நாயை விரட்டுவதுபோல் வார்த்தைகளால் அவளை விரட்டுகின்றான் சாரதி.

'பற்றறி', பெட்டியின் மேல் வெற்றிலைப்பெட்டியை வைத்து விட்டாள் ஆச்சி. 'அவள் இருந்த இடத்தில் இந்த அசிங்கத்தை வைக்கின்றாயா?' என்பதுபோல் ஆத்திரத்துடன் அவளைப் பார்த்தார் சாரதி.

"கோபிக்காத தம்பி.... பிந்திப்போனா இதை வித்துக்க ஏலா.... எனக்கு வெயிலுக்குள்ள அலைஞ்சி திரியவும் ஏலா மகன்.... இதை வித்துத்தான் தம்பி நானும் எண்ட குமரும் கஞ்சி குடிக்கிற.... உனக்குப் புண்ணியம் கிடைக்கும்... ராசா... பின்னால போய் டிக்கட்டை எடுத்துத்து வாறன் தம்பி...." ஆச்சி கெஞ்சியவாறே பின்னால் டிக்கட் எடுக்கச் செல்லும் அவசரத்தோடு அவதானமாக இறங்கினாள்.

சாரதி தனது ஆசனத்தில் இருந்து ஆத்திரத்துடன் எழுந்தார். அந்த வெற்றிலைப் பெட்டியை அலாக்காகத் தூக்கி அந்த மிதிபலகையில் வைத்துக் காலால் உதைத்து விடுகின்றார். நிலத்தில் சிதறிப் பரவியது வெற்றிலைப் பெட்டி.

சித்திரவதைப்படுத்தப்பட்ட நெஞ்சோடு அதைப்

பரிதாபமாகப் பார்த்தாள் ஆச்சி. "சீதேவியைச் சிதைச்சிட்டுப் போறையே தம்பி..." ஆச்சி முணுமுணுக்கின்றாள். பஸ் அசைகின்றது.

பஸ் அசையத் தொடங்கி இரண்டு செக்கன்டும் இருக்காது. "அம்மா" என்று அலறினார் சாரதி. பஸ் தடுமாறி தெய்வாதீனமாகத் தடம் புரளாமல் நிற்கின்றது. அந்த கொதிநீரால் அவர் முகம் அபிஷேகம் செய்யப்பட, மரண அவஸ்தைப்பட்டுத் துடித்துக் கொண்டிருந்தார் சாரதி. 'றேடியேற்றரின்' மூடி பறந்து கொதிநீர் பாய்ந்து கொண்டிருந்தது.

எல்லோரும் பஸ்ஸை விட்டுப் பாய்ந்து இறங்குகின்றனர். அத்தனைபேரும் தங்கள் கைக்கடிகாரங்களில் கண்ணை வைத்து தெருவைக் கண்காணிக்கின்றனர். அடுத்த பஸ்ஸின் வருகையை எதிர்நோக்கி, காரியாலயத்திற்கு தாமதமாகிவிடுவோமோ என்ற கவலை அவர்களுக்கு.

சாரதியை நானும் நடாத்துநரும் - எங்களையும் கொதிநீர் வரவேற்க சேர்ந்து தூக்கி காற்றுப்பட வீதியருகே அவரைக் கிடத்துகின்றோம். அவர் வேதனையால் துடிக்கின்றார்.

வேடிக்கை பார்க்கவென்றே கூட்டம் கூடி விட்டது. அந்தக் கூட்டத்தில் நுழைந்தவாறே 'வெற்றிலைப் பெட்டி' ஆச்சி சாரதியை நெருங்கினாள். அலறியவாறே அவனை வாரியணைத்துத் தனது மடியில் கிடத்தி, அவனது முகத்தைத் தனது சேலைத் தலைப்பால் ஒற்றி விடுகின்றாள் அவள் முகத்தில்தான் எத்தனை வாட்டம் என்ன கருணை.....?

(யாவும் கற்பனை)

# ஒரு டாக்டர் நோயாளியாகிறார்!

அந்தப் பின்தங்கிய கிராமத்திற்கு அவளுக்கு மாற்றம் கிடைத்தபோது, அவள் அதை மனப்பூர்வமாக விரும்பவில்லைதான். அரைமனதோடு அந்தக் கிராமத்தில் காலடி வைத்த அவளை, அந்தக் கிராமத்தின் இயற்கைச் சூழலும், அமைதியும், அந்த அப்பாவி மக்களின் அன்பும், ஆதரவும், இன்று அடிமைப்படுத்தி விட்டன. அந்தக் கிராமத்தையோ, கிராமத்து மக்களையோ, அவளால் இனிமேல் பிரியவே முடியாது. பிரியும் எண்ணமும் இதுவரை அவளுக்கு ஏற்படவில்லை.

கடமை முடிந்து விடுதிக்கு வந்தபோது, அவளை எதிர்பார்த்தவண்ணம் கிராமத்தவர் ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

"அம்மா; நீங்க மட்டும் இல்லாட்டி.... என்ட பிள்ளையை உசிரோட பார்த்திருக்கமாட்டன்," கைகூப்பிய வண்ணம் அவர் கூறினார்.

"கடவுளின் ஆசீர்வாதத்தோடு கடமையைச் செய்தேன். உங்க குழந்தையின் பக்கம் கடவுளின் கருணையும் - அதனால குழந்தை பிழைத்தது."

"நீங்க, என்ன சொன்னாலும், சரி அம்மா. உங்க கெட்டித்தனத்தாலதான் என்ட பிள்ளை புழைச்சது."

"அப்படியே வைத்துக் கொள்ளுங்களேன்" அவரைத் திருப்பதிப்படுத்த அவ்வாறு கூறினான்.

அவர் தனது சட்டைப் பையில் இருந்த 'என்வலப்' ஒன்றை அவளிடம் நீட்டியவாறே, "அம்மா, எங்கட இந்தச் சின்ன சந்தோஷத்தை ஏத்துக்கவேணும்" என்று கூறினார். அவள் அந்த உறையை வாங்கிப் பிரித்துப் பார்த்தாள் - நூறு ரூபா நோட்டொன்று உள்ளே இருந்தது. "உங்கட சந்தோஷம் இவ்வளவுதானா?" ஏளனமாகக் கேட்டாள்.

"எங்களால, முடிஞ்சது இவ்வளவுதானம்மா."

"நான், ஆயிரத்துக் குறையக் கையை நீட்டுவதில்லை...."

பிள்ளையின்ர சங்கிலியை வித்துப்போட்டு சொச்சத்த வாங்கித் தாரனம்மா"

அவரின் அப்பாவித்தனத்தை நினைத்து, தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள். "இப்படியான சந்தோஷங்கள் சட்டப்படியும் குற்றமானவைகள்; இதைக் கொண்டுபோய்க் குழந்தைக்கு நல்ல சாப்பாடு வாங்கிக் கொடுங்கள்" அந்த உறையை அவரிடம் நீட்டினாள்.

"நாங்க, ஆசையோடு கொண்டு வந்த சந்தோஷத்தை அம்மா, ஏத்துக்கலையே?" அவர் சலிப்புடன் கூறினார்.

"உயிர்களைக் காப்பாற்றுவது தான் என் கடமை. அதில் நான் பெறும் வெற்றிதான் என் சந்தோஷம்; அந்தச் சந்தோஷத்துக்கு மேலே எதையும் எதிர்பார்க்கிறதுமில்லை; ஏற்றுக்கொள்வதுமில்லை."

அவர் மீண்டும் அவளை ஒரு தடவை கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு, உறையுடன் விடைபெறுகின்றார்.

இப்படி அவள் திருப்பி அனுப்பிய உறைகள், தயிர்ப்பானைகள், வாழைக்குலைகள், அரிசி மூடைகள் இன்னும் எத்தனையோ. தனக்கு இவ்வாறு வரும் 'சந்தோஷங்களை'த் திருப்பி அனுப்புவதால் மட்டும் அந்தக் கிராமத்து மக்கள் ஒரு சிலரின் தற்காலிக மனக் கசப்புக்கு ஆளாகியிருக்கின்றாள். அது ஒரு குடும்பத்துள் எழும் சண்டையைப் போன்றது.

இரவு முழுக்க மூன்று மணித்தியாலங்கள் தொடர்ந்து கண் விழித்துக் கடமை புரிந்த களைப்பு அவள் முகத்தில் நன்றாகத் தெரிந்தது. ஓர் உயிரைக் காப்பாற்றிய திருப்தியில் அவள் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அந்தக் குழந்தையின் தந்தையைச் சமாதானப்படுத்திவிட்டு, கட்டிலில் வீழ்ந்தவள் மதியபோசனத்தையும் மறந்து நித்திரை மயக்கத்திலேயே இருந்தாள். அந்தத் திறந்த ஜன்னல் ஊடாக ஊடுருவி வந்த குளிர்காற்று அவள் உடலுக்கு இதமாக இருந்தது.

அந்த அறையில் அவளைத் தவிர வேறு யாருமே இல்லை. அவள் விழித்தவுடன் தரிசிப்பதற்கென்றே ஓர் அழகிய ஆடவனின் படம் ஒன்று மட்டும் அவள் நித்திரை செய்யும் அழகை நிதானமாக நின்று கவனித்துக் கொண்டிருந்தது. அவளது அழகை அந்தரங்கமாக அவதானித்துக் கொண்டிருந்த அந்தப் புகைப்படத்தில்கூட ஒரு புன்னகை இழையோடிய வண்ணம் இருந்தது. அங்கு நிலவிய நிசப்தத்தை நிர்மூலமாக்கிக் கொண்டு 'தொலைபேசி' அலறியது.

திடுக்கிட்டு எழுந்தவள் 'ரிசீவரை'க் காதருகே வைத்தாள். "உடனே வருகிறேன்" என்றவள் 'ரிசீவரை' வைத்து விட்டு அவசரமாகக் குளியலறைக்குச் சென்றாள். களைப்புத் தீரக் குளிக்க வேண்டுமென்ற ஆசை அவளுக்கு இருந்தும் அவகாசம் இல்லாததால் அவசர அவசரமாக முகத்தைக் கழுவினாள்.

மேலோட்டமாக அலங்காரம் செய்து விட்டுப் புறப்படுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள். அவள் புறப்படுவதற்கு முன்

வழக்கமாகச் செய்வது போல், அந்த ஆடவனின் புகைப்படத்திற்கு ஓர் "இச்" கொடுத்தாள். அதில் அவளுக்கு ஒரு திருப்தி -அலாதியான ஆனந்தம். அவள் அந்தப் புகைப்படத்தைக் கீழே வைக்கவும், மோட்டார் சைக்கிள் ஒன்று உறுமியவாறே, அறைக்கு அருகே வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

அந்த மோட்டார் சைக்கிளின் ஓசை அவளது ஆத்மாவின் இராகங்கள் போன்றது. அந்த ஓசை கேட்கும்போதெல்லாம்.... அவளுக்கு ஒரே உற்சாகம். எனினும் இன்று அவளுக்கு உற்சாகம் உருவாகியபோதும், அதில் உறுதியிருக்கவில்லை.

கதவில் நாகரிகமாகத் தட்டப்படும் சத்தத்தைக் கேட்டு "ஸ்தெதஸ்கோப்புடன்" கதவைத்திறந்தாள். "பிரதாப், சீரியஸ் கேஸ் ஒன்று வந்திருக்காம்; அவசரமாகப் போகவேணும்" - அவள் அலறினாள்.

அவளையே விழுங்கி விடுபவன் போல் பார்த்த பிரதாப் மயங்கி விழுந்தான்.

"ஐயோ, பிரதாப்"

அவள் கத்திக் கொண்டே அவனைத் தாங்கிப் பிடித்து, தரையில் கிடத்தினாள். அவசரமாகத் தண்ணீர் எடுத்து வந்து முகத்தில் தெளித்தாள். மூன்று நிமிடங்களுக்கு மேலாகியும் பிரதாப் கண்விழிக்கவே இல்லை.

நாடியைப் பிடித்துப் பார்த்தாள். நோமல். "சுதா, என் நடிப்பு எப்படி? நான் வாறநேரம் எல்லாம் உனக்கு 'அவசரகேஸ்' ஐந்து நிமிடம் கூட உன்னோடு இருக்க அவகாசம் கிடைக்கிறதில்ல. இன்றைக்கு திடீரென எனக்கு இந்த ஐடியா வந்தது" கண்களை விழித்தவாறே கூறினான்.

"என்னைப் போகவிடுங்க பிரதாப்". செல்லமாகக் கோபித்தவாறே அவன் பிடியிலிருந்து விடுபட முயன்றாள்.

"என்னை விட, உங்களுடைய 'ஸ்தெதஸ்கோப்' எவ்வளவோ புண்ணியம் செய்திருக்கு.... இல்லையா... சுதா?" அவள், அவன் பிடியிலிருந்து விடுபட்டாள். அவனே அவளை மோட்டார் சைக்கிளில் அந்த ஆஸ்பத்திரி வரை கொண்டு விட்டுவிட்டுச் சென்றான்.

புதிதாக அனுமதிக்கப்பட்டிருந்த அந்தக் குழந்தை மரண தேவனுடன் போராடிக்கொண்டிருந்தது. "எத்தனை மணிக்கு. இந்தக் கேசை அட்மிற் பண்ணுனீங்க?" கைக்கடிகாரத்தைக் கண்கள் நோக்க, அந்தக் குழந்தையின் நாடித்துடிப்பைப் பரிசோதித்தவாறே பக்கத்தில் நின்ற நேர்சிடம் கேட்டாள்.

"ஐந்து மணிக்கு, டாக்டர்." நேரம் ஐந்து பதினைந்து என்பதைக் காட்டிக் கொண்டிருந்தது. "அழைப்புக் கிடைத்தவுடன் வந்திருந்தால் இந்தக் குழந்தையை நிச்சயமாகக் காப்பாற்றியிருக்க முடியும்." தனக்குள் நொந்தவாறே அந்த ஊசி மருந்தைக் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டே அந்தக் குழந்தையின் உடலினுள் செலுத்தினாள். அந்த ஊசியைக் குழந்தையின் உடலில் இருந்து எடுப்பதற்குள்... அதன் உயிர் பிரிந்து விட்டது.

அந்தத் தாய் கதறுவதைக் கண்டு அந்தத் தாய்க்கு ஆறுதல் வழங்குவதையும் மறந்து, சுதாவும் சேர்ந்து அழுதாள்.

"கதிர்காமக்கந்தன், மடுமாதா; எல்லாம் நேர்த்திக்கடன் வெச்சுப் பெத்த ஒண்டே ஒண்ட இழந்துட்டனே... கடவுளே....?" அத்தாயின் அலறல் ஆஸ்பத்திரி முழுக்க எதிரொலிக்கின்றது.

கடமை அறைக்குள் சென்ற சுதா கண்ணீருடன் சங்கமமாகிக் கொண்டிருந்தாள். "நேற்று ஒரு உயிரைக் காப்பாற்றினாய்... இன்று ஒரு உயிரைக் கொலை செய்து விட்டாய். நீ டாக்டரல்ல. ஒரு கொலைகாரி. பிரதாப்பின் சந்திப்பைத் தவிர்த்து அவசரமாக உடனே வந்திருந்தால், அந்தக் குழந்தையின் உயிரை நிச்சயமாகக் காப்பாற்றி இருப்பாய்..."

"உன்னுடைய காதல்... புனிதமான உன் கடமைக்குக் களங்கம் கற்பித்து விட்டது; இந்தக் குழந்தையின் மரணத்திற்கு உன் காதலன் தான் காரணம். உன் கடமை நேரத்தைத் தாமதப்படுத்திய உன் காதலன் இன்னும் எத்தனை உயிர்களுக்குக் காலனாக இருக்கப் போகின்றானோ? இதற்குப் பிராயசித்தமாக, உனது காதலைத் துறந்து விடு; அந்தத் தாயுள்ளம் கதறுவதைப் பார்த்தாயா? இப்படிக் கதறும் தாயுள்ளங்களுக்கு காரணமாக உன் காதல் இருக்கத்தான் வேண்டுமா? இனிமேலாவது கடமையில் கண்டிப்பாக இருந்துகொள்." அவளது மனச்சாட்சி அவளுக்கு ஆணையிட்டுச் சென்றுவிட்டது.

இரண்டு நாட்களாக பிரதாப் அவளைச் சந்திக்க வரவேயில்லை.

அன்று மாலை அவள் ஓய்வாகவே இருந்தாள். மோட்டார் சைக்கிளின் ஓசையில் மோகனராகம் இசைப்பவள் - அந்த ஓசை இன்று எதையோ அமுக்குவதாக உணர்ந்தாள்.

"உங்களுக்குப் பிரியமான மஞ்சள் றோஸ். என் வீட்டுத் தோட்டத்தில் மலர்ந்த முதலாவது மலர்; சூடிக்கொள்ளுங்கள்" மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கியவாறே அவளிடம் அந்த மலரை நீட்டினான் பிரதாப்.

"வேண்டாம். இந்த மலரைப் பறிக்காமல் விட்டிருந்தால், இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்கு இதே கவர்ச்சியோடு இருந்திருக்கும் இல்லையா? நான் மலரை மரத்தோடு வைத்து ரசிக்க விரும்புகின்றேனே தவிர, அதைப் பறித்துப் பாழ்படுத்த எப்பவும் விரும்புவதேயில்லை."

"ஏன் சுதா, ஒரு மாதியாப் பேசுறீங்க. இரண்டு மூன்று நாட்களின் பின் இயற்கையாகவே வாடி உதிர்ந்து போகின்ற மலர், உங்க கூந்தலில் ஒரே ஒருநாள் இருந்த பெருமையோடு வாடிப் போகட்டுமே."

"பிரதாப்! மலரென்று இருந்தால் அது என்றோ ஒருநாள் வாடிப்போவது இயற்கைதானே. அதே போல்தான் நமக்குள் மலர்ந்த காதலும்."

பிரதாப் அதிர்ச்சியடைந்தவனாக, "சுதா" என்று கத்தினான். "உங்களுக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது?".

சந்தேகத்துடன் கேட்டான்.

"இல்ல பிரதாப், இல்ல. எனக்குப் பைத்தியமே இல்லை எனக்கு ஒரு பாக்கியம் கிடைக்கப் போகின்றது. எனக்கும், "சேர்ஜன் நவத்திற்கும்" அடுத்த மாதம் "திருமணம்".

"நீங்களாக எடுத்த முடிவா இது?" அவன் அதிருப்தி அடைந்தவனாகக் கேட்டான்.

"இல்ல, எனது பெற்றோரின் கண்டிப்பான உத்தரவு."

"இந்த உத்தரவை, மீறும் தைரியம் உங்களுக்கு இருக்கா?" அவன் நிதானமாகக் கேட்டான்.

"எனக்குக் கிடைக்கப்போகும் இந்த உயர்ந்த வாழ்க்கைக்கு உங்களால் உற்சாகம் காட்ட முடியாதா?"

"உங்களுக்கு எனது ஆரம்ப வாழ்த்துக்கள்." அவன் கூறிக் கொண்டே மோட்டார் சைக்கிளை 'ஸ்ராட்' பண்ணினான். அந்த மஞ்சள் றோஸை மோட்டார் சைக்கிளின் ரயர்கள் சிதைத்து விட்டு மின்னல் வேகத்தில் செல்கின்றன.

அறைக்குள் சென்ற சுதா கட்டிலில் கண்ணீரில் மிதந்தாள். பிரதாபின் அந்தப்படம் அவளையே அவதானித்துக் கொண்டிருப்பதை ஆசையுடன் பார்த்தாள். அதை வாஞ்சையோடு எடுத்துத் தனது மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டாள். அந்த அணைப்பில் ஏதோ சுகம் தெரிந்தது அவளுக்கு. சிறிது தூங்கினாள்.

"பிரதாப், என்னைச் சித்திரவதை செய்யுறீங்களே." நித்திரையில் இருந்தவள் புலம்பியவாறே திடீரென எழுந்தாள். "வாழ்த்துத் தெரிவித்து விட்டுப்போன உங்களை என்னிடமிருந்து கடமை பிரிக்கலாம்; ஆனா நமது தூய காதலைக் காலம் கூடப் பிரிக்காது. நான் கற்பனை பண்ணிக்கூறிய அந்தக் கல்யாணத்தை நீங்க நம்பிட்டீங்களே பிரதாப். இல்ல. நான் உங்களை நம்பவைத்து விட்டேனே. நான் ஒரு பாவி பிரதாப்; பாவி...." ஆற்றாமையுடன் எழுந்து சென்று தண்ணீர் குடித்து விட்டு மீண்டும் நித்திரையில் சங்கமமாக முயன்று கொண்டிருந்தாள், தொலைபேசி அலறியது.

"இதோ வருகிறேன்" ரிசீவரை வைத்துவிட்டு மிகவும் துரிதமாகப் புறப்பட்டு விரைந்து சென்றாள்.

தலைபிளந்த நிலையில் உணர்விழந்து, உடல் முழுக்க இரத்தம் தோய, அங்கு அனுமதிக்கப்பட்டிருந்தான் பிரதாப்.

"பிரதாப்...." அவள் அந்த ஆஸ்பத்திரியே அதிரும்படி கத்தினாள். பிரதாப் ஒரே ஒரு தடவை அவளை விழித்துப் பார்த்துவிட்டுக் கண்களை நிரந்தரமாகவே மூடிக்கொண்டான்.

"பிரதாப்" நான் ஒரு வாரத்திலேயே இரண்டு கொலைகளைச் செய்து விட்டேன். நீங்க என்னை மறந்து மகிழ்ச்சியான வாழ்க்கை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று, மனம் திறந்து உங்களுக்காகவே ஒரு பொய்யை உருவாக்கிக் கூறினேன். அந்தப் பொய் உங்கள் உயிருக்கே உலை வைத்து விட்டதே.... வார்த்தைகள் மௌனமாகி அவள் உள்ளம் உருகியது.

"ஆரம்ப வாழ்த்துக்கூறி விட்டு, அசுர வேகத்தில் சென்ற நீங்க, மனக்குழப்பத்தால் விபத்தில் சிக்கினீர்களோ. இல்ல வேண்டுமென்றே தற்கொலை செய்து கொண்டீர்களோ?"

"நான், ஒரு பாவி. பிரதாப் எனக்கு மன்னிப்பே கிடையாது" பிரதாப், நீங்க உலகத்தில எந்த மூலையில் வாழ்ந்தாலும் உங்க நினைவோட என்னால வாழ முடியும். நீங்க இல்லாத உலகத்தில

இனி ஒரு கணமும் என்னால் வாழமுடியாது" ஏதோ முடிவிற்கு வந்தவளாக, தனது விடுதிக்கு விரைந்து சென்றாள் சுதா. கதவைத் தாளிட்டுக் கொண்டாள். அந்த விஷ மாத்திரைகளைக் கையில் கொட்டி வைத்து கணநேரம் பார்த்தாள்.

"டாக்டர்! உயிரைக் காப்பாற்றுவதுதான் உங்க கடமை. உயிரைப் போக்குவதல்ல." அந்த விஷ மாத்திரைகள் அவளுக்கே அறிவுரை வழங்கின. "ஒரு டாக்டருக்குத் தன் உயிர்... பிற உயிர் என்ற பேதம் இருக்கக்கூடாது, எல்லா உயிரும் உயிரே. அதனால, உங்க உயிரைப் போக்கும் உரிமை உங்களுக்கு இல்லை." அந்த "ஸ்தெதஸ்கோப்" அவளைப் பார்த்துக் கூறியது. சிறிது நேரம் மௌனமாக நின்றாள்.

"நீ, இரண்டாவது கொலை செய்து விட்டாய்; இப்போது, மூன்றாவதற்கு முயல்கின்றாய். விதியை யாரால் வெல்ல முடியும்? அந்தக் குழந்தையின் மரணமும், பிரதாபின் மரணமும், விதியின் விளையாட்டுக்கள். அதுக்கு நீ பொறுப்பாளி அல்ல. உனது அசிரத்தையால் ஏற்பட்ட மரணங்கள்தான் இவை என்று ஏற்றுக்கொண்டாலும், நீ இனிமேல் அவதானமாக நடந்து கொள்வதால் இன்னும் எத்தனையோ உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளலாம். இல்லையா...? கடமைக்காகக் காதலைத் துறந்தாய். காதலுக்காக உயிரைத்துறக்கப் போகின்றாயா? கடமைகள் உனக்காகக் காத்திருக்கின்றன." அவளது மனச்சாட்சி பல கோணங்களில் அவளுடன் போராடிக் கொண்டிருந்தது.

அந்த மாத்திரைகளை அப்படியே வைத்தாள். அவளுக்கு ஒரே குழப்பமாக இருந்தது. மீண்டும் ஆஸ்பத்திரிக்குச் சென்றாள். பிரதாபின் பிரேதத்தை அனுப்புவதற்கு வேண்டிய ஒழுங்குகள் அனைத்தையும் துரிதமாகச் செய்து விட்டு, விடுதிக்கு வந்தாள்.

"தொலைபேசி" அலறியது. "ஸ்தெதஸ்கோப்பை" கையில் எடுத்தாள், கதவைத்திறந்தாள். இருள் சூழ ஆரம்பித்துக் கொண்டிருந்தது.

"ஐயோ .... பிளீஸ்...., பிரதாப்...ப்.; டியூட்டிக்குப் போக விடுங்களேன். விடுங்க பிரதாப்; விடுங்க" அந்தத் தூணைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கத்தினாள். பின் ஏதோ முடிவுக்கு வந்தவளாக, ஆஸ்பத்திரியை நோக்கி ஓடினாள். இடையிடையே இடறி விழுந்ததில் அவள், அழகிய முகத்தில் சில கீறல்கள்.

"பிரதாபைப் பிடியுங்க. நான் என் கடமையைச் செய்யணும்" ஆஸ்பத்திரிக்குள்ளே கத்தியவாறே அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தாள் சுதா.

அந்த ஆஸ்பத்திரி ஊழியர்கள் அவளை அனுதாபத்துடன் ஆதரவாகப் பிடித்து வந்து, ஆறுதல் வழங்கினார்கள்.

அவர்களின் ஆறுதலை அலட்சியம் செய்பவள் போல் கலகலவென்று சிரித்தாள்.

"பிரதாப், நான் டியூட்டி செய்யணும். அந்த மேசையை "ஸ்தெதஸ்கோப்பால்" பரிசோதித்துக் கொண்டிருந்தாள்.

அந்த "சேலைன் போத்தலை" எடுத்து வந்து அந்த மேசைக்குப் பாய்ச்சுவதற்கு முயன்றுகொண்டிருந்தாள். அங்கிருந்த எல்லோரது கண்களிலும் கண்ணீர் குடிகொண்டிருந்தது.

அந்தக் காரில் அவளை ஏற்றுகிறார்கள். கார் "மனநோயாளர் மருத்துவமனையை" நோக்கி விரைகின்றது.

(யாவும் கற்பனை)

# அவர்கள் சிரிக்கின்றார்கள்

மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் தனது தந்தையுடன் நின்றுகொண்டிருந்த ரமா மிகவும் பயந்தவளாக அங்கும், இங்கும் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தாள்.

கொழும்பு செல்வதற்கான மெயில் வண்டி நிம்மதியாக மேடையில் வந்து நின்றது. "கோணர்சீற்" பிடிக்கும் அவசரத்தில், மனிதத் தன்மையையே மறந்தவர்களாக எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு ஏறுகின்றார்கள்.

ரமாவும் தன்னால் முயன்றவரை முயற்சித்தும், விரைவாக ஏற அவளால் முடியவில்லை. ஒருவாறாக ஏறி "கோணர் சீற்"றுக்காக நோட்டமிட்டாள்.

இப்படியே நின்றால் இருப்பதற்கே இடமில்லாது போய்விடும் என்ற முடிவுக்கு வந்தவளாக, அந்த சீற்றில் அரை மனதுடன் அமர்ந்து கொண்டாள்.

"மகள், கழுத்துச் சங்கிலி கவனம், நித்திரை தூங்காமல் கவனமாக இருக்க வேண்டும்." அவர் சொல்லி முடிப்பதற்கென்றே அவகாசம் கொடுத்த அந்த ரயில் ஆரவாரமாக அசையத் தொடங்கியது.

ரமா தந்தைக்குக் கையசைத்து விடை கொடுத்துவிட்டு அந்தச் சீற்றில் அமர்ந்து கொண்டாள்.

"மிஸ்! இந்த சீற்றில் அமர்ந்து கொள்ளுங்கள். வசதியாக இருக்கும்." அறிமுகமில்லாத அந்த ஆடவன் அடக்கமாக அவளைப் பார்த்துக் கூறினான்.

அவளால் அதற்கு மறுப்புத் தெரிவிக்க முடியவில்லை. "தாங்ஸ்" என்று சொல்லியவாறே அந்த "கோணர்சீற்"றை ஆக்கிரமித்துக் கொண்டாள்.

அந்த ஆடவன் அவளிருந்த சீற்றில் அமர்ந்து கொண்டான். ரயில் வாழைச்சேனை காகித ஆலையைக் கம்பீரமாகக் கடந்து சென்று கொண்டிருந்தது.

அவள் சாப்பாட்டுப் பார்சலை எடுத்தாள். அவன் அந்தக் காகித ஆலைப் பகுதியைக் கவனமாகப் பார்த்தவண்ணம் இருந்தான்.

சீற் தந்ததற்காக அவனையும் சாப்பிட அழைக்க வேண்டும்போல் இருந்தது அவளுக்கு.

"நீங்க சாப்பிடவில்லையா?" அவள் அவனைப் பார்த்துக் கேட்டாள்.

"உணவுச் சாலையில் சாப்பிடலாம் என்றிருக்கின்றேன்."

"நான் அதிகமாகவே சாப்பாடு கொண்டு வந்திருக்கின்றேன். உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால்... நீங்களும் சாப்பிடலாம்."

"உங்கள் சாப்பாட்டுப் பார்சலில் நான் கைவைத்தால் உங்கள் வயிறு காலியாகவே இருக்கும்."

"சாப்பாட்டுப் போட்டியில் நானும் சளைத்தவளல்ல."

"சவால் விட்டால், நான் அதைச் சந்தித்து சமாளிக்காமல் போவதில்லை."

இருவரும் அப்பார்சலைக் காலி செய்து விட்டு கைகழுவிக் கொண்டனர்.

"நீங்கள் என்னோடு சாப்பிட வந்திருக்காவிட்டால் நான் இவ்வளவு சாப்பிட்டிருக்கமாட்டேன்."

"இதைவிட அதிகமாகச் சாப்பிட்டிருப்பீங்க, இல்லையா?"

அவர்களின் உரையாடலை ஊடறுத்துக் கொண்டு வந்தது "வடே வடே!" என்ற சத்தம்.

அவன் வடையை வாங்கி அவளிடம் நீட்டினான்.

"நோ... தாங்ஸ்.... எனக்கு வயிற்றில் இடமில்லை."

"மனமுண்டானால் இடமுண்டு" அவள் வடையொன்றை நாகரிகமாக எடுத்து, நைஸாகக் கடித்தாள்.

"வயிற்றில் இடமில்லை என்று சும்மாதானே மிஸ் சொன்னீங்க?"

அவள் முகம் நாணத்தால் சிவந்தது.

"எனக்கு நித்திரை வராது. நீங்க இனி நிம்மதியாகத் தூங்கலாம் மிஸ்."

"நீங்க எதுவரைக்கும் போறீங்க?"

"நான் பேராதனைக்குப் போகின்றேன்."

அவனுடைய பதிலைக் கேட்டுப் பேயறைந்தவள் போலானாள் ரமா.

"கம்பளையிலா இருக்கின்றீர்கள்?" அவள் ஒரு வித பதட்டத்துடன் கேட்டாள்.

"நான் விவசாய இலாகாவில் பணிபுரிகின்றேன்."

"நீங்க பேராதனை என்று சொன்னதும் நான் பயந்தே போய்விட்டேன். நீங்க பேராதனை வளாகச் சிரேட்ட மாணவனாக்கும் என்று."

"சிரேட்ட மாணவர்கள் என்ன பயங்கரவாதிகளா?"

"இல்லை.... பயங்கரமாக ராக்கிங் செய்வார்களாம்."

"அப்போ நீங்க பல்கலைக்கழகப் புதுமாணவியோ?"

பயம் நீங்கியவளாகச் சிரித்துக் கொண்டே "ஆமாம்" என்றாள்.

"நானும் இரண்டாம் வருட மாணவன்தான்."

அவள் இதயம் ரயிலிலும் வேகமாக இயங்கியது. முகம் பயத்தால் வியர்த்துக் கொட்டியது.

"ஆனால் தரக்குறைவான ராக்கிங்கை முழுமையாக வெறுப்பவனும், அதை எதிர்ப்பவனும்கூட"

அப்போதுதான் அவளுக்கு உயிர் வந்தது.

"நீங்க பொல்காவலை வரை நிம்மதியாகத் தூங்கலாம்."

ரயில் கல்லோயாவைக் கடந்து சென்று கொண்டிருந்தது. அவளைத் தூக்கம் அரவணைக்கத் தொடங்கியது. அவனை ஓரக்கண்ணால் ஒரு தடவை பார்த்தாள்.

முழுமையாக முகச்சவரம் செய்யப்பட்ட ஐஸ்கிறீம் போன்ற குளிர்மையான முகம். கண்களில் ஒரு கவர்ச்சி. கள்ளமற்ற சிரிப்பு. விசாலமான நெற்றியில் இஷ்டம்போல் விழுந்து விளையாடும் முடி.

அந்த முகத்தை மீண்டும் ஒரு தடவை பார்க்க எத்தனித்தாள்.

"என்ன மிஸ்! இன்னும் தூக்கம் வரவில்லையா?"

திருடன் கையும் மெய்யுமாகப் பிடிபட்டது போல் அவளது திருட்டுப் பார்வை அவளுக்கே சலனத்தை ஏற்படுத்தத் தொடங்கியது. அசடு வழியப் புன்னகைத்தவாறே கண்களை மூடினாள்.

"மிஸ் ரமா! எழுந்து நிற்கலாம்" நித்திரை என்ற போர்வையில் கண்களை மூடி முன்னாலிருந்த அந்த இரண்டாம் வருட மாணவனோடு கற்பனையில் சுகம் கண்டு கொண்டிருந்தவளை, அந்தக் கண்டிப்பான குரல் கலக்கியது.

சினத்துடன் கண்களைத் திறந்தாள். ஐந்து இளைஞர்கள் அவளைப் பார்த்தவாறே, வில்லன் பாணியில் நின்று கொண்டிருந்தனர்.

"நீங்கதானே மிஸ் ரமா?" ஒருவன் கேட்டான்.

தனக்கு முன்னாலிருந்த அந்த ஆடவனை அவள் அபயம் கோருவது போல் பார்த்தாள்.

"எழுந்து சீற்றுக்கு மேல் முழந்தாளில் நில்."

ஒருவன் ரமாவைப் பார்த்துக் கண்டிப்பான உத்தரவொன்றை விடுத்தான்.

"மரியாதையா இந்த இடத்தை விட்டு அகலப்போகின்றீர்களா? அல்லது..." பொறுமையாக இருந்த அந்த ஆடவன் அந்த இளைஞர்கள் மீது பொங்கி எழுந்தான்.

"என்ன மச்சான் சுரேஷ்! ராக்கிங் செய்வதில் புலியென்று பெயரெடுத்த நீ, இந்தப் பைங்கிளியைப் பார்த்ததும் பூனையாக மாறி விட்டாய்?" அந்த வாலிபர்களில் ஒருவன் கேட்டான்.

"கெட் அவுட் பிளீஸ்" சுரேஷ் கத்தினான்.

அவர்கள் சென்று விட்டார்கள். பொல்காவலையில் ரமாவின் பெட்டிகளையும் தானே தூக்கிக் கொண்டு சுரேஷ், ரமாவுடன்

இறங்கினான். இது சுரேஷ் மீது ரமாவுக்குப் பெருமதிப்பை ஏற்படுத்தியது.

பொல்காவலையில்கோப்பி குடித்தும் ரமாவிற்கு நடுக்கம் நீங்கவில்லை.

இராமநாதன் மண்டபத்தில் அவளைச் சேர்த்துவிட்டு, இரண்டாம் வருட மாணவிகளைக் கூப்பிட்டு ரமாவிற்கு ராக்கிங் செய்யக்கூடாது என்று உத்தரவிட்டான்.

"இரண்டாம் வருட மாணவிகளை நம்பிப் பழகவேண்டாம்." ரமாவிடம் இரகசியமாகக் கூறிவிட்டுச் சென்றான் சுரேஷ்.

ரமாவிற்கு எவ்வித இடைஞ்சல்களும் இருக்கவில்லை. ஆனால் ரமாவுடன் வந்த புதிய மாணவிகள் ஒருவராவது சிரித்த முகத்துடன் தென்படவில்லை. சிந்திய கண்ணீருடனே திரிந்தார்கள்.

ரயிலில் ஏனைய புதிய மாணவிகளுக்கு நடந்த ராக்கிங்கை அவர்களாகவே கூறியபோது ரமா உருகியே விட்டாள்.

எனினும், தான் மட்டும் தனித்துவமானவள் என்ற அகம்பாவத்துக்கு ஆளாகிக் கொண்டிருந்தாள் ரமா. மறுநாள் மாலை சுரேஷைக் கண்டதும் ரமாவிற்கு மகிழ்ச்சியாகவே இருந்தது.

உங்களுக்கு ஏதாவது கஷ்டங்கள் இருந்தனவா?" அவன் அக்கறையோடு கேட்டான்.

"உங்கள் உதவியால் எதுவித உபத்திரவமும் எனக்கு இதுவரை ஏற்படவில்லை.

"இனிமேலும் ஏற்படாது...." அவன் உறுதியாகக் கூறினான்.

"இன்றைக்கு நீங்கள் சற்றே ஒரு 'உவாக்' போய் வரலாம்." சுரேஷ் தொடர்ந்தான்.

நான் எந்தப் புதிய இடத்திற்குப் போனாலும் முதலாவது போவது கோயிலுக்கு. அதிலும் முருகன் கோயில் என்றால் எனக்கு அதில் ஒரு தனிப்பிரியம்."

"அப்போ குறிஞ்சிக் குமரன் ஆலயம் வரை போய் வரலாம்"

இருவரும் புறப்பட்டார்கள்.

"உங்களுக்குக் கடவுள் பக்தி உண்டா?" ரமா கேட்டாள்.

"நான் கடவுளை வெறும் கற்பனைப் பொருளாகக் கணிக்கவில்லை. காட்சிப் பொருளாகப் பார்த்து ரசிக்கவும் விரும்புவதில்லை. கடவுளைக் கடவுளாக நினைத்து வழிபடுபவன்."

"கடவுள் பக்தியைப் பற்றி உங்கள் கருத்து என்ன?" அவள் ஆர்வ மிகுதியோடு கேட்டாள்.

"பக்தி என்பது பரிசோதனைக்கு அப்பாற்பட்டதாக, பிறரின் பரிகசிப்பிற்கு உட்பட முடியாததாக இருக்க வேண்டும்."

"உங்கள் கொள்கைகளை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை."

புரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை இதயத்தில் இருக்கின்றதா?"

"ஆசை இருக்கின்றபடியால்தானே கேட்டேன்."

அவள் பதிலை ஆமோதிப்பது போல் அந்த ஆலயமணி அடித்துக் கொண்டிருந்தது.

முதற் கடமையாகக் குறிஞ்சிக் குமரனிடமே சென்றது ரமாவிற்கு ஆறுதலாகவும், நிம்மதியாகவும், ஆனந்தமாகவும் இருந்தது.

அடுத்த நாள் மாலை பேராதனைப் பூங்காவுக்கும் இருவரும் இணைந்தே சென்றனர்.

"இன்று முழுவதையும் சுற்றிப் பார்க்க முடியாது. முக்கியமானவற்றை மட்டும் பார்ப்போம்."

இது சுரேஷின் நிபந்தனை.

ஓக்கிட் அரங்கு அவர்களின் நேரத்தில் முக்கால் பகுதியை விழுங்கி விட்டது.

"உங்களுக்குப் பிடித்தமான மலர் எது?" சுரேஷ் கேட்டான்.

"குறிஞ்சி மலரைத்தான் பிடிக்கும். ஆனால் இதுவரை அதைப் பார்த்ததில்லை."

"பார்க்காத ஒரு மலரைச் சிறந்தது என்று முடிவு கட்டுவது முட்டாள்தனமாகத் தெரியவில்லையோ?"

சிறிது மௌனம் சாதித்த ரமா சாதுரியமாகக் கேட்டாள்: "உங்களுக்கு யேசுநாதரைப் பிடிக்குமா?"

"நிச்சயமாகப் பிடிக்கும்." உணர்ச்சி வசப்பட்டுக் கூறினான் சுரேஷ்.

"நீங்க அவரைப் பார்த்திருக்கின்றீர்களா?"

"இல்லை...."

"அப்போ.... பார்க்காத, பழகாத ஒருவரைப் பிடிக்குமென்று சொல்லுவது மட்டும் முட்டாள்தனமில்லையா?"

"அது.... வந்து...." தோல்வியை ஒப்புக்கொள்ள முடியாமல் தவித்தான்.

"குறிஞ்சி பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு தடவைதான் மலருமாம். அப்படி அபூர்வமாக மலரும் மலரில் பிரியம் வைப்பதில் தவறில்லையே! அதே போலதானே யேசு, புத்தரெல்லாம் அவதரித்தார்கள்."

"எனக்கு றோஸ் என்றால் பிரியம் அதிகம்." சுரேஷ் அவளைத் திசைதிருப்பினான்.

ஏன் முள் இருப்பதாலோ?"

"ஆமாம் றோஜா எவ்வளவு மென்மையாகவும், கவர்ச்சியாகவும் இருக்கிறது. ஆனால் அதனடியில் இருக்கும் முரட்டு முள்ளை அந்தக் கவர்ச்சியும், மென்மையும் மறைத்து விடுகின்றது. அழகிய பெண்களுக்கு இருக்கும் அகம்பாவத்தைப் போல. றோஜா ஆண்களுக்கு எச்சரிக்கையூட்டும் உயர்ந்த நண்பன்."

"உங்களை எந்த அழகியாவது ஏமாற்றினாளா?"

"என்னை அழகிகளால் மட்டுமல்ல, ஆடவர்களாலும் ஏமாற்ற முடியாது"

"நீங்களே ஏமாற்றுக்காரரா?" அவள் சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"நேர்மையானவர்கள் நிச்சயமாக ஏமாற்றுக்காரராக இருக்க முடியாது."

அந்தத் தடாகத்திலிருந்த ஒருசோடி அன்னப் பறவைகளும் நீந்தியவாறே ஒன்றையொன்று அணைக்கின்றன.

இதுவரை நடந்து கொண்டே எல்லாவற்றையும் பார்வையிட்டு வந்த ரமா, அந்த அன்னத் தடாகத்தினருகே நின்றுவிட்டாள்.

"இங்கே இப்படியே நின்றுவிட்டால் றோஜாத் தோட்டத்தைப் பார்க்கவே முடியாது." சுரேஷ் ரமாவைத் துரிதப்படுத்தினான்.

"இந்த அன்னப் பட்சிகளைப் பார்க்கிலுமா உங்கள் றோஜா? அதை நாளைக்குப் பார்க்கலாம்." ரமா தடாகத்தினருகே அமர்ந்தே விட்டாள்.

அவள் கையில் கட்டெறும்பு ஒன்று கடித்துக் கொண்டிருப்பதைக் கூடக் கவனிக்காதவளாக அந்தத் தடாகத்தோடு இணைந்து விட்டாள்.

அந்தக் கட்டெறும்பை அக்கறையுடன், அவதானமாகக் கையால் தட்டிவிட்டான் சுரேஷ்.

அவனுடைய கை அவள் மீது பட்டபோது, அவள் மிகவும் உணர்ச்சிவசப்பட்டவளாகக் காணப்பட்டாள். அவள் முகம் சிவந்து கொண்டு வந்தது. தலையைக் குனிந்து கொண்டாள்.

அடுத்த நாள் தலதா மாளிகை, மறுநாள் சினிமா. இப்படி அவர்களின் பொழுதுபோக்கு நீடித்தது.

அன்று இரண்டாம் வருட மாணவி விஜியுடன் ரமா பல்கலைக்கழக வளாகத்தைச் சுற்றிவரப் புறப்பட்டாள்.

அன்று ராக்கிங் தொல்லைகள் முடிந்து எல்லோரும் சுதந்திரமாகச் சுறுசுறுப்பாகத் திரிகின்றனர்.

அந்த காதலர்கள் கூடும் ஒதுக்குப்புறமாக அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள்.

"இந்தப் பகுதியால் வரும்போது கண்களை மூடிக்கொண்டால் நன்றாக இருக்கும் இல்லையா விஜி?" ரமா கேட்டாள்.

"அது அவங்க அவங்க மனநிலையைப் பொறுத்தது." விஜி கூறினாள்.

"அது சுரேஷ்தானே?" ஆத்திரத்துடனும் ஆச்சரியத்துடனும் கேட்டாள் ரமா.

"ஆம் அவனோடு நெருக்கமாக அமர்ந்திருப்பவளும் இரண்டாம் வருட மாணவிதான். சுரேஷினுடைய வருங்கால மனைவி."

தனது தலைமேல் யாரோ ஒரு பெரிய பாறாங்கல்லைத் தூக்கிப் போடுவதுபோல் இருந்தது ரமாவிற்கு.

அதற்கு மேல் அவளால் நடக்க முடியவில்லை. "விடுதிக்குத் திரும்புவோம்" அழாக்குறையாக விஜியிடம் கூறினாள்.

இருவரும் விடுதி நோக்கி நகரத் தொடங்கினார்கள்.

சுரேஷ் அவனுக்குரியவளுடன் பேசுவது தெளிவாக... அந்தக் காற்றோடு கலந்து வந்து ரமாவின் காதுக்குள் பலாத்காரமாகப் பிரவேசிக்கின்றது.

"இந்தமுறை நான் ஒரு "கேர்ளுக்கு"க் கொடுத்த ராக்கிங் மறக்க முடியாதது டார்லிங். வித்தியாசமானதுங்கூட. ரமா என்ற கேர்ளை ஒரு வாரமாக மயங்காமல் மயக்கி, காதல் நாடகம் நடித்து, ராக்கிங் கொடுத்துவிட்டேன். அவள் என்னை உண்மையாகவே "லவ்" பண்ணத் தொடங்கிவிட்டாள். எனக்காக இருநூறு, முந்நூறு ரூபா வரை செலவழித்தும் விட்டாள்."

"அப்போ எனக்கு "குட்பை" சொல்லப் போறீங்களா?"

"நெவர்! மனச்சாட்சி இடம்கொடுக்காதே டார்லிங்"

"இல்லாவிட்டால் உங்களை விட்டுவிடுவேன் என்ற எண்ணமோ?" அவளின் செல்லமான வார்த்தைகளைத் தொடர்ந்து இச்.... இச்... இச்....

அதைத் தொடர்ந்து அவர்கள் மனம் விட்டுச் சிரித்தார்கள். அவர்கள் சிரிக்கின்றார்கள்.!

ரமாவின் இதயம் அழுதுகொண்டிருந்தது. என்ன செய்வதென்று அவளுக்குத் தெரியவில்லை. அவள் விடுதியை அடைந்தபோது,

இதுவரை ராக்கிங் தொல்லைகள் பொறுக்காது அழுது தீர்த்தவர்களெல்லாம் சிரித்துக் கும்மாளம் அடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அவள் கட்டிலில் தலையணையைப் பிடித்துக் கொண்டு அழுதாள். அழுது கொண்டே இருந்தாள்.

அவள் அழுவதை என்னவென்று கேட்கவே அவகாசம் அற்றவர்களாக அவர்கள் சிரிக்கின்றார்கள்.

# ஓர் ஆரம்பமும் அதன் முடிவும்

கடிதம் வந்ததிலிருந்து எனக்குள் ஒரே குதூகலம். "அலைகள் ஓய்வதில்லை" அவசியம் பாருங்கள். அவளின் சிபார்சு. அதற்காகத் தான் வெளிக்கிட்டுக் கொண்டிருக்கின்றேன்.

"செல்லம் மச்சாள்!" - வேலியருகே அம்மாவை கமலம் மாமி அழைக்கின்றா. தூரத்து உறவுதான். அம்மாவும் அவவும் நல்ல சிநேகிதிகள் மாதிரித்தான். எனினும் அவர்களுக்குள் இந்த 'மச்சாள்' வார்த்தைப் பரிமாற்றத்தில் நல்ல பிடிப்பு.

"அவல் பிரட்டுறன் மச்சாள் வாவன்...." - அம்மா குசினியில் இருந்தே குரல் கொடுக்கின்றாள்.

கமலம் மாமியின் வளவும் எங்கள் வளவும் ஒரே அளவுதான். இதயத்தில் இடம், வலம் அறைகள் இருப்பது போன்ற நினைப்புத்தான் - அமைப்புத்தான் இந்த இரு வளவுகளும். நடுவே வேலி. அந்த இதயச் சுவர் போன்ற வேலியில் சிறியதொரு வாசல்... அதால் வந்து கொண்டிருக்கின்றாள் கமலம் மாமி.

அந்த வாசலில் விழிபதித்து நின்ற நாட்கள் என் நெஞ்சை இப்போதும் தாலாட்டுகின்றன. "அழகு" - அது அவளுக்குச் சொந்தம். "அடக்கம்" - அவளின் அணிகலன். 'குறிஞ்சினி' - என்று மாமி

பெயர் வைத்தது முற்றிலும் பொருத்தமே. எங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் பொருத்தம் இந்த மச்சாள் பிடிப்புகளுக்கு கொஞ்சமும் தெரியாது.

"தம்பி நிக்குதா?" - குசினியுள் தலை நீட்டியபடி கேட்கிறாள் கமலம் மாமி.'

"ஓம் கமலம். படத்துக்குப்போகப்போறானாம். ஒரு வருஷம் இருக்கும் இவன் படம் பார்த்து. இண்டைக்கு ஏதோ 'குஷி'யாக வெளிக்கிடுகிறான். அதான் கொஞ்சம் அவல் பிரட்டிக்-கொண்டிருக்கிறன். படம் முடிஞ்சு, வஸ் பிடிச்சு வர பத்து மணியாப்போயிடும்..." - என்மீது அம்மா தனக்குள்ள அக்கறையை கொஞ்சம் அவுட்டு விடுகின்றா.

"ரா இருட்டில வஸ் ஏறித் திரியாத.... புதுப்படம் எண்டா 'மெட்னி' பார்க்கலாமே...."

கமலம் மாமிக்குக்கூட என்னில் அக்கறைதான். எனக்கு அவள் அறிவுரை எரிச்சலை ஏற்படுத்தினாலும் ஏதோ ஒரு சுகத்தையும் ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றது.

"அவன் பிடிச்சா பிடிதானே... நாம சொன்னாப் போல கேட்கப்போறானே... நீயும் கொஞ்சம் அவல் சாப்பிடன்.... எருமைத் தயிர் போட்டு பிரட்டினது.... இதிர மணம் உனக்கு விருப்பம்தானே...."

கமலம் மாமி கை நீட்ட... அவள் கையில் அம்மா அவலை அள்ளிவைக்க.... சிறிது நேரம் மௌனம் நிலவ... நான் கடிகாரத்தைப் பார்த்து கடிந்து கொள்ள... என் கைக்கு அவல் கோப்பையும் தேத்தண்ணி கிளாசும் வந்து விட்டது.

"செல்லம்....! இவள் குறிஞ்சியிர கடிதத்தை கன நாளா காணல்ல... என்னவும் காச்சல் கறுப்போ தெரியாது. அதுதான் தம்பியை கொண்டு கடதாசி ஒண்டு எழுதிப் போடுவம் எண்டு வந்த நான். தம்பி படத்துக்குபோய் வந்த பிறகு... நாளைக்கு எழுதுவம்..."

என்னத்துக்கு மச்சாள் இதுக்கெல்லாம் அவன மினக்கடுத்த. நில்லு நான் எழுதித்தாறன்."

மாமியின் தவிப்பு. அம்மாவின் தடுப்பு. எனக்கோ தர்மசங்கடம். ஏன் சத்திய சோதனையும்தான்.

இன்று குறிஞ்சினி அனுப்பின கடிதத்தில மாமிக்கும் சுகம் சொல்லட்டாம் எண்டு தான் எழுதியிருக்காள். அந்த மக்கு அப்பிடி எழுதிப்போட்டுது. என் கள்ள மனசு எங்கட கடிதத் தொடர்பை காட்டிக்கொள்ள விரும்பல்ல.

"வெச்ச பார்வை தீராதடி... மச்சான் குறி மாறாதடி"- யாரோ சீட்டி அடிச்ச படி தெருவால் போகின்றான். அந்த பாடல்தானே என்னையும் குறிஞ்சினியையும்.... அவள் பெரியவளான சடங்கில... நான் 'மைக்கில' எந்த பாவமுமறியாம அந்தப் பாட்டை பாட... அவள்ர பள்ளிப் பெட்டையள்... அதை வித்தியாசமா எடுத்து குறிஞ்சினியை கிண்டல் செய்ய... கொஞ்ச நாளாக அவள் என்னோட முகம் குடுக்காம ஒழிஞ்சு திரிஞ்சு.... கடைசியா அவளே தீபாவளி 'காட்' போட்டு என் முகத்தைத் திருப்பி....என் மனசைத் திருப்பி...

இப்ப அவ பெரிய ரீச்சராகி.. பழைய பசுமையில் பரவசப்பட்டபடி அம்மாவிடம் விடைபெறுகின்றேன்.

வழக்கம்போல வாசலில் வந்து நின்று சிரித்து 'முழிவியளம்' காட்டி என்னை வழியனுப்புகின்றாள். "அம்மா நான் வேலைக்கோ... 'இன்ரவியூவுக்கோ' போகல்ல... படத்துக்குத்தான் போறன். இதுக்கும் வந்து நிண்டு வழியனுப்ப வேணுமா?" என்று நான் கேட்டால், - வாகனத்தில போற நீ... எந்த இக்கட்டும் வரக்கூடா எண்டு முருகனை மண்டாடித்தான் நான் உன்ன வழியனுப்பி வைக்கிற நான்...." என்று என் நேரத்தில் சுரண்டல் செய்வாள் அம்மா.

சந்திக்கு வந்துவிட்டேன். ஒரு மினி வஸ்ஸைத் துரத்தியபடி வஸ் வருகின்றது. கையைப் போடுகின்றேன். அரச சொத்து என்பதை அடையாளம் காட்டுவதுபோல்... 'அரை இஞ்சிக்கு' குறையாம ரயர்

தேய அவசர 'விறேக்' ஓசை கேட்டுத் தள்ளி... துள்ளி... தடுமாறினாலும்... தாமதியாமல் வஸ்சில் தாவிக் கொள்ளுகின்றேன்.

மினி வஸ்சின் எச்சங்கள் தான் வஸ்கள். சனம் குறைவு.

இந்த வஸ்சுக்குள்ளும் பாட்டு. பரவாயில்ல.... கொஞ்சம் முன்னேற்றம்தான். அமர ஆசனங்கள் கிடப்பதால்.. அதனிலும் வசதிபார்த்து அமர்ந்து, ரிக்கற்றை வாங்கி.... சில்லறையை (மீதி) தியாகம் செய்து.... தியானம் செய்தபடி பாடல்களை ரசித்து.... என் பாடலேதான்... இப்பவும் இந்தப் பாடலை பதிவுசெய்து போடுகின்றார்களே... ஓ.... கிராமிய ராகத்தில் அமைந்ததல்லவா...? அதுதான் அடிபட்டுப் போகாமல்.... அடிமனதில் பதிந்து... அனைவரையும் ஆக்கிரமிக்கின்றது போலும்... குறிஞ்சினி என்னை ஆக்கிரமித்திருப்பதுபோல.

என் முன் முடியை யாரோ சுண்டி இழுப்பதை உணர்ந்து நிமிர்கின்றேன். பிஞ்சுக்கரம். முன் சீற்றில் எழுந்த நின்று அந்தக் குழந்தை என் முடியோடு விளையாடுகின்றது. எனது பதினைந்து நிமிடநேர அலங்காரம் அலங்கோலமாகியதை நினைத்தால் ஆத்திரம். பல்லில்லாமல் சிரிக்கும் அந்தப் பச்சைக் குழந்தையோடு ஆத்திரப்படலாமா?

அதன் தந்தை. குழந்தையைக் கட்டுப்படுத்துகின்றார். அது அவரைக் கஸ்டப்படுத்துகின்றது. தன் இயலாமையைக் காட்ட என்னைப் பார்த்து அவரும் ஒரு புன்னகை இயல்பாக. நானும் அதற்கு இசைவு. குழந்தையின் அசைவுகள் அதிகமாகின்றது.

நானும் ஆசையோடு எனது இருகரங்களையும் குழந்தையை நோக்கி நீட்டுகின்றேன். அதற்கு என் கை அசைவின் அர்த்தம் புரிந்து விட்டது. என்மீது தாவுகின்றது குழந்தை. என் மார்பில் தன் பிஞ்சுக் கால்களால் தாளமிட்டபடி கும்மாளமடிக்கின்றது.

"கோ தாத்தா? - குழந்தையின் தந்தை தன் முத்தைத் துவாயால் மறைத்தபடி, குழந்தையிடம் விளையாட்டாகக் கேட்கின்றார்.

அந்தக் குறும்புக்கார குழந்தை என்னைச் சுட்டிக் காட்டுகின்றது.

"ஹொந்தாய்....!" மனம்விட்டுச் சிரிக்கின்றோம் நாங்கள். வஸ் நிற்கின்றது. இறக்குமதி பெண்ணொருத்தி ஏறுகின்றாள். முதுகுச் சுமையை முன்பக்கம் இறக்கி வைத்து விட்டு.... இருக்கை தேடுகின்றாள்.

என் சீற் நோக்கித்தான் வருகின்றாள் போலும். குழந்தையை பிடித்ததோ? இல்லை என்னைத்தான் பிடித்து விட்டதோ? எப்படியோ பக்கத்தில்தான் இருக்கப்போகின்றாள். அம்மாவின் முழிவியளம் நல்லதுதான் என்று எனக்குள் ஒரு திருப்தி.

இருந்து விட்டாள். பக்கத்தில்தான். அவளுக்குள் அவசரம். இலங்கையில நமக்குத் தெரியாத இடத்தில எல்லாம் இருந்து இதுகள் ஏறுதுகள் இறங்குதுகள். நாமும் இருக்கமே.... என்றொரு சலிப்பை (சுற்றுலா பற்றியதுதான்) ஏற்படுத்திவிட்டுத்தான் இருக்கின்றாள். ஒரு வித ஏக்கத்தோடு அவளைப் பார்க்கின்றேன்.

"சுவிற் சிமைல்." நான் அதை வரவேற்று ரசிக்கின்றேன். ஜேர்மன்காரிபோலத்தான் இருக்கு. பதினெட்டு வயசுதான் இருக்கும். ஆனா நூற்றி எண்பது றாத்தலாவது இருப்பாள். எனக்கு இருபத்தெட்டு.... எண்பது றாத்தல்தான் இருப்பன்... என்னையறியாமல் ஒரு பெருமூச்சு.

அவள் தனது டெனிம் ஜீன்சுக்குள் கையைவிடுகின்றாள். 'வீடிக்கட்டோடு' அவள் கை வெளியேறுகின்றது மறு கையால் 'லைற்றரை' எடுக்கின்றாள்...... 'லைற்றரை' எடுத்தவள் என்னை 'லைற்றாக' பார்க்கின்றாள்.

"சால் ஐ ஸ்மோக் ஹியர்?"

"நொட் எலவுட் பிளீஸ்" என்று "புகைத்தல் கூடாது' என்று வஸ்சுள் மும்மொழியிலும் எழுதியிருந்த அந்த விளம்பரத்தைச் சுட்டிக் காட்டுகின்றேன்.

"சொறி..."

"தாங்ஸ்....."

அவள் முதுகில் இருந்து இறக்கிய சுமையை தனது கையால் நிறுத்துப் பார்த்து விட்டு, சாரதியோடு ஏதோ பேசிவிட்டு... சாரதிக்கும் ஒரு சிகரட்டை 'லைற்' பண்ணிக்கொடுத்து.... தானும் ஒன்றைப் பற்றியபடி.. எனது சீற் அருகே வந்து நிற்கின்றார் கொண்டக்டர்.

"ரிக்கற் பிளீஸ்..." - அவர் சிகரட்டை வாயிலிருந்து எடுக்காமலே யாரோ ஒரு நடிகரைப் பின்பற்றும் பாணியில் நின்று கொண்டிருக்கின்றார்.

அவள் ரிக்கற்றை எடுத்து விட்டு என்னை ஏளனமாகப் பார்க்கிறாள். "எங்க நாட்டில சட்டத்தைக் காப்பாத்த வேண்டியவங்கதான் சட்டத்தை மீறுறது வழக்கம். இஞ்ச எல்லாத் துறையிலும் இது சர்வசாதாரணம்...." என்பதுபோல் அவளைப் பரிதாபமாகப் பார்க்கின்றேன்.

குழந்தை அவள் மீதும் தனது கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டது. அவளுக்கும் குழந்தையைப் பிடித்து விட்டது. குழந்தையோடு குதூகலிக்கின்றாள். 'சொக்கலற் சிலப்' ஒன்று அவர்கள் இருவரினதும் உறவை இணைத்தபடி இருக்கின்றது. அது காலியான பின்தான் என்னிடம் குழந்தை தாவுமோ?

வஸ் நிற்கின்றது. தொழிலாளர் கும்பல் ஒன்று வஸ்ஸை நிறைக்கின்றது. உழைத்த களைப்புத்தீர... கணக்குக்குப் பார்த்துத்தான் ஏறியிருக்கிறார்கள். சிலர் கையோடும் கொண்டுதான் வந்திருக்கின்றார்கள். அவர்கள் உழைத்தும் ஓடாக இருக்கின்ற காரணத்தை... அல்கஹோல் வாடையும்... புகை மண்டலமும்... வகைப்படுத்திக் கொண்டிருக்கின்றன. வஸ்சும் புகையைப் போட்டிக்குக் கக்கிப் புறப்படுகின்றது.

'சொக்கலற்' தீர்ந்து விட்டது. சொல்லி வைத்தாற்போல குழந்தை என்னிடம் மாறுகின்றது.

என்னிடம் சிரித்து மகிழ்ந்து வந்த குழந்தை திடீரென வீரிடுகின்றது. நான் குழந்தையைப் பார்க்கின்றேன். குழந்தையின் தந்தையும் திகைப்போடு திரும்பிப் பார்க்கின்றார்.

குழந்தையின் கன்னத்தில் எரிகாயம். குழந்தை துடிக்கின்றது. அவர் குழந்தையை வாங்கி மார்போடணைத்துக் கலங்குகின்றார். என் சீற்றுக்குக் கீழே கிடந்து, புகைந்து கொண்டிருந்த 'சிகரெட் வட்டை' அந்த ஜெர்மன் - எனக்கு காட்டுகின்றது.

யாரோ கவலையீனமாக வஸ்சுக்குள் இருந்து வெளியே வீசிய 'சிகரெட் வட்' காற்றின் வேகத்தில்... குழந்தையின் கன்னத்தைத் தொட்டு என் காலுக்குக் கீழ் கிடக்கின்றது.

குழந்தையின் அலறல் இன்னும் ஓயவில்லை. பார்க்கப் பரிதாபமாக இருக்கின்றது.

"இந்த சிகரெட் வட்டை எறிந்த பாதகன் யார்?" - என்று - நானே இரைகின்றேன். குற்றத்தை ஒப்புக் கொள்ளும் பக்குவம் யாருக்குத்தான் இருக்கு. அதற்குள்ளும் முன் சீற்றில் யாரோ புகைத்துக் கொண்டுதான் இருக்கின்றார்கள். ஆத்திரத்துடன் அவர்களை அணுகுகின்றேன். அவர்கள் அலட்சியமாக என்னைப் பார்க்கின்றார்கள்.

உங்கள்ள ஒருவரால்தான் இப்பவும் அந்த பச்சைக் குழந்தை துடிக்குது...." - நான் முறைத்தபடி கூறுகின்றேன்.

அவர்கள் என் முகத்தில் புகையை ஊதிவிட்டு உற்சாகமாகச் சிரிக்கின்றார்கள். அதற்குமேல் எனக்குப் பொறுமை இல்லை. 'பளார்' ஒருவனுடைய கன்னத்தில் என் கை பலமாகப் பதிந்து விட்டது. அவன் வாயில் இருந்த சிகரெட்டும் பறந்து விட்டது.

அந்தக் குழந்தையின் தந்தை ஓடிவந்து என்னைத் தாக்க வந்தவனைத் தடுக்கின்றார். அவருக்கு அவன் அறைந்து விட்டான். இன்னுமொருவன் அவரை நெருங்க தற்பாதுகாப்புக்காக அவரும் அவனைத் தடுக்க... கைகள் தானாகப் பரிமாறுகின்றன.

"நாங்க இவ்வளவு பேர் இருக்கம் எண்ட மதிப்பில்லாம... என்ர மச்சான கைநீட்டி அறைஞ்ச உன்ன விடுவனா....?" - கடைசி சீற்றில் இருந்த ஒருவன் எழுகின்றான். அவனால் எழுந்து நிற்க முடியவில்லை. எப்படி நடக்க முடியும்? கையில் இருந்த போத்தலால்.. குழந்தையின் தந்தையை நோக்கி எறிகின்றான் அவன்.

அது வஸ்சின் முன் பக்க கண்ணாடியைச் சிதறடிக்கின்றது. வஸ்சுக்குள் ஒரே கலாட்டா. குழந்தை அழுது களைத்து, சோர்ந்து போய் இருக்கின்றது.

வஸ் வேகமாக ஓடிக்கொண்டே இருக்கின்றது.

வஸ் நிற்கின்றது. பொலிஸ் ஸ்ரேசன். "யாரும் வஸ்சை விட்டு இறங்கக்கூடாது" - என்ற உத்தரவைப் பிறப்பித்து விட்டு, பொலிஸ் நிலையத்துள் ஓடுகின்றார் கொண்டக்டர்.

குழந்தையின் தந்தையோடு மட்டும் சுயமொழியில் பேசிய பொலிசார்... வஸ்சிலிருந்த எனக்கும் பிடரியில் ஒன்று போட்டு எல்லோரையும் பொலிஸ் நிலையத்துள் முறைப்பாட்டுக்கு அழைத்துச் செல்கின்றார்கள்.

போத்தலால் எறிந்தவருக்கு அடி, உதை அனைத்தும்... அளவுக்கதிகமாக எல்லோர் முன்னிலையிலும் கிடைக்கின்றது. அடுத்து அவரை "லெக் அப்"பில் போடுகின்றார்கள். அவனிடமிருந்து இப்போ முறைப்பாடு அவர்களால் பெறமுடியாது. அவ்வளவிற்கு அவனைப் பதப்படுத்தி.... படுக்கையில் போட்டு விட்டார்கள். குழந்தைக்கும் அதன் தந்தைக்கும் ராஜ மரியாதை. ஜீப்பில் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்கின்றார்கள். இந்த சிறிய காயத்தைப் பெரிதுபடுத்துகின்றார்களே. "அப்பே ரட்ட", "தெமில்

ஈழம் ஓணத?", இப்படி ஒரு சில வார்த்தைகள் என் காதுள் விழுகின்றன. நடந்த சம்பவத்திற்கும் இந்த வார்த்தைகளுக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியாமல் நான் விழிக்கின்றேன்.

ஒரு 'சிகரெட் வட்' - ஒரு சரித்திரம் படைக்கப்போகின்றதோ? 'அலைகள் ஓய்வதில்லை' - நேரத்தை பொலிஸ் நிலையம் விழுங்கி விட்டது. பிடரியில் விழுந்த தாக்கம் புடைத்துக் கொண்டு விட்டது. என்னையும் உள்ளே தள்ளி விட்டார்கள். நல்லவேளை எனது நெருங்கிய நண்பன் ஒருவன் அப்போதுதான் 'டியூட்டிக்கு' வந்தான். அவனைக் கண்டு கதைத்ததில் ஒருவாறு எனக்கு விடுதலை.

கடைசி வஸ். ஒருவாறு ஊர் சேர்ந்து விட்டேன். அம்மா விழித்தபடி இருக்கின்றா.

சோறு பழுதாப்போயிடும். முகத்தை அலம்பிற்று கெதியா சாப்பிடவா......"

நான் துரிதமடைகின்றேன், சாப்பிடுகின்றேன் "படம் எப்பிடி?" என்று கேட்க, "நல்லம் அம்மா...." என்று சொல்லி கை கழுவி, 'தலையிடி' என்று 'விக்ஸ்' கேட்டு.... அதை பிடரியில் தடவியபடி தலை சாய்கின்றேன்.

அடுத்த நாள் மாலை, அம்மா எங்கேயோ சேகரித்த செய்திகளை ஊர்ஜிதம் செய்யும் ஆவலோடு என்னிடம் கேட்கின்றாள்.

"தம்பி மெய்தானா நேற்று.... ராத்திரி... வஸ்சுக்குள்ள ஒரு 'சி'னா பிள்ளையை போட்டு எரிச்சதாம். அதால ரவுனில திரிஞ்ச பெடியளுக்கெல்லாம் சரியான அடியாம். எங்கும் பரவலா குளப்படி நடக்குதாம்.... நீ கேள்விப்படல்லையா?"

எனக்கு அதிர்ச்சி. அந்த சிறிய சம்பவம்... இந்தளவுக்கு திரிவுபட்டு அதற்குள் இவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்தி விட்டதா? இஞ்ச இனி எது நடந்தாலும் இன சாயம் பூசி, சட்டத்தைச் சாட்டாக வைத்து... இது தொடர் கதைதானா?

"ஒண்டும் நடக்கல்ல அம்மா. உங்களுக்கு விசர்." நான் அம்மாவை அடக்கி அதட்டி விடுகின்றேன். எனக்குள் ஒரே அந்தரமாக இருக்கின்றது.

"என்ர பிள்ளையிர பாடு என்னவோ தெரியாது செல்லம்... ஒரு தந்தி குடுத்துப் பார்ப்பமா?"

அம்மா கமலம் மாமியையும் குழப்பி விட்டுத்தான் வந்திருக்கின்றா என்பதை கமலம் மாமியின் குரல் நிரூபிக்கின்றது.

"நேற்றுத்தான் கடிதம் வந்தது. குறிஞ்சினி சுகமாத்தான் இருக்காள்."- என்று சொல்ல வந்த வாய், "அம்மா குறிஞ்சினி இருக்கிற இடத்தில ஒண்டும் நடக்காது... வேணும் எண்டா ஒரு தந்தி அடிச்சுப் பாக்கிறன் "என்று சொல்லி சமாளித்து சேட்டைப் போட்டுக்கொண்டு வெளியேறுகின்றேன்.

"றோட்டில திரிஞ்சா பொலிஸ்காரங்கள் அடிக்கிறாங்கள்... சந்திக்கு போகாத மச்சான்."- நண்பன் ஒருவன் என்னை மறித்து சொல்லிவிட்டு செல்கின்றான். நான் பாதி வழியில் திரும்புகின்றேன்.

"தந்தி அடிச்ச நீயே?"

"ஓம் அம்மா....."

"கெதியா வந்திட்டா.."

"சைக்கிள் ஒண்டு கிடைச்சுது....."

எனக்கு அலுப்பாக மட்டுமல்ல அந்தரமாகவும் இருக்கின்றது. கதிரையில் அமர்கின்றேன். றேடியோவைத் திருப்புகின்றேன். "எல்லாம் முடிந்தபின்னால் அந்த விளக்கெதற்கு...." அந்தப் பாடல் முடியும் முன்னரே பாடல் திடீரென்று நிற்கின்றது. பாடலை இடைநிறுத்திறதில அறிவிப்பாளர்களுக்கு ஆனந்தமா?

"நாட்டில் பரவலாக ஏற்பட்ட கோஷ்டி மோதல்களை முன்னிட்டு நாடு முழுவதும் அவசரகாலச் சட்டம்

பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இன்று மாலை ஆறு மணியிலிருந்து காலை ஆறு மணிவரை ஊரடங்குச் சட்டமும் அமுல்படுத்தப்படும்..."

அந்த விசேட அறிவித்தல் என்னை வேதனைப்படுத்திக் கொண்டிருக்க... அம்மாவின், "நான் சொன்னன் கேட்டியா? இப்ப என்ன சொல்றா...?" என்ற வார்த்தைகள் எனக்குள் ஒரு எரிச்சலை ஏற்படுத்த... 'சரிதான்' என்று மட்டும் குரல் கொடுக்கின்றேன்.

இரவு என்னால் ஏனோ சாப்பிட முடியவில்லை. காலையில் எழுந்ததும் றேடியோவைத் திருப்பி விடுகின்றேன். இன்று முழுநாளும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் என்பதை அது சொல்லிக் கொண்டிருக்கிறது.

கமலம் மாமி சமைக்கவே இல்லை. சதா குறிஞ்சியைப் பற்றிய ஏக்கம். அவளுக்கு மட்டும்தானா? எனக்கும் தான். அவளைப் பற்றிய தகவலை உடன் பெறுவது கஷ்டம். கஷ்டப் பிரதேச ஆசிரியையாக அவளுக்கு வேலை கிடைத்ததால்... அந்த பெரும்பான்மைப் பிரதேசத்தில் உள்ள ஒரேயொரு தமிழ் பாடசாலையில்தான் அவள் படிப்பித்துக் கொண்டிருக்கிறாள்.

எட்டு மணியத்தியாலம் மூன்று பஸ்சில் மாறி, மாறி ஓடி..... ஒரு மணித்தியாலம் நடந்துதான் அவள் இருக்கும் இடத்தை அடையவேணும்.

"அம்மா ஊரடங்குச் சட்டம் பகலில் இல்லாட்டி நான் குறிஞ்சியைப் போய்ப் பார்த்துட்டு வாறன்... அவங்கள யோசிக்காம சாப்பிடச்சொல்லுங்க..."

எனது வார்த்தைகளுக்கு எவ்வித பதிலுமில்லை. 'மச்சாள்' வார்த்தைப் பிரயோகங்களையும் காணவில்லை. பொழுது நகர்கின்றது. விடிகின்றது. விடிந்ததும் ஊர் அடங்குகின்றது. அடுத்த நாள் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட..... நானும் பயணத்திற்குத் தயாராகி விட்டேன்.

''சுணங்காம நாளைக்குப் பின்னேரத்துக்கிடையில

குறிஞ்சினியையும் கூட்டிட்டு வந்திரு...." - இது அம்மா.

"ஓம் தம்பி...." - இது கமலம் மாமி.

"கவலைப்படாதீங்க. நான் குறிஞ்சினியோட வருவன்..." இது நான்.

ஆளடையாள அட்டை கொண்டுபோகாததால பிரயாணம் முழுக்க பிரச்சினைகள். சில பொலிஸ் நிலையங்களிலயும் முகம் காட்ட வேண்டிய நிர்ப்பந்தம். அதனால் பிரயாணத்தில மேலதிக தாமதங்கள். அதுமட்டுமல்ல முதுகிலும் சில தடயங்கள்.

பஸ் பயணம் முடிநது நடை தொடங்க மாலையாகி விட்டது. அந்தச் சந்தியில் தமிழ் குரல் ஒன்று கேட்டுத் திருப்புகின்றேன். சுத்த தமிழ்தான். ஆனால் காக்கி யூனிபோம். எனக்குள் ஒரு தைரியம். அவரிடமே விபரங்னைத் தெரிந்து கொண்டு... பயணத்தைத் தொடர்ந்ததால் என்ன...?

குறிஞ்சியினியின் பாடசாலையைச் சொல்லி, "அங்கே போகலாமா" - என்று கேட்கிறேன்.

"எதுக்கு போகப்போகிறீர்....'

"குறிஞ்சினி ரீச்சரைப் பார்க்க..."

"அந்த ஐங் கேளா.....?'

"ஆமா சார்.... நீங்க பார்த்தீங்களா?"

"ஆமா..."

"எங்க சார்....."

"மோச்சரியில..."

என்னால் அதற்கு மேல் பேசமுடியவில்லை. அவர் பொலிசாக இருந்தும் அவர் கண்களும் கலங்குகின்றன. என்னைத் தட்டிக் கொடுக்கின்றார். தடம்புரண்ட பிரயாணிகள் பெட்டி மாதிரி என்

இதயம் நசுங்குகின்றது.

"எந்த மோச்சரி சார்...?" என்னை நானே ஓரளவு சுதாரித்துக் கேட்கின்றேன்.

ஜீப் ஒன்று வருகின்றது அதில் என்னை ஏற்றி 'மோச்சரிக்கு' அனுப்புகின்றார்.

"ஓ...! என் குறிஞ்சிதானா இது....?" கடவுளே! உனக்கு இவ்வளவு கொடூரமான, கேவலமான சித்திரவதை...? உன் முகத்தைக்கூட சரியாக அடையாளம் காண முடியவில்லையே...." - நான் கதறுகின்றேன்.

"சார் 'வொடி'யைக் கொண்டுபோறதுக்கு உதவி செய்வீங்களா...?" நான் அந்த இன்ஸ்பெக்டரிடம் ஈனமான தொனியில் கேட்கின்றேன்.

"ஐ எம் சொறி. இப்பிடியான நிலையிலுள்ள 'வொடி'களை அந்த இடத்திலேயே அடக்கம் செய்ய வேணும் என்று மேலிடத்து உத்தரவு...."

"அப்போ....? நான் தடுமாறியபடி நிற்கின்றேன்.

"நீங்க இப்பவே ஈமக்கிரியைகளை முடிச்சிற்று போகலாம்..."

"அவங்க தாயை அழைச்சுவந்து காட்டின பிறகு அடக்கம் செய்யலாம் சார். இப்பவே "வொடி" நல்லாப் பழுதாப்போயிற்று. உங்களுக்கு இஷ்டமில்லாட்டி அரச செலவில நாங்களே அடக்கம் செய்யுறம்..."

"நான் கமலம் மாமியிற்ற என்ன சொல்ற சார்..." என்னையறியாமல் அந்த வார்த்தைகள் வெளிவந்து விட்டன. என்ன செய்வேன்? என்ன சொல்வேன்? கமலம் மாமியைப்போல் எத்தனை மாமிகள்... எத்தனை தாய்கள் ... காலத்துக்குக் காலம்.

(யாவும் கற்பனை)

# வழியும் பழியும்

அது பண்டிகைக்காலம். சலுசலாவிற்குள் சௌந்தர் நுழையும் போது கோழி கூவியது. லொறி முழுமையாக 'லோட்' பண்ணி முடிந்த போது...... பக்கத்தில் இருந்த மரங்களில் பறவைகள் தங்கிக் கொண்டிருந்தன.

சலுசலா வாசலிலும் தாமதம். பற்றுச்சீட்டோடு பரிசோதித்துப் பார்க்கும் காவலர்களுக்கும் களைப்புத்தான். அந்தத் தடையையும் தாண்டி லொறியை பிரதான வீதிக்கு எடுத்தான் சௌந்தர்.

பின் தட்டியை மூடி, இரும்புச் சட்டத்தைப் போட்டு, நன்றாகப் பூட்டிக் கொண்டான் கிளீனர். பூட்டுக்களை இழுத்துப் பார்த்தான் சௌந்தர். அவனுக்குத் திருப்தி. லொறியைக் கவனமாக இயக்கத் தொடங்கினான் சௌந்தர்.

கிளீனர் 'றைற்' சொல்லி விட்டு, ஓடி வந்து ஒரே தாவலில் ஏறி, சௌந்தருக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டார்.

இந்த வயதிலும் ஒரு இளைஞனுக்குரிய சுறு சுறுப்போடு இயங்கும் அந்த 'கிளீன'ருக்கும் வயது ஐம்பதுக்கு மேல். எருமைத் தயிரினாலும், பசுப்பாலினாலும் பதனிடப்பட்ட பலம் வாய்ந்த உடற் கட்டு,

அந்த உடற்கட்டுக்கு மூன்று குழந்தைகள்தான். சௌந்தருக்கு சாதாரண உடம்புதான். கிளீனரை விட ஐந்து வயது வித்தியாசம்.

சௌந்தருக்கு ஆறு குழந்தைகள். ஐந்து பெண். ஒன்றே ஒன்று ஆண். அதனால்தானோ என்னவோ அவன் இன்னும் அரசின் நன்கொடைக்கு ஆசைப்பட்டு, அறுவைச் சிகிச்சையும் செய்து கொள்ளவில்லை.

வீட்டுக்கு ஒரு ஆளை தன் இனப் பணிகளுக்கு ஒவ்வொரு-வரும் அர்ப்பணிக்க வேண்டும் என்பதில் ஆசை கொண்டவன் சௌந்தர். தன் இறுதிக் கடமைகளைச் செய்து முடிக்கவும் ஒரு ஆண் அவசியம் என்பது அவன் அடி மனதில் இருக்கின்றது. அதனால் அவன் இன்னும் ஒன்றை எதிர்பார்க்கின்றான்.

வாய் புளித்தது சௌந்தருக்கு. வாகன நெரிசலான வீதி, சிகரெட் புகைக்கவும் வாய்ப்பில்லை. லொறியை அவதானமாகச் செலுத்திக் கொண்டிருந்தான் சௌந்தர்.

குருநாகலில் இராப்போசனத்தை எடுத்தார்கள். நள்ளிரவு நல்ல குளிர். உண்ட மயக்கம் உறக்கத்தை நாடியது. அந்த உறக்கத்தை விரட்ட, வேகமாக சிகரெட்டைச் சிறிது நேரம் சுவைத்தான் சௌந்தர்.

ஏற்றியிருந்த பெறுமதிமிக்க பொருட்களை பற்றிய அச்சம் சௌந்தருக்குள் ஒரு அவசரத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. லொறியை இயக்கத் தொடங்கினான்.

சங்கத்திற்குச் சொந்தமான பொருட்கள். தனது உறக்கம் கொள்ளையர்களுக்கு உற்சாகத்தை உருவாக்கி..... உதவியும் செய்து விடும் என்ற எண்ணம் சௌந்தருக்கு. உறக்கத்தைத் தவிர்த்துக் கொண்டான். ஊதித் தள்ளினான் சிகரெட்டை.

தூக்கத்தோடு லொறியைச் செலுத்தி துர்அதிர்ஷ்டவசமாக ஏதாவது விபத்தில் சிக்கினால்... "ஏன் தூக்கத்தோடு லொறியைச்

செலுத்தினீர்? என்று துளைத்தெடுப்பது மட்டுமல்ல..... பொருட்களைக் கையாடவோ இவ்வாறு ஏற்படுத்தினீர்?'' என்று கேட்டாலும் கேட்பார்கள்.....

கொஞ்சம் தூங்கிய நேரத்தில் கொள்ளையே நடந்து விட்டால் "கொள்ளைக்கு நீா் உடந்தை. கோடி ரூபா பொருட்களைக் கொண்டு வரும்போது நித்திரை கொள்ளலாமா?" - என்றும் நச்சரிப்பார்கள்.

நேரத்தோடு சங்கத்திற்குப் போய்விட்டால் ''வட்டாப்'' பணத்திலும் கொஞ்சம் பிடித்து விடுவார்கள். அளவுக்கு அதிகமாக தாமதித்து சென்றாலும் விளக்கம் கொடுக்க வேண்டும். தண்டனைப் பணமும் அறவிடுவார்கள்.

சங்கத்தில் சாரதியாகக் கடமை புரிவதில் உள்ள சங்கடங்களை நினைத்தபடி, நிதானமாக லொறியைச் செலுத்திக் கொண்டிருந்தான் சௌந்தர்.

"சுருட்டொன்று பத்தினால் நல்லா இருக்குமே......" கூறினான் சௌந்தர். சௌந்தருக்குச் சுருட்டு மணம் பிடிக்காது என்பது கிளீனருக்குத் தெரியும். அதனால் லொறி நிற்கும் இடங்களில் மட்டும் இறங்கி நின்று புகைப்பார் கிளீனர்.

"நமது சகிப்பு சிலருக்கு சந்தோசத்தை அளிக்குமானால்..... அந்த சந்தோசத்திற்கும் சந்தர்ப்பமளிப்பதுதான் மனிதத்தன்மை" - என்று நினைப்பவன் சௌந்தர்.

கிளீனருக்கு ஒரு குழந்தையின் குதூகலம். கரிக்கோச்சி ஒன்று லொறிக்குள் இருந்து புறப்படத் தொடங்கி விட்டது.

ஹபறனையில் "பிளேன் ரீ" ஒன்றை நிரப்பி விட்டு, நீண்ட பயணத்தில், நியாயமான தூரத்தைக் கடந்து விட்ட நிறைவோடு லொறியை இயக்கிக் கொண்டிருந்தான் சௌந்தர்.

பொலனறுவையும் ஒருவாறு கடந்து விட்டது. வெலிக்கந்தை பயம் தெளிந்த மனதோடு சுவையாக ஒரு "பிளேன் ரீ". பயணம் தொடர்ந்தது.

அது ஒரு குடியேற்றப் பகுதி. அந்த நீண்ட சாலையில் இரண்டொருவர் உலவுவது போல் இருந்தது. புலரும் பொழுது. அதே இடத்தில் அண்மையில் தான் ஒரு கொள்ளை கூட நடந்தது. சௌந்தருக்கு பதட்டமாகவும், பயமாகவும் இருந்தது.

"பார்த்துப் போவோம்......." என்றான் கிளீனர். இப்படியான இடங்களில் லொறியை நிறுத்தி வைப்பதும் ஆபத்து. "முருகனை"..... முன்னே செல்ல விட்டு 'அக்சிலேற்றரை' பலமாக அழுத்தினான் சௌந்தர். லொறி புதியதொரு ஓசையோடு முன்னேறிக் கொண்டிருந்துது.

கணப் பொழுதில் அந்த இடத்தைக் கடந்து விட வேண்டும் என்ற கவனம் சௌந்தருக்கு. நடுரோட்டில் ஒரு உருவம். உன்னிப்பாகக் கவனித்தான் சௌந்தர். பெண் உருவம் . ஒருவேளை பேயோ? பொழுது புலரும் நேரத்தில் பேயா? இருக்காது.

அப்படியென்றால் கொள்ளைக் கூட்டம் சாதுரியமாக பெண்ணை நிறுத்தி வைத்திருக்கின்றதா?

சௌந்தரின் உள்ளத்துள் பலமான கேள்விகள். அவன் அதற்கான பதிலைக் கண்டு கொள்ளுமுன்.... அந்த உருவத்தை நெருங்கி விட்டது லொறி. 'ஹோர்ன்' பண்ணியும் அவள் அசைவதாக இல்லை.

லொறியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து அந்த உருவத்தின் மீது பட்டும் படாமலும் படாரென நிறுத்தினான் சௌந்தர்.

"ஐயா என் ஒரேயொரு குழந்தையைக் காப்பாத்துங்க" கண்ணீர் மல்க மன்றாட்டமாக கேட்டாள் அவள்.

அங்கே குழந்தையைக் காணோம். சௌந்தருக்கு குழப்பமாக இருந்தது. அவள் சடுதியாக அந்த சாலையோரத்து பற்றையை நோக்கி நடந்தாள். பற்றையருகில் இருந்து முனகல் சத்தம்.

'கிளீனர்' நடுங்கிக் கொண்டிருந்தான். சௌந்தர் அந்தப் பற்றைப் பக்கத்தையே பதட்டத்தோடு பார்த்தபடி இருந்தான்.

லொறியை விட்டு இறங்கப் பயம்.

சுமார் ஒன்பது வயது மதிக்கத்தக்க சிறுமி ஒருத்தியை தூக்கியபடி லொறி அருகே வந்தாள் அவள். சிறுமியின் உடல் முழுக்க இரத்தம். சௌந்தருக்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது.

அந்த சிறுமியோ அழுவதற்கும் சக்தியற்றவளாக முனகிக் கொண்டிருந்தாள்.

"எங்களை ஆஸ்பத்திரியில் சேர்த்து விடுங்க ஐயா....." அவள் கெஞ்சுகிறாள். சௌந்தர் கிளீனரைப் பார்க்கின்றான். கிளீனர் லொறியை விட்டு இறங்கி விட்டான். அவள் அந்தச் சிறுமியோடு ஏறிக்கொண்டாள். கிளீனரும் ஏறிக் கொண்டான். லொறி புறப்பட்டது.

கிளீனரே அவளோடு பாசத்தோடும், பரிவோடும் குரல் கொடுத்தார். அவள் குளறியபடி பதிலளித்துக் கொண்டிருந்தாள்.

அவள் அண்மையில் தான் அந்த குடியேற்றப்பகுதியில் குடியமர்ந்தவளாம். கணவன் நல்ல உழைப்பாளியாம். ஒரேயொரு பிள்ளை என்பதால் அவர்களைக் குடும்பக் கஷ்டம் அவ்வளவாக பாதிக்கவில்லையாம்.

அதனால் அப்பகுதியிலேயே அவர்கள் கொஞ்சம் வசதி படைத்தவர்களாக இருந்தார்களாம். இது பக்கத்து சகோதர கண்ணுக்குள் குத்திக் கொண்டிருந்ததாம். அவள் பக்கத்து குடும்பங்களுக்கெல்லாம் இயன்றவரை முழுமையாக உதவியும் இருக்காளாம்.

அன்று தனது கணவன் இரவிலும் வேலை செய்யப் புறப்பட்டு விட்டானாம். அவளும் சிறுமியும் மட்டுமே அந்த சிறு வீட்டில் இருந்தார்களாம். அப்போது ஒரு கும்பல் அவர்கள் வீட்டை முற்றுகையிட்டதாம். அதில் அவள் பார்த்த முகங்களும், பழகிய முகங்களும் இருந்தனவாம்.

பூட்டியிருந்த கதவை உடைத்தார்களாம். சிறுமி அச்சத்தோடு

அலறினாளாம். அந்த அரக்கன் கையில் இருந்த வாள் ஒன்று சிறுமியின் கழுத்தை தொட்டுச் சென்றதாம். இரத்தம் தெறிக்க மீண்டும் சிறுமி அபயக்குரல் கொடுத்தாளாம். அடுத்த வெட்டு சிறுமியின் காலில் விழுந்ததாம். அத்தோடு சிறுமியும் மயங்கி விழுந்தாளாம். அந்த அதிர்ச்சியால் தானும் மயங்கி விழுந்தாளாம்.

உணர்வு வந்து விழித்தபோது வீடு தீப்பற்ற ஆரம்பித்ததாம். வந்த கும்பல் வீட்டில் இருந்த உடைமைகளையெல்லாம் சுருட்டிக்கொண்டு ஓடியதாம்.

அப்போதுதான் தன்னைச் சூழ்ந்திருக்கும் ஆபத்தை உணர்ந்தாளாம் அவள். சிறுமியையும் தூக்கிக் கொண்டு இருளில் ஓடி - காடுகளின் ஊடாக இரவு முழுக்க அலைந்து - இந்த சாலை ஓரத்திற்கு இப்போதான் வந்தாளாம். அதுவரை அவளுக்கு எந்த உதவியும் பாதுகாப்பும் கிடைக்கவில்லையாம்.

அவளின் கண்ணீர்க்கதை சௌந்தரின் கண்களையும் கலங்கவைத்தது. அந்தச் சிறுமியில் தனது மூன்றாவது மகளின் சாயல் தெரிவதை உணர்ந்தான் சௌந்தர். அவனுக்கு உருக்கம் அதிகரித்தது. "பிள்ளையே பெறாத கல்நெஞ்சக்காரன் தான் இதை செய்திருக்க வேண்டும்...." கிளீனர் ஆத்திரத்துடன் கூறினார்.

சிறுமி உணர்விழந்து கொண்டிருந்தாள். அவள் உயிரை எப்படியோ காக்க வேண்டும் என்ற வைராக்கியம் சௌந்தருக்கு. தனது கட்டுப்பாட்டை மீறாத உச்ச வேகத்தில் லொறியை இயக்கிக் கொண்டிருந்தான் சௌந்தர். அந்தத் தாயோ கண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தாள்.

கிளினர் சிறுமியின் தலையைத் தனது மடியில் கிடத்தி அவளைப் பக்குவமாகப் பிடித்துக் கொண்டிருந்தார்.

அப்போதான் பின்னால் லொறியை ஒரு கார் தொடர்ந்து வந்துகொண்டிருப்பதை அவதானித்தான் சௌந்தர். கார் லொறியை நெருங்கிக் கொண்டிருந்தது. 'சைற்'கேட்டு நச்சரித்தபடி கார் தொடர்ந்து கொண்டிருந்தது.

அந்த ஒடுக்கமான சாலையில் அந்த காருக்கு வழி விட்டுக் கொடுப்பதானால் அதில் ஒரு பத்து நிமிடங்களாவது விரயமாகிவிடும். ஒரு செக்கன்கூட விரயமாகக் கூடாது என்பது சௌந்தரின் எண்ணம். அந்தச் சிறுமியின் உயிரைக் காக்கும் வரை எதற்கும் தயராகவே இருந்தான் சௌந்தர்.

லொறி 'அம்பியூலன்ஸ்'போல் அசுர வேகத்தில் சென்று கொண்டிருந்தது. அதனோடு போட்டிபோட்டு 'சைற்' கேட்டபடி காரும் தொடர்ந்து கொண்டிருந்தது.

ஓட்டமாவடிவரை இந்த ஓட்டம் தொடர்ந்தது. ஓட்டமாவடிப் பால புகையிரத 'கேற்று'க்கள் மூடப்பட்டிருந்தன. திடீரென 'விறேக்' கைப் போட்டு நிறுத்தினான் சௌந்தர். காரும் லொறியோடு முட்டியும் முட்டாமலும் பயங்கரச் சத்தத்தோடு நின்றது.

காரின் கதவு பலமான ஓசையோடு திறந்து கொண்டது. அதில் இருந்து ஒருவர் இறங்கி வந்தார். சௌந்தரைப் பார்த்து ஏதோ கோபமாகப் பேசினார் அவர். மொழி புரியாது சிரித்தான் சௌந்தர். அவருக்கு ஆத்திரம். சௌந்தரை கைநீட்டி அறைந்தே விட்டார். அதிர்ந்து விட்டான் சௌந்தர். அவனுக்கும் ஆத்திரமாகவே இருந்தது.

சிறுமியின் உயிரை பற்றிய எண்ணமே அவனுக்குள் ஓங்கி நின்றதால்.... அவன் தன்மான உணர்ச்சிகள் அமுங்கிப் போயின. அறைந்தவர் போய் காரில் ஏறிக்கொண்டார். அடுத்து கார்ச் சாரதி வந்தார். அவனும் அந்நிய மொழியில் அட்டகாசமாக சௌந்தரைப் பார்த்து முழங்கினான். அடுத்து அந்த லொறியின் இலக்கத்தை குறித்துக் கொண்டு சென்று விட்டான்.

"மெயில் றெயின்" ஓட்டமாவடிப் பாலத்தைக் கடந்து கொண்டிருந்தது. பாலத்தின் கதவு திறபட லொறியை அசையவிட்டான் சௌந்தர்.

வாழைச்சேனை அரசினர் வைத்தியசாலையில் சிறுமியைச் சேர்த்தான் சௌந்தர். ஐந்து நிமிடம் பிந்தியிருந்தால் சிறுமியின்

உயிரைக் காப்பாற்றி இருக்கவே முடியாது என்று டாக்டர்கள் கூறியபோதுதான் செளந்தருக்குச் சற்று நிம்மதியாக இருந்தது.

சைற்கொடுக்காததிற்காக பட்ட அறையின் வேதனைகூட அகன்று விட்டது செளந்தருக்கு. அந்தத் தாயின் கருணையான பார்வையைப் பரிசாகப் பெற்று பயணத்தைத் தொடர்ந்தான்.

'சலுசல' சாமான்களைச் சங்கத்தில் பாரம் கொடுத்து தனது தலைப்பாரத்தை குறைத்துக் கொண்டாலும், அந்தச் சிறுமியின் பரிதாப முகம் அவன் நெஞ்சுக்குப் பாரமாகவே இருந்தது.

பயணக்களைப்பிலும் கவலை கொள்ளாதவனாக மறுபடியும் வாழைச்சேனை வைத்தியசாலைக்கு சிறுமியை பார்க்கச் சென்ற செளந்தர் அவளை மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு மாற்றிவிட்ட செய்தி கேட்டு பரிதவித்தான்.

மட்டக்களப்பு வைத்தியசாலைக்குச் சென்று அந்தச் சிறுமியைத் தேடிக்கண்டான் செளந்தர். அவளுடைய வலதுகால் பாதம் அகற்றப்பட்டிருந்தது. ஆஸ்பத்திரி என்று பாராமலேயே அலறி விட்டான் அவன். அந்தத் தாய்க்கு ஆறுதல் சொல்ல வேண்டிய செளந்தரே தளர்ந்து விட்டான்.

வீட்டுக்கு வந்த செளந்தருக்கு மனைவியின் வழக்கமான உபசரணைகள் தலையிடியைக் கொடுத்தன. எதிர்காலத்தைப் பற்றிய ஏக்கமே அவனுள் எதிரொலித்துக் கொண்டிருந்தது. ஆறு குழந்தைகளின் பாதுகாப்பு.... எதிர்காலம் இரண்டும்-இருந்தாற் போல் அவனை- இருளடைந்த ஒரு கண்டத்திற்கு இட்டுச் செல்வது போல் இருந்தது.

செளந்தரின் மனைவி அவனுடைய அப்போதைய மனநிலையைப் புரிந்து கொள்ளவில்லை. எனினும் அவரிடம் அந்த சந்தோஷமான செய்தியை சொல்லிவிடத் துடித்தாள்.

"அடுத்த பயணத்தில எனக்கு 'கிறேப்ஸ்' வாங்கி வாங்கோ....." குழந்தை போல் நாணத்தோடு அவள் கூறினாள்.

அதுகூட சௌந்தருக்கு அதிர்ச்சியாகவே இருந்தது. அவளுடைய தாம்பத்திய வாழ்க்கையில் இந்த ஆசை ஆறுதடவை வந்திருக்கிறது. 'கிறேப்ஸ்' கொடுத்து எட்டாம் மாதம் சௌந்தர் கையில் ஒரு குழந்தை. இது தான் நடைமுறை

"இன்னுமொரு ஆண் குழந்தை" ஆசையின் ஆக்கபூர்வமான அத்திவாரம் ஆரம்பமாகி விட்டது....." என்று கணித்து உள்ளூர சௌந்தர் களிப்படைந்தாலும் அவனுக்குள் ஏதோ கவலை.

சௌந்தரின் மனைவியின் கெட்டித்தனத்தால் தான் குடும்பம் கௌரவமாக இருக்கின்றது. ஆறு பேரில்.... ஐந்து பெண்களும் தரமான கல்லூரிப் படிப்பை மேற்கொண்டிருக்கிறார்கள். பட்டினி கிடந்தாயிலும் 'ரியூசன்' எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மூன்று பெண்கள் பருவம் அடைந்தும் விட்டார்கள். அவர்களைப் பற்றி எந்தச் சந்திக்கும் கதைகள் வருவதில்லை.

சௌந்தரின் மனைவி குடும்பப் பொறுப்புகள் அனைத்திலும் தனது திறைமையைப் பதிக்கவே செய்தாள். அதனால் சௌந்தருக்கு உழைப்புப் பிரச்சினையைத் தவிர எதுவும் இல்லை.

சௌந்தரின் மனைவி சௌந்தருக்குச் சாப்பாட்டைப் போட்ட படியே இந்த மாதத்திற்கான முக்கிய செலவினங்களைப்பற்றி இங்கிதமாக கூறிக் கொண்டிருந்தாள். "மூத்தவள் 'ஏ / எல்' லுக்கு 'அப்ளிகேஷன்' போட வேணுமாம். எண்பது ரூபாயாம் முத்திரை. இந்த முறையெண்டாலும் அந்த முருகன் கண்முழிச்சா-ரெண்டா....அவள ஒரு மாதிரியா கரை சேர்த்துப் போடுவார்..."

"சரி..."

இந்த முறையோடு பிறைவேற் ஆக்கள் ஓ.எல். எடுக்க ஏலாதாம் சின்னவள் ஓ.எல்லுக்கு அப்ளிகேசன் போட ஆசைப்படுகிறாள் அதுக்கும் ஒரு முப்பத்தைஞ்சு.... தேவைப்படும்.."

"சரி"

"தம்பியிர பள்ளியால 'ரூர்' போகப் போறாங்களாம். அவன்

ஒத்தக் கால்ல நிக்கான். அதுக்கு இருநூறு வேணுமாம்...."

"இப்ப நம்ப நாடு இருக்கிற நிலையில 'ரூர்' போறது புத்திசாலித்தனமில்ல....." - எல்லாவற்றிற்கும் 'சரி' போட்ட சௌந்தர் அதற்கு மட்டும்..... சிறுமியை நினைத்ததாலோ என்னவோ மறுத்தே விட்டான்.

"தனது ஒரேயொரு மகனுக்கும் அந்தச் சிறுமி மாதிரி..... போகும் வழியில்... ஏதாவது... நடந்து விட்டால்...." - அதைக் கற்பனை செய்து பார்க்கும் தைரியமும் இல்லை சௌந்தருக்கு.

பணத்திற்கான தனது குழந்தைகளின் ஆசைகளை நிராகரித்தவன் அல்ல; தனது கைகளில் நம்பிக்கை கொண்டவன் சௌந்தர்.

"சனி ஞாயிறோடு சேர்த்து இரண்டு நாள் லீவு போட்டு விட்டு.... யாழ்ப்பாண - மட்டக்களப்பு மினி பஸ் (பிறைவேற்) இரண்டு 'றிப்' அடிச்சால் எப்படியும் முன்னூறு கொத்தும்..... பிள்ளையள் சோதனைக் காசி பிரச்சினையில்லை.....' என்று திட்டமிட்டு படுக்கைக்குச் சென்றான் சௌந்தர்.

பணக்கஷ்டம் வரும்போது இப்படி "பிறைவேற்" "மினிவஸ்" ஓடி சமாளிப்பது சௌந்தரின் வழக்கம். அதனால் அவருக்கு பெரிய பணமுடை என்று சொல்லுமளவிற்கு அவன் என்றுமே இருந்ததில்லை.

ஓய்வில்லாத உழைப்பு - இதுவரை அவன் எந்த விபத்திலும் சிக்கவில்லை. 'லைசென்ஸ்' புத்தகம் கூட வெறுமையாகவே இருந்தது. கெட்ட பழக்கம் என்று சொல்ல அவனிடம் எதுவும் இல்லை. கண்விழித்து லொறி ஓடும் காலங்களில் மட்டும் சிகரெட் புகைப்பான். வீட்டில் அதுவுமில்லை.

'அன்று அந்த வீட்டில் உண்ணாமல் உறங்கியவன சௌந்தரின் ஒரேயொரு மகனே. தாய் தந்தையரின் உரையாடலை ஒட்டுக்கேட்டுக்கொண்டிருந்த அவனுக்கு, தந்தை எடுத்த முடிவு எதிர்பாராதது. அந்த 'ஓர்' ஏமாற்றம் அவனை என்னவோ செய்து கொண்டிருந்தது. சுருக்கமாகச் சொன்னால் அவனால் அதைத்

தாங்கிக் கொள்ள முடியவில்லை.

நள்ளிரவில் கிணற்றில் 'சளார்' என ஒரு சத்தம். சந்தேகத்துடன் விழித்தாள் சௌந்தரின் மனைவி. கிணற்றுப் பக்கம் இருந்து 'அம்மா' என்றொரு அலறல். அவ்வளவுதான். அந்த குரலை அடையாளம் கண்டபடி துடித்து எழுந்தாள் அவள்.

அவள் சௌந்தரை எழுப்பி கிணற்றை எட்டிப்பார்த்தபோது... அங்கு தண்ணீருக்குப் பதில் இரத்தம். அந்த ஒரே மகன் தலைபிளந்த நிலையில் தண்ணீருக்குள் கிடந்தான். அந்த ஆசைமகனின் அஸ்தமனத்தை சௌந்தர் அவ்வளவு விரைவாக எதிர்பார்க்கவேயில்லை.

எந்தக் குறையும் தெரியவிடாமல் வளர்ந்த மகனின் பிரேதத்தைக் கண்டு பித்துப் பிடித்த நிலையில் நான்கைந்து தினங்கள் இருந்தான் சௌந்தர்.

அதிகளவு செல்லம் கொடுத்ததின் விளைவுதானோ இந்த விபரீத மரணம் என்று கூட நினைத்தான். மனைவிதான் அவனுக்குத் தைரியமூட்டிக் கொண்டிருந்தாள். இருவரும் ஒருவருக்குத் தெரியாமல் ஒருவர் அழுது தங்கள் மனச்சுமையை மட்டுப்படுத்திக் கொண்டு வந்தார்கள்.

அன்று பேரதிர்ச்சி ஒன்று காத்திருந்தது சௌந்தருக்கு. நீதிமன்றத்தில் இருந்து 'சம்மன்ஸ்' வந்திருந்தது. விலாசம் மாறி வந்திருக்குமோ என்று கூடச்சந்தேகித்தான். சந்தேகமேயில்லை. அவனுக்கே உரியதுதான்.

குறித்த தினத்தில் 'லைசென்ஸ்' புத்தகத்துடன் நீதிமன்றத்தில் நின்றான் சௌந்தர். அவனுடைய 'ட்ரைவிங்'கைப் பற்றி பல குற்றச்சாட்டுகள்.

சௌந்தரின் லைசென்சை ஐந்து வருடங்களுக்கு ரத்துச் செய்து விடுவதாக நீதிபதி அறிவித்தார். சிலையாக நின்றான் சௌந்தர்.

அவனுக்கு 'ட்ரைவிங்கை' தவிர எந்தத் தொழிலும் தெரியாது. இன்னும் ஐந்து வருடங்களின் பின் நிரந்தரமாக ரத்துச் செய்யப்பட்டிருந்தாலும் அவன் அதைப் பற்றிக் கவலைப்படமாட்டான். காரணம் அப்போ தன் குழந்தைகளின் நிழலில், தயவில் நின்று கொள்ள முடியும். ஆனால் இப்போ.....

இன்னும் சில மாதங்களில் அடுத்த குழந்தையும் பிறந்துவிடும். குழந்தைகளின் உச்சக் கட்ட கல்வி, உணவுச் செலவுகளைச் சந்திக்கும் காலம்.

நடைப்பிணமாக நீதிமன்றத்தை விட்டு வெளியேறினான் சௌந்தர். வாசலில், அன்று காரில் வந்த கனவான்... (சௌந்தரை அறைந்தவன்) அட்டகாசமாகவும், அலட்சியமாகவும் சௌந்தரைச் சுட்டிக்காட்டி சிரித்தபடி, நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்தான்.

பக்கத்தில் நின்ற தனது நண்பர்களிடம் அந்த கனவானைப் பற்றிக் கேட்டான் சௌந்தர்.

அவர் இம்மாவட்டத்தின் முக்கிய அரசியல் பிரமுகராம். அரச மட்டத்திலும் செல்வாக்கு மிக்கவராம். நினைத்ததைச் சாதிக்கும் சர்வ வல்லமைக் கொண்டவராம்.

அப்போதான் சௌந்தருக்கு உண்மை என்னவென்று விளங்கியது. வேதனையோடு சிரித்தான். "இந்த ஆசாமியின் வேலைதானா இது"- என்று அவனது மனம் அருவருத்துக் கொண்டது.

"அந்த காருக்கு வழிவிடாததற்கு....என் வாழ்க்கைக்கு இருந்த ஒரேயொரு வழியையும் அடைத்து விட்டீர்களா.....?" - சௌந்தரின் பெருமூச்சு எங்கும் பரவியபடி இருந்தது.

(கற்பனையே)

# அர்த்தங்கள் தெளிவாகின்றன!

நகர்ப்புற வாழ்க்கை அலுத்துப்போய்விட்டது. நானாகவே விரும்பி இடமாற்றம் பெற்றேன். பொறுப்புகளைக் கையேற்க முன் அந்தச் சிறிய குன்றில் குடிகொண்டிருக்கும் குமரனை, கற்பூர ஒளியில் கண்டு மனம் கசிந்தேன்.

இயற்கை அழகை வகைப்படுத்திப் பார்க்கக் கூடிய குன்று அது. அமைதியான சூழல். இயற்கையின் இதமான ஆரவாரங்கள் இணைந்து புனிதத்தை புலப்படுத்தும் புதுமை.

முருகனின் ஆலய தரிசனம் முடிந்து படிகளில் இறங்கிய போது....

"அண்ணா.... மன்னிக்க வேணும்..." என்ற குரலைக் கேட்டுத் திரும்புகிறேன்.

விபூதிக் கீற்று, திறந்த மார்பு, திடகாத்திரமான உடற்கட்டு, நான்குமுழ வேட்டி, அவனது வயதில் ஐந்தைக் குறைக்கும் குறுநகை.....

"என்ன தம்பி?" - அவன் அழகையும் ரசித்தபடி கேட்கின்றேன்..

"நீங்கதானே புதிய ஜி.எஸ்.ஓ....?"

"ஆமாம் தம்பி, நீங்க...?"

''இந்த ஆலய பரிபாலன சபையில் நானும் ஒரு அங்கத்தவன்.''

"நல்லது. படிக்கிறீர்களா?"

"வங்கி ஒன்றில் பணிபுரிகின்றேன்."

வசதியான தொழில் இருந்தும் இதில் ஈடுபாடுள்ள அவன் என் இதயத்தை ஈர்த்தபடி நிற்கின்றான்.

''அரன்....!'' ஐயரின் அழைப்பை ஏற்று அவன் திரும்புகின்றான், "பூஜைக்கு ஆயத்தம்... ஜி.எஸ்.ஓ. பூஜை பாத்திற்றுப் போங்க....."

பூஜை ஆரம்பிக்கும் வரை இயற்கை வனப்பை அள்ளிப் பருக என் இதயம் ஆசை கொள்கின்றது, தொலைநோக்கியை எடுத்து மாட்டுகின்றேன்.

ஆங்காங்கே தெரியும் குடிசைகளின் அழகே தனி, சேனைகளில் போடப்பட்டுள்ள பரண்கள்.... சிறு பாய்களை அந்தரத்தில் விரித்தது போல் அருமையாக இருக்கின்றன. ஆலய மணி ஓசை கேட்கின்றது.

அயலில் உள்ள சிறுவர், சிறுமியர் மகிழ்ச்சியுடன் மலையில் ஏறி வருகின்றனர். தொலைநோக்கியைத் துல்லியமாகப் பார்க்கின்றேன். தூரத்தே தள்ளாடியபடி தனியாக நடந்து வரும் அந்தத் தாயைப் பார்க்கின்றேன். அந்தோ பரிதாபம்!

அரனிடம் சொல்லிக் கொள்ளாமல் அவசரமாக மலை இறங்குகின்றேன். மலையடி வாரத்தில் வைத்திருந்த எனது மோட்டார் சைக்கிளை இயக்குகின்றேன். அப்பாதையால் வேகமாக ஓடவும் முடியவில்லை. ஒருவாறு அந்த இடத்தை அடைந்து விட்டேன்.

அந்தத் தாய் தலையில் சுமந்து வந்த நெற்கதிர் கட்டு சிதறிக் கிடந்தது. அவள் மூர்ச்சையற்றுக் கிடந்தாள். அக்கம

பக்கம் குடிசை எதுவும் தென்படவில்லை. வரும்போது தூரத்தில் தெரிந்த அந்தக் குடிசையை நோக்கிச் சென்றேன்...

"அரன் ஐயாவா..... வாங்க" அந்த இனிய இளங்குரல் என்னை அழைக்கின்றது. என்னை நோக்கி ஓடிவந்தவள் ஒரு கணம் நின்றாள்...

பதினாறும் நிறையாத அவள் பாவாடை சட்டையோடு பதுங்கியபடியே பின்னோக்கி நகர்கின்றாள்... என்னை அந்நியன் என்று அடையாளம் கண்டு விட்டாள் போலும்...

"பயப்படாதீங்க பிள்ள.... இஞ்சவாங்க.... நான்தான் புது விதானையார். இந்தப் பக்கமா ஒரு அம்மா மயங்கி விழுந்து கிடக்கா. ஒரு ஏனத்தில தண்ணி கொஞ்சம் எடுத்து வாறீங்களா...?"

"கடவுளே! அம்மாதானோ தெரியாது...." அலறியபடி ஓடுகின்றாள். பாத்திரம் ஒன்றைத் தூக்கியபடி என்னை நோக்கி வருகின்றாள்.

இருவரும் புறப்படுகின்றோம். அவளும் ஒருவித பதட்டத்தோடு என்கூடவே வருகின்றாள். மோட்டார் சைக்கிளை அவ்விடத்திலேயே விட்டு விட்டு ஓட்டமும் நடையுமாக முன்னேறுகின்றோம்...

அந்தத் தாயின் மீது தண்ணீரைத் தெளிக்கின்றேன். "எங்கட அம்மாதான் விதானையார்...." அவள் கண்கள் கலங்கக் கூறுகின்றாள். அந்தத் தாய் கண்விழிக்கின்றாள். தண்ணீரைப் பருகக் கொடுக்கின்றோம்...

"சக்தினி... எனக்கு ஒண்டுமில்ல மகள்., நீ அழாதே...! இது யாரு தம்பி.... முருகன் தான் உங்கள அனுப்பி வெச்சிருக்கான் போல இருக்கு..."

விடியத்தில வெறும் வயித்தோடு வட்டைக்குக் கதிர்புறக்க போக வேணாம் எண்டு எத்தனை தரம்தான் சொன்னனான்.... கேட்டாத்தானே..." சக்தினி தாயைக் கண்டிக்கின்றாள்.

அவளின் உரையாடல் அவர்களின் குடும்ப நிலையை எனக்கு உணர்த்துகின்றது. சிதறிக் கிடந்த நெற்கதிர்களைச் சேர்த்தெடுத்துக் கட்டுகின்றேன். எனது தோளில் தூக்கி வைத்துக் கொண்டு நடக்கின்றேன்...

"தம்பி, நீ கஷ்டப்படாத... சக்தினி தூக்குவாள்... உனக்குச் சுணைக்கும். பிள்ளட்ட குடு ராசா...." அந்தத் தாயின் கருணையான வார்த்தைகளுக்குக் கட்டுப்படாமல் அதனைக் குடிசை வாசலில் கரைசேர்க்கின்றேன்....

அவர்கள் என்னை உள்ளே அழைக்கின்றார்கள். என்னால் அதை நிராகரிக்க முடியவில்லை சென்று அமர்கின்றேன்.

"தம்பிக்கு ஒரு இளனி கொண்டாந்து குடு மகள்"

சக்தினி இளநீரை என்னிடம் நீட்டுகின்றாள். தாகசாந்தி அடைகின்றேன். அவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு, அகல்கின்றேன்.

அன்று சனிக்கிழமை. வானொலியோடு பொழுதைப் போக்கிக்-கொண்டிருக்கின்றேன். வாசல் கதவில் யாரோ தட்டும் சத்தம். குறுநகை குறையா அந்தக் குழந்தை முகம் வாசலில் நிற்கின்றது.

"உள்ளே வரலாமா?"

"வாங்க அரன்...!" நான் அவனை வரவேற்கின்றேன்.

"அண்டைக்கு பூசைக்கு நில்லாம வந்திட்டீங்களே"

நான் நடந்தவற்றைச் சுருக்கமாகக் கூறுகின்றேன். அந்த இனிய குறுநகையில், சோகம் குறுக்கிடுகின்றது.

"அந்தக் குடும்பத்தை உங்களுக்குத் தெரியுமா தம்பி"?

"நல்லாத் தெரியும். ஜி.எஸ். அதுகள்ர வாழ்க்கை ஒரு சோகக் கதை. அந்தக் குடும்பத்துக்கு எனது தனித்துவமான அனுதாபம் எப்பவும் இருக்கும்"

"சக்தினியின் தகப்பன் எப்ப செத்தவர் அரன்?"

"அவர் இப்பவும் உயிரோடு இருக்கார் என்றுதான் நான் ஊகிக்கிறேன்...."

"அப்ப அவர் சாகலையா?"

"அது பெரிய கதை" என்று கூறி, கதையைக் கூறுகின்றான்.

"கேட்க பரிதாபமாக இருக்கு அரன்..."

"அதுமட்டுமில்ல ஜி.எஸ். அதிலிருந்துதான் இதுகளுக்கு கஷ்டம் ஆரம்பிக்கத் தொடங்கியிருக்கு. முதல் இருந்த ஜி.எஸ். விவசாய கடன் பிணையை காரணம் காட்டி... உணவு முத்திரையை பறிக்க போறன் எண்டு வெருட்டி இருக்கார். ஒரு அரைப்போத்தலுக்கு அணைச்சிப் பார்த்திருக்கார். மனிசி அவியல்ல. அதுக்குப் பிறகு உணவு முத்திரை மறுபரிசீலனை செய்யக்குள்ள.... அதுகள்ர உணவு முத்திரையை ரத்துச் செய்து போட்டார்...."

"அப்பிடியா தம்பி. நான் அதுகளுக்கு நிச்சயமா எடுத்துக் குடுப்பன் தம்பி."

"அதுக்கு முதலே... நான் அவங்கள ஜி.ஏ. வரை கூட்டிப் போய் உணவு முத்திரை எடுத்து கொடுத்திட்டேன்".

"நல்ல காரியம் செய்திருக்கீங்க தம்பி...."

"நான் கஷ்டப்பட்டு எடுத்துக் கொடுத்தும் பிரயோசனமில்லாம போயிற்று. ஜி.எஸ்....."

"ஏன் தம்பி, பிறகும் ரத்து செய்து போட்டானா?"

"இல்ல ஜி.எஸ். மனிசி சக்தினிக்கு சீத்தை வாங்க ஆசைப்பட்டிருக்கு. சங்ககடை மனேஜர் இரண்டு பேர்ர முத்திரையையும் அப்பிடியே வாங்கிப் போட்டு... முத்திரையை ஈடுபிடிச்சு காசுதாறன் எண்டு சொல்லி இரண்டு சட்டைக்கு சீத்தையைக் கொடுத்துப் போட்டு... கணக்கு சரி எண்டு அனுப்பிப் போட்டான்...."

"இந்த மனேஜர்மார்ர திருவிளையாடல்கள் எல்லா இடத்திலயும் இருக்குத்தான் தம்பி. எங்கட பகுதியிலும் அளவு குறைவைப் பற்றியும்.... முத்திரை அடகுபிடிக்கிறதைப் பற்றியும் தான் முறைப்பாடு..."

"ஓம்.ஜி.எஸ். சண்டித்தனம் காட்டுறவனுக்கு எல்லாம் சரியாகக் கொடுப்பானுகள். இதுகளைப் போல சாதுகள் போனா அவனுகள்ர கைவரிசைதான். நம்மட சனங்களும் முத்திரையைக் காசுக்கு சமமாக மதிக்கிற இல்ல. பழைய கூப்பன். நினைவுதான். ஏதோ இலவசமா கிடைக்குது எண்ட பெருந்தன்மையோட..... பிரச்சினை ஏதும் எழுப்பாம..... கொடுப்பதை வாங்கிக் கொண்டு போகுதுகள்..."

"அதுமட்டுமில்ல தம்பி, சில ஊர்கள்ள... கடவுளைப் பகைச்சாலும்.... மனேஜர்மார பகைக்காதுகள். அவ்வளவுக்கு சனத்தைப் பழக்கி வெச்சிருக்கானுகள்..."

"நம்மட பகுதியில் கூட்டுறவுத்துறை முன்னேறாததுக்கு காரணம் ஏழைகள்ர சாபம்தான் எண்டு நான் நினைக்கிறேன் ஜி.எஸ்."

"உங்களைப் போல சுயநலமில்லாத இரண்டொரு துடிப்புள்ள இளைஞர்கள் எனக்குத் துணையாக இருந்தா.... இப்படியான திருவிளையாடல்களுக்கெல்லாம் ஒரு தீர்வுகண்டு போடுவேன்..."

"ஜீ.எஸ்.கோபிக்கக்கூடாது. நான் ஒண்டு கேப்பன் உண்மை சொல்லுவீங்களா?"

"என்னிட்ட மறைக்கிறதுக்கெண்டு எதுவுமில்லை தம்பி. தாராளமாகக் கேக்கலாம்..."

"நீங்க "ட்றிங்ஸ்" எடுக்கிற நீங்களோ?"

"நான் புகைக்கிறது கூட இல்ல!"

"அம்மாடி கொஞ்சம் ஆறுதலாக இருக்கு. நீண்ட இடைவெளிக்குப் பிறகு இப்பகுதியில் சேர்ந்து இயங்கக் கூடிய

ஒரு ஆள் கிடைச்சிருக்கு. இப்பதான் முருகன் கண் விழிச்சிருக்கார்....

"உங்களோடு சேர்ந்து நான் செயல்பட நான் எப்பவும் சித்தமாக இருக்கேன் தம்பி".....

"நன்றி ஜீ. எஸ். நம்மிட கூட்டு முயற்சியை முதல்ல முருகன் கோயில்ல இருந்தே ஆரம்பிப்போம்.........."

"நல்லது அரன்"....

"அடுத்த ஞாயிற்றுக்கிழமை முருகன் குன்றுக்குப் பக்கத்தில் சிரமதானம் மூலம் ஒரு பூங்காவனம் அமைப்போம் ஜீ. எஸ். இந்தப் பகுதி மக்களையெல்லாம் சேர்த்துத்தான் செய்ய வேணும். எல்லோருக்கும் மதிய போசனம் எனது பொறுப்பு......."

"நல்ல யோசனை தம்பி. எனது முழு ஒத்துழைப்பும் உங்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும். இன்றிலிருந்தே ஒழுங்கு செய்யுறன்.

நன்றி கூறி, விடைபெறுகிறான் அரன்.

அரனின் முழு முயற்சியால் வீதியில் ஊரே கூடி விட்டது. முருகன் குன்றுக்கு எதிர்ப்புறமாக அந்தக் குளத்துக்கு முன்பாக உள்ள நிலம் பண்படுத்தப்படுகின்றது.

சக்தினியும், அவள் தாயும் இன்னும் சிலரும் அந்த மர நிழலில் மதியபோசன சமையலுக்கு ஆயத்தம் செய்து கொண்டிருந்-தார்கள்.

அந்த சுறுசுறுப்பான சூழ்நிலையில் கமராவுடன் ஒருவர் வருகிறார். பத்திரிகை நிருபர். பல கோணங்களில் படம் எடுக்கிறார். பலரும் வற்புறுத்தியும் அரன் கமராவுக்கு முகம் காட்ட மறுத்து விட்டான். சக்தினியும் ஓடி ஒழிந்து கொண்டாள். கமராவுக்கு முகம் காட்ட அரட்டை அடித்துக் கொண்டிருந்தவர்களும் அடிபிடிப்-பட்டார்கள்.

நான் அரனை அணுகி கமராவுக்கு ஒரு தடவையேனும் முகம் காட்டும்படி கெஞ்சுகின்றேன்.

ஜீ.எஸ். என்னை மன்னிக்க வேணும் எனக்கு எலக்ஸனில் நிற்கிற எண்ணமில்ல....."

இருவரும் மனம் விட்டுச்சிரிக்கின்றோம். கடினவேலை. எல்லோரும் களைத்து விட்டார்கள். களைப்பாறுகின்றார்கள்.

மதிய போசனத்துக்குப்பின் சிறிது நேரம் ஓய்வு எடுக்கின்றோம். அடுத்து மீண்டும் சிரமதானம் சிறப்பாகத் தொடங்கி விட்டது.

எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு மலர்ச் செடிகளை நட ஆரம்பித்து விட்டார்கள். பவள மல்லிகையை நடுவதில் அரனுக்கும் சக்தினிக்கும் பலமான போட்டி கடைசியாக மஞ்சள் றோஸ் செடி ஒன்று மட்டுமே மிஞ்சியது.

"யாருக்கு இதை நட விருப்பம் என்று கேட்டான்....." அரன் சக்தினி தன்னிடம் தருமாறு கேட்டாள். அவன் மறுத்தான். இருவரும் அந்தச் செடியைப்பற்றிக் கொள்வதில் போட்டி போட்டுக் கொண்டிருந்தார்கள்.. நான் குறுக்கிட்டேன்.

"இருவருமே சேர்ந்தே நடுங்கள் பிரச்சினை..... இல்லை..... என்கிறேன்.

சக்தினியும், அரனும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி நின்றார்கள்.

"அப்படியே நாட்டுவமா?" அரன் சக்தினியிடம் கேட்கிறான்.

அந்த மஞ்சள் றோசா செடியை இருவரும் நடுகின்றார்கள். அதற்கு நானே தண்ணீரும் ஊற்றுகிறேன்.

மாலை மயங்கிக் கொண்டிருந்தது. பூங்காவனம் தண்ணீரால் பூரித்துப்போய் நின்றது. சமையல் தளபாடங்கள் ட்ராக்டரில் ஏற்றப்படுகின்றன. பெண்களும் அதில் ஏறிக்கொள்கின்றார்கள். அப்போதும் அரனும் சக்தினியும் ஏதோ சுவாரஸ்யமாக பேசிக் கொண்டிருந்தார்கள்.

அந்த நேரம் பார்த்து என்னைச் சக்தினியின் தாயார் அழைக்கின்றார்.

"தம்பி நீ.... என்னோட நல்லாப் பழகிறதால மனசிலவெச்சிக்க ஏலாம கேட்கிறன். அரன் புள்ளயோட பழகுறத பத்தி என்ன நினைக்கயள்....."

நான் நிலைதடுமாறி நிற்கிறேன். நான் நினைத்ததையே தாயார் கேட்கின்றார்.

"அம்மா அரன் தங்கமான பெடியன். நற்குணசாலி. அதால நீங்க என்னமாதிரி நினைக்கிறீங்களோ, அதே மாதிரித்தான் நானும் நினைக்கிறேன்....."

"அப்பிடியெண்டா தம்பி, நீ தான் அந்த தம்பியோட கதச்சு ஒரு முடிவுக்கு வரவேணும். எங்களுக்கு வேற யாரு இருக்கா மனே...."

"இண்டைக்கே கேட்டுச் சொல்றன் அம்மா...."

ட்ராக்டர் அசையத் தொடங்குகின்றது. சக்தினியும் ஓடிச்சென்று ஏறுகின்றாள். அவளது தாயை நானே கூட்டிச் சென்று அதில் ஏற்றி விடுகின்றேன்.

ட்ராக்டர் எழுப்பிச் செல்லும் புழுதி அடங்கும் வரை நானும் அரனும் பொறுத்திருக்கின்றோம். அரனின் அடி மனதை அறிந்து விட வேண்டும் என்ற ஆதங்கம் எனக்கு. அமைதியான சூழல்.

"என்ன ஜீ. எஸ். யோசிக்கிறீங்க....?" அரனே கேட்கின்றான்.

"உங்கட திருமணத்தைப்பற்றி.....!"

"நானே அதைப்பற்றி சிந்திக்கவே இல்ல....."

"காரணம்...?" - அரனைக் கூர்ந்து நோக்கியபடி கேட்கிறேன்.

"கடமை. கல்யாண வயசில் இருக்கும் ஒரு அக்கா. ஒரு தங்கை. சின்ன வயசிலேயே தந்தையை இழந்தவன் நான். இந்த நிலையில.....?

"அக்காவுக்கு மாப்பிள்ளை தேடி விட்டீங்களா?"

"என்ர தரத்தில தான் தனக்கு மாப்பிள்ளை வேணுமாம் என்று அக்கா அடம்பிடிச்சாள். சகபணியாளன் ஒருவனைப்பேசி இருக்கன். என்ர ஐந்து வருட உழைப்பு, வங்கியில் நான் பெற்ற உச்சக்கடன், இரண்டையும் சேர்த்து ஐம்பதில் ஒரு வீடு கட்டியிருக்கின்றேன். அதோட ஐம்பது ரொக்கமும் கொடுக்க வேணும்....."

"அக்காடதை சமாளிச்சா...... அடுத்தது உங்கடதை செய்யுறது தானே.....?"

"தங்கச்சிக்கும் வயது பதினெட்டு. அக்காவுக்கு கொடுத்த மாதிரித்தான் அவளுக்கும் கொடுக்க வேணும். அதே வீடு மாதிரிக்கட்ட இப்ப ஒரு லெட்சம் வேணும். ரொக்கமும் ஒன்றில்தான் நிற்கும்."

"அப்பிடியெண்டா தங்கச்சிர விஷயத்தை எப்படிச் சரிக்கட்டப் போறீங்க தம்பி.....?"- அனுதாபத்துடன் அரனிடம் கேட்கின்றேன்.

"சீதனச் சந்தையில் நானும் ஏலம் போறதைத்தவிர வேறு வழியில்ல ஜீ. எஸ்."

"அப்படியெண்டா சக்தினி?"

"சகோதர உறவுக்கு அவளும் ஒருத்தி அவ்வளவுதான்."

என்னால் மேற்கொண்டு பேச முடியவில்லை மோட்டார் சைக்கிளை ஸ்ராட் பண்ணுகிறேன்.

அது இயங்க மறுத்து விட்டது. பெற்றோல் தீர்ந்து விட்டது. அதை பாதை ஓரம் ஸ்ராண்டில் நிறுத்துகின்றேன்.

எனக்குச் சீதனமாகக் கிடைத்த மோட்டார் சைக்கிளின் "சைட்" கண்ணாடியில் என் முகத்தைப் பார்க்கின்றேன். கண்ணாடியிலும் புழுதி. என் முகத்திலும் புழுதி.

(யாவும் கற்பனை)

## மறுபடியும் ஒரு மனுநீதி

"வேலை போனாலும் வேதனை இல்லை. வேள்வி செய்ய வேண்டிய வேளை இது"- மனது மந்திரிக்க, வேங்கை போல் வீட்டை விட்டு வெளியேறினான் சந்த்ரு.

காலன் காலில் நசுங்கும் குழந்தைகள். காத்திருக்க நேரமில்லை. காணிக்கை செலுத்தியாக வேண்டிய கட்டாயம் அவனுக்கு.

அந்தக் காரியாலயத்தை அசுர வேகத்தில் அடைந்து விட்டான் அவன். அலுவலக ஆரவாரங்கள் அரங்கேறிக் கொண்டிருந்தன. அஞ்சும், பத்தும் கைமாறிக் கொண்டிருந்தன.

அடையாளம் கண்டுகொண்ட அறையை அண்மித்துவிட்டான் சந்த்ரு. அதிர்ஷ்டம் அவன் பக்கம். ஆட்கள் யாரும் இல்லை. அதிகாரி அண்ணார்ந்து பார்த்தபடி தனியாக அமர்ந்திருந்தார்.

அலாதியாக அறையினுள் நுழைந்தான். அவன் அறைக் கதவை மெதுவாகத் தள்ளி.... 'படா'ரெனத் தாளிட்டான். தடுமாறித் தலை நிமிர்ந்தார் அதிகாரி. கத்தியை நீட்டி கதிரையை இழுத்து அமர்ந்து கொண்டான் அவன்.

முகத்தில் முழுமையான கோபமின்னல்கள். கண்களில் அணுவீச்சு. சந்த்ருவுக்கு அவரைக் கண்டதும் உடல்முழுக்க மாற்றம் பரவியது.

சந்த்ருவை அவதானித்து அவதிப்பட்டார் அதிகாரி. அவன் மேசையில் கடிதத்தைப் பிரித்து வைத்தான்.

அதை மனதுள் படித்தார் அதிகாரி. "எனக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?" என்பது போல் அவனை ஏறெடுத்துப் பார்த்தார்.

"என்ன- சந்தோசம் தானே...?" சினத்துடன் சீறினான் சந்த்ரு.

வியர்வையைத் துடைத்தபடி, வேகமாகச் சுழலும் மின் விசிறியை வெறிக்க வெறிக்கப் பார்த்தார் அதிகாரி.

"ஒரு செக்கன் வியர்வையும் உங்களுக்கு ஒத்துக்கொள்ளாது..... இல்லையா...? ஏழைகளுக்கு வியர்வை நாள்முழுக்க தெரியுமா?" - மின்விசிறியை நிறுத்தினான்.

"சுழலும் இருக்கை. சுகமான காற்று. சுளையாகச் சம்பளம். சும்மா இருந்து அரட்டையடிக்க ஆளணி. ஏழைகளின் வாழ்க்கைச் சுமை தெரியுமா உங்களுக்கு.....?" - அவன் அதட்டலாகச் சொன்னான்.

"பூட்டிய அறைக்குள் பூவுலகம் தெரியாது. புறப்படுங்கள் போவோம்....? - சந்த்ரு இருக்கையில் இருந்து எழுந்தான்.

"தம்பி......நான் இப்போ உங்களுக்கு என்ன செய்ய வேண்டும்......? அதிகாரியின் வார்த்தைகளில் மரியாதையின் வாசனை.

"ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. ஒத்து வந்தால்போதும். ஒத்துவரா விட்டால்..... கத்திக்கென்ன கண்ணா இருக்கின்றது? அது ஆசைப்பட்டதை அபகரித்துக் கொள்ளும்..."

அவர் நம்பிக்கையுடன் சுவர் மணிக்கூட்டைப்பார்த்தார். சந்த்ருவுக்கு சிரிப்பு வந்தது.

"ஐயா உங்க பழக்க தோஷம்.... கடிகாரத்தைப்பார்த்து... காரியமாகாமல் கை விரிப்பதுதான்.... நான் உங்களுக்குக் கைகொடுக்கிறேன். எழும்புங்கோ..." அவன் கதிரையில் இருந்தவரை இழுத்து., எழுப்பி விட்டான்.

"ஐயா என்னோடு ஒத்துழையுங்கள். உங்களுக்கு ஒன்றுமாகாது."- கத்தியைக் காற்சட்டையிற் போட்டபடி கூறினான் சந்த்ரு. கதவைத் திறந்தான். அதிகாரி அவனைத் தொடர்ந்தார்.

தொலைபேசி அலறியது. அதிகாரி குழந்தைபோல் சந்த்ருவைப் பார்த்தார். அவன் அலட்சியமாக ஆனால் அர்த்தத்தோடு புன்னகைத்தான்.

"ஐயா தொலைபேசியை இரண்டாகப் பிளந்து, வலம், இடமாக மாற்றுங்கள்...."

அவர் விழித்தார். அவன் அசத்தலாகச் சிரித்தான்.

"ஐயா நீங்க பட்டதாரி. நான் சாதாரண படிப்பாளி. தமிழே விளங்காமல் தடுமாறுகின்றீர்களே..."

தொலைபேசி அடம்பிடித்து அலறிக் கொண்டே இருந்தது. "தொலைபேசி - பேசி - தொலை"!

ஆவலுடன் தொலைபேசி அருகே சென்றார். 'றிசீவர்' அவர் காதருகே நெருங்க, அவர் முகம் கறுத்தது. நெற்றியில் வியர்வை முத்துக்கள்.

ஓரிரு செக்கன் தான் அழைப்பு நீடித்தது. அடுத்து அவர் கலவரத்துடன், "ஹலோ...ஹலோ" என்றார். 'கட்' ஆகி கனநேரம் இருக்கும்.

வெறுமையாக றிசீவரை வைத்து விட்டு, "என் குழந்தைகள்?"- அவர் அழாக்குறையாக சந்த்ருவை பார்த்து அப்பாவிபோல் கேட்டார்.

அவர்களைக் காட்டத்தான்.... கூட்டிப்போகின்றேன்...."

"எங்கே?"

"ஆஸ்பத்திரியில்...."

"எப்படி இருக்கின்றார்கள்?"

"ஆபத்தான கட்டத்தை இன்னும் தாண்டவில்லை...."

"ஐயோ கடவுளே...." அவர் கண்களில் கண்ணீர் எட்டிப்பார்த்தது.

துவிச்சக்கர வண்டியில் அவரை ஏற்றிக் கொண்டான் சந்த்ரு.

"தம்பி....பிளீஸ்........ கொஞ்சம் விரைவாக......"- அவர் கெஞ்சினார்.

"ஐயா அண்டைக்கு நானும் இப்படித்தான், பலசோதனைச் சாவடிகளையும் தாண்டி, அனாவசிய தாமதங்களையும் தாங்கி..... சாரதியைக் 'கெதியா', 'கெதியா' எண்டு துரிதப்படுத்தி....... 'கியர்' 'லொக்காகி', அதாலும் மேலதிக தாமதமாகி வந்து... விஷயத்தை விளக்கி... காசோலையை நீட்டியபோது... வங்கிக் கரும பீடம்... மூடுவதற்குப்போதிய அவகாசம் இருந்தும்... உங்கள் மேலதிகாரியிடம் அனாவசியமாக அனுமதி வாங்கி வருமாறு..... அலைக்கழித்தது ஞாபகம் இருக்குதா?"

"பிறகு நான் உதவி செய்ததானே....?"- அவர் சமாதானப்படுத்தினார்.

"மேலதிகாரியின் உத்தரவை நடைமுறைப்படுத்துவதற்குப் பெயர் உதவி அல்ல... உண்மையாகவே நீங்கள் உணர்ந்து, உத்தரவு கோராமலே அதைச் செய்திருந்தால் தான் உதவி.... நீங்கள் செய்ததோ உபத்திரவம்........ எமது பிரதேச நிலைமை உணர்ந்த எவனும், அவ்வாறு பிரச்சினைப்படுத்தப் பிரியப்பட மாட்டான்.... உதவி என்ற சொல்லுக்கு உட்கருத்துத் தெரியாமல் அதை உபயோகப்படுத்தாதீங்க....

முரளியின் பந்து வீச்சுக்கு, முன்அனுபவமில்லாத சிறுவன் ஒருவன் முகம் கொடுத்த நிலையில் இருந்தார் அதிகாரி.

அவன் திட்டமிட்டோ, தற்செயலாகவோ முட்கம்பியை மிதித்து

விட்டது சைக்கிள். இருவரும் சைக்கிளை விட்டு இறங்கி விட்டார்கள்.

சைக்கிளைத் தள்ளி, அருகே இருந்த திருத்தும் கடையில் கொடுத்தான் சந்த்ரு.

"நடந்தே போவோம் தம்பி .."

"இப்படித்தான் ஐயா..... இன்றைய இயல்பு வாழ்க்கையில்.... இடையறா தாமதங்கள்..... தாராளம் தான். அது நமக்கென்று வரும்போது..... தாக்கம். அடுத்தவன் அதுக்கு ஆட்படும் போது...... தர்க்கம்"

எதிரே வெள்ளைக் கொடியுடன் பிரேத வாகனம் ஒன்று அவர்களை வரவேற்றது. அதிகாரி தலையில் கைவைத்து, கண்களைக் கசக்கிக் கொண்டார்.

அவர்களை அது அமைதியாகவே கடந்து சென்றது. அதில் கண் பதித்ததால், அதிகாரியின இதயத்தில் கவலை பதிந்தது.

அவர்கள் ஆஸ்பத்திரியை அடைந்த போது, பார்வையாளர் நேரம் முடிந்திருந்தது.

காவலாளி பார்வையாளர்களை கலைத்துக் கொண்டிருந்தான். சந்த்ரு காவலாளியை அணுகினான். அதிகாரியும் அவன் பின்னால் நின்றார்.

"எங்கிருந்து வருகின்றீர்கள்.....?" காவலாளி அரைவாசி அனுதாபத்துடன் கேட்டான்.

இடத்தைச் சொன்னான் சந்த்ரு.

"யாரைப் பார்க்க வேணும்?"

விபரத்தை சென்னான் சந்த்ரு பரிதாபப்பட்டான் காவலாளி.

"தடை முகாம்கள்.... சுற்றிவளைப்பு...... அசம்பாவிதங்கள்

தவிர்த்து..... தூர இடத்தில் இருந்து..... நேரத்துக்கு வாற என்டால் ஏலுற காரியமா..... டாக்டர்மார்ர கண்ணில படாம.... அஞ்சு நிமிஷத்தில..... பார்த்திற்று ஓடிவாங்க...." காவலாளி கதவைத் திறந்து விட்டான்.

"ஐயா இந்தக் காவலாளியைப் பற்றி என்ன நினைக்கிறீங்க?"

"கடவுள் மாதிரி..."

"இந்த மனிதன். மனிதனாகவே நடந்து கொண்டான்"-சந்த்ரு அழுத்தமாகக் கூறினான்.

ஆஸ்பத்திரி வாடை, 'வாட்டை' நெருங்க நெருங்க அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

அதை விட, அரட்டையும் சிரிப்பொலிகளும் நோயாளிகளின் முனகல்களை மூழ்கடித்துக் கொண்டிருந்தன.

விறாந்தையில் 'வாட்டை' எட்டிப்பார்த்து, துக்கமும், ஏக்கமும் எதிரொலிக்க, நெருங்கிய சொந்தங்கள் நிறையவே நிற்கின்றன.

"புனிதமான பணி செய்ய வந்தவர்களே இப்படிப் பொறுப்பில்லாமல் நடந்து கொள்கின்றார்களே....." அதிகாரியே ஆழ்ந்த கவலையோடு கூறினார்.

"ஐயா இவர்கள் சாதாரண ஊழியர்கள். நீங்கள் பொறுப்பு வாய்ந்த அதிகாரி. அலுவல் முடிக்க வந்தவர்கள் அலுத்துப்போய் நிற்க.... அலுவல் முடித்துக் கொடுக்க வேண்டிய பத்திரங்களை மேசையில் விரித்து வைத்து விட்டு... ஒரு செக்கனில் ஒப்பமிட்டு அனுப்ப வேண்டியதை... அப்படியே பார்த்தபடி உங்கள் இலிகிதர்களுடன் காரியாலயத்திற்கு சம்பந்தமில்லாத வெளி விடயங்களையெல்லாம் காரசாரமாக விவாதித்து களைத்த பின்னர் தானே.... கையெழுத்துப் போடுவீங்க..... அடுத்த அலுவல் அவர்கள் முடிப்பதற்குள் ஆகார இடைவேளைக்காக சென்று விடுவீர்கள்....... அவர்கள் பசியுடன் பெறுத்திருக்க... நீங்கள் புசிப்பதற்குப் பூச்சாக பறந்து விடுவீர்கள்.... பொறுப்பில்லாமல் நடந்து கொள்வதென்பது

இங்கு பிறப்போடு வந்த சுபாவம் ஆச்சு..."- அதிகாரி போட்ட பந்து வார்த்தைகள் அவனது நாவென்ற மட்டையால் 'சிக்சரைக்' குவித்தது.

ஒருவாறு வாட்டுக்குள் புகுந்து விட்டனர் இருவரும்.

'ஒக்சிஜனை' இழுத்தபடி துடித்துக் கொண்டிருந்தன இரு குழந்தைகள்.

பதறியபடி பாய்ந்து சென்று பக்கத்தில் நின்று குழந்தை-களைப் பார்த்தார் அதிகாரி. அவர் பாரத்தை யாரோ மாற்றி விட்ட பரமதிருப்தி அவருக்கு.

"இது என் குழந்தைகள் இல்லை...." அதிகாரி அலட்சியமாகக் கூறினார்.

"ஆண்டவன் குழந்தைகள். அகதிக் குழந்தைகள்..." சந்த்ரு அமைதியாகக் கூறினான்.

"என் குழந்தைகள் எங்கே?" அதிகாரி ஆற்றாமையுடன் கேட்டார்.

"வீட்டில்..."

அப்போ என்னை இங்கு ஏன் அழைத்து வந்தீர்கள்......"

"உங்களின் பொறுப்பற்ற தன்மையினால் அதிகாரப் பிடிவாதத்தால் கவலையீனத்தால். இந்த துளிர்கள் துடித்து துவண்டு போய்க்கிடப்பதைக் காட்ட..." அவன் ஆத்திரத்துடன் ஆவேசமாகக் கூறினான்.

"நான் என்ன நஞ்சா ஊட்டினேன்.....?"

"நஞ்சேதான்..."

"உங்களுக்கு எப்படித் தெரியும்...."

"குழந்தைகள் துடிப்பதிலிருந்து..."

"நல்லா குழம்பிப் போயிருக்கீங்க தம்பி..."

"நானா?" அவன் அவருக்கு நேராக நின்று கேட்டான்.

அவனின் அதட்டலில் அடங்கிப்போனார் அதிகாரி.

"ஐயா.... இந்த குழந்தைகளின் துடிப்பை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்.."

"ஏன்..."

"உங்கள் குழந்தைகளும் இது மாதிரித் துடிக்க வேண்டும்...."

"இது அநியாயம்...."

"இல்லை மனுநீதி... வாய் பேசா மிருகத்திற்காக தன் மகனையே தேர்ச்சில்லுக்கு தாரை வார்த்த மனு நீதி கண்ட சோழனாக.... மறுபடியும் ஒரு சோழனாக...... உங்களை உருவாக்கிக் காட்டுகிறேன்..... அந்தச் சோழன் மனச்சாட்சிப்படி நடந்தான். இந்தச் சோழனோ....." சந்த்ரு வெறிபிடித்தவன் போல் சிரித்தான்.

அதிகாரி அச்சம் மேலிட அசந்து போய் நின்றார். காவலாளி ஆட்களைக் கலைக்கத் தொடங்கினான்.

சந்த்ரு அதிகாரியை அழைத்துக் கொண்டு அவருடன் நடக்க ஆரம்பித்தான். காற்றுப்போன சைக்கிள் காற்று நிரப்பப்பட்டிருந்தது.

மீண்டும் சைக்கிள் சவாரி. அவர் சத்தமேதுமின்றி சாதுவாக 'பாரில்' இருந்தார். அதிகாரி வீடுவரை இருவருமே பேசிக் கொள்ளவில்லை.

வீட்டில் சைக்கிள் நின்றது. அதிகாரி அழைப்பு மணியை அழுத்தினார். அவகாசம் கொடுத்து மீண்டும் அழுத்தினார்.

கதவு மெல்ல மெல்ல திறந்தது. கத்தி அதிகாரிக்கு நேராக வந்தது. அவர் பின் வாங்கினார். சந்த்ருவின் கத்தி... முதுகில் முட்டியது. நிதானித்தார்.

ஆங்காங்கே கத்தியுடன் மனிதர்கள். அவர்களின் நடுவே மனைவியும் குழந்தைகளும்.

கதிரையைக் காட்டி அதிகாரியை அமரச் சொன்னான் சந்த்ரு.

சந்த்ரு கைக்கு பசளை உறை ஒன்று மாறியது. அதற்குள் கையை விட்டான் சந்த்ரு. உருண்டை தட்டுப்பட்டது. அதைத் தூக்கி அதிகாரியின் மனைவியிடம் கொடுத்தான்.

"அம்மா... தேங்காயை உடைத்து உடனே துருவுங்கள்...."

அவள், தேங்காயுடன் குசினியுள் நுழைந்தாள். தேங்காய் உடைக்கப்பட்டு, நீர் வடியும் சத்தம் துல்லியமாக காதை துளைத்தது.

"தேங்காய் அழுகல்..." அவள் குசினியில் இருந்தே குரல் கொடுத்தாள்.

குசினியை நெருங்கினான் சந்த்ரு. "நீங்கள் என்ன சுகாதார பரிசோதகியா? அல்லது நடமாடும் ஆய்வு கூடமா? கட்டளைக்கு பணியாவிட்டால்..." கத்தியை அசைத்துக் காட்டினான் சந்த்ரு.

தேங்காய் துருவலுடன் அவள் எழுந்து வந்தாள்.

"பெரிய பாத்திரமா பார்த்துக் கொட்டி வாருங்கள்....."

கணணி வேகத்தில் காரியமாற்றினாள் அவள்.

"இந்தாங்க மாவை அதற்குள் கொட்டுங்கள்....." அவள் மாவை வாங்கிக் கொட்டினாள்.

"ஐயோ நிறைய வண்டு....."

"மாவில் வண்டு சகஜம்..."

"புழுவும் நெளியுது......"

"வண்டு இருந்தால் புழுவும் இருக்கும் தான். இது புரியாத மரமண்டைகளா நாங்கள்..... கெதியா ரொட்டியைத் தயாரியுங்கள்."

ரொட்டி தயாராகிக் கொண்டிருந்தது. சுடச்சுடச் தட்டில் வந்தது. அதிகாரி முன் அதை நீட்டினான் சந்ரு.

"அருவருப்பா இருக்கு தம்பி..."

"உங்களால் சிபார்சு செய்யப்பட்ட மா தான் ஐயா இது...."

சந்த்ரு ரொட்டியை எடுத்து அவர் கையில் கொடுத்தான். அவர் தயங்கினார். கத்தி அவர் மூக்கில் நின்றது. கெட்டியாக கை ரொட்டியைப் பற்றியது. அவர் மனமோ பதறியது. நெஞ்சு படபடத்தது.

"கைக்கெட்டியது.... வாய்க்கெட்டாமல் போவதா..... ஆரம்பியுங்கள்...." அவதிப்படுத்தினான் சந்த்ரு.

"நிறம் மாறி... பதம் மாறிய மாதான் இது. பசியாறச் சாப்பிடுங்க..."

வண்டும் நிறைந்து... மலர் மணமும் வீச..... புழுவும் உருண்ட மாதான் இது.... உண்ணுங்க...."

உமிழ் நீர் விழுங்கவே கஷ்டப்பட்டார் அதிகாரி.

"தம்பி அழுகல் தேங்காய் மணமும்.... இந்த மா மணமும்.... வகுத்தைப் பிரட்டுது தம்பி...."

"ஐயா இப்படியான மாவை.... கண்ண மூடிக்கொண்டு விநியோகிக்க உடந்தையாக இருந்த நீங்க..... இதை கடைசி மணந்து பார்த்தே.... கழித்து விட்டிருக்கலாம். நான் என்ன சுகாதார பரிசோதகரா என்று வீம்பு வார்த்தையைப் பிரயோகிக்காமல் பிரச்சினையை மனிதாபிமானத்துடன் அணுகி.... வறிய மக்களின் வயிற்றுக்குமட்டலத் தவிர்த்திருக்கலாம். உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் அந்தக் குழந்தைகளின் உயிரைக் காத்திருக்கலாம். இந்த மாவைக் கண்ணை மூடிக்கொண்டு கொள்வனவு செய்தேன் என்ற குற்றச்சாட்டின் கீழ் எனக்கு கிடைத்துள்ள..... வேலை நீக்கக் கடிதத்தைத் தவிர்த்திருக்கலாம்..... எல்லாவற்றிலுமிருந்து..... உங்களை மட்டும் தவிர்த்து விடுவதால்..... சூடாறமுதல் சாப்பிடுங்க.... மூக்கில் நிலைத்த கத்தி உதட்டில் இறங்கி அவரை உறுத்தியது.

வாய் திறந்தது. ரொட்டி நுழைந்தது. குரல் வளையே குளறியது. அதிகாரிக்கு அவஸ்தை. அதை அளவாக ரசித்தபடி "சுவை எப்படி?" என்று கேட்டான் சந்த்ரு.

அதிகாரியின் சுட்டு விரல் கண்ணீரைச் சுண்டி விட்டது. தொண்டை வேறு விக்கிக் கொண்டது.

மனைவி தண்ணீர் கொடுத்தாள். தண்ணீர் கூட அவர் தொண்டையில் தத்தளித்தது.

"குழந்தைகள் பார்த்திருக்க... நீங்க மட்டும் புசிப்பதா இது என்ன பழக்கம்.....? நாங்கள் எதற்கும் முதிர்ச்சி பார்த்து முன்னுரிமை கொடுக்கின்றோம்.... அதனால்தான் ரொட்டியில் முன்னுரிமை........ உங்களுக்கு......"

"உங்கள் பாணி தலைகீழானது.... முன் வந்த மாவை முடங்க வைத்து... பின் வந்த மாவை விநியோகித்து அதன் பின் தானே, முன் வந்த மாவை விநியோகிப்பது! உங்கள் வழக்கம்.... அதே பாணியில் நீங்கள் உண்ணமுன்....உங்கள் குழந்தை-களுக்கல்லவா உண்ணக் கொடுத்திருக்க வேண்டும்.... இப்போதும் ஒன்றும் கெட்டுவிடவில்லை.... நீங்கள் இப்போ எங்கள் கட்சி என நினைக்கின்றேன்..... பிஞ்சுகளுக்கும் பிச்சுக் கொடுங்கள்....."

"என் உயிர் போனாலும் முடியாது!" அதிகாரி அழுத்தமாகக் கூறினார்.

"ஏன்..?"

"ஆஸ்பத்திரியில் அந்தக் குழந்தைகள் பட்ட அவஸ்தையை நேரிலேயே பார்த்தால்...."

"உங்களின் முறையற்ற பணியால்.... ஆறுமாதங்களுக்கு பின் விநியோகிக்கவென்றே... மாவை முடங்க வைத்த முட்டாள் தனத்தை மூடி மறைப்பதற்கு... மா பழுதடைந்து விட்டது என்று தெரிந்தும்... பதவி பறிபோய் விடுமோ என்று பதறி.... குற்றவாளிகள்

நாங்கள் தான் என்று கூசாமல் கூறி.... மூட்டை மூட்டையாய் எங்களைச் சுமக்கச் செய்தீர்கள்.... தாக்கம் இப்போ எங்கு தங்க வந்திருக்கின்றது பார்த்தீர்களா?" சந்த்ரு கத்தியைச் சுழற்றியபடி கூறினான்

குழந்தைகளை நெருங்கினான். இரு குழந்தைகளும் வெருண்டு வீரிட்டன. இருவரையும் அலாக்காக தூக்கினான். இரு பக்க இருப்பிலும் இறுக்கிக் கொண்டான்.

தாய் ஓடி வந்து அவன் காலில் விழுந்து கதறினாள்: "உங்களுக்கு கோடி புண்ணியம் கிடைக்கும் குழந்தைகளுக்கு ரொட்டியைக் கொடுத்திராதீங்க......"

"அம்மா தவறு செய்யுறீங்க. தயவு செய்து எழும்புங்க...." அவள் எழுந்தாள்.

"அம்மா.... நாங்கள் மனிதர்கள். மக்களோடு வாழ்பவர்கள். மக்களுக்காகவே வாதாடுபவர்கள். அதிகார மமதையோடு மக்களை ஆட்டிப்படைப்பவர்கள் அல்ல. ஐயாவுக்கு மமதை அதிகம். அது மறுபடியும் வராது பார்த்துக் கொள்ளுங்கள். ரொட்டி சமிபாடடைவதற்குள் ஆஸ்பத்திரியில் சேருங்கள். குழந்தைகளை முத்தமிட்டபடி கூறினான் சந்த்ரு.

இது ரொட்டியல்ல ...'சொக்கா'.... இந்தாங்க... பொக்கற்றுள் இருந்த சொக்கலற்றை ஆளுக்கொன்றாகத் திணித்து விட்டு... திருப்தியுடன் திரும்பினார்கள் அவர்கள்.

அதிகாரி வாந்தி எடுத்துக் கொண்டிருந்தார்....

(யாவும் கற்பனை)

# உனக்கு மட்டுமல்ல...

அமைதி ஆரம்பித்திருக்கின்றது. இல்லாவிட்டால் இரவு எட்டு மணி ஆகியும் அந்த ஆலமரத்தின் கீழ் அவனால் அமர்ந்திருக்க முடியுமா?

யாரும் அதட்டவும் இல்லை. அடையாள அட்டை கேட்கவுமில்லை. நீட்டி நிமிர்ந்து தலையை கைக்கு பாரமாக்கி, அந்த சுத்தமான மணல் தரையில் மல்லாக்காகக் கிடந்தான் மயூரன்.

"தனி மனித சுதந்திரம் என்றால், இதுதான்.... இப்படித்தான்" அவன் தனக்குள்ளே தாராளமாய் திருப்திப் பட்டுக்கொண்டான்.

அவனது நெடுநாளைய ஆசை அது. பல வருடங்களின் பின் அமைதி ஓரளவு திரும்பியதால், நீண்ட லீவு போட்டு அந்த அலாதியான சுகத்தை அனுபவிக்க வந்திருக்கிறான் அவன்.

அமைதி குழம்பியிருந்த அந்தக் காலத்தில் இதே இடத்தில் மாலை மங்கி வரும் நேரத்தில்..... நண்பனோடு அரட்டை அடித்துக் கொண்டிருந்த வேளையில்....... தங்களிருவரையும் முற்றுகையிட்டு.... முரட்டுக் கேள்விகள் கேட்டு..... முகத்தில் ஒளி பாய்ச்சி..... முடிவில் வீட்டுக்குப் போங்கோ' என்று சொன்ன பின்னர் ஊருக்கே விடை கொடுத்துச் சென்றவன் தான் மயூரன்.

எதிரே இன்றைய தமிழ் சினிமா இசை போல் கடல் இரைச்சல். அருகே அன்றைய சினிமா இசை போல் இதமான ஓடை ஓசை. இரைச்சலும் இதமும் கலந்தொலிக்கும் இந்த இயற்கையில் இவ்வளவு நேரமும் இணைந்திருந்தான் மயூரன்.

முக்கோண முதிர்ந்து நிற்கின்ற மூன்று ஆலமரங்களும் ஆலய வீதிக்கு அழகாக மட்டுமல்ல, அளவாகவும் குடை பிடித்திருக்கின்றன.

ஆண்டுக்கொரு தடவை ஒரு இரவு மட்டும் விழா காணுகின்ற ஆலயம் அது. கடலில் இருந்து தான் கடலம்மன் எழுந்தருளுவதால் ஆலயம் அவசியமற்றதாகி விட்டது போலும்.

அதனால ஆங்காங்கே பந்தல் அமைப்பதற்கான தூண்கள் மட்டும் நிமிர்ந்து நிற்கின்றன. மணித்தூணும் கம்பீரமாக நிற்கின்றது.

கண்களைச் சுழலவிட்டு, ஆலய அடையாளங்களை கண்காணித்து, ஆலய சூழல் மாசுபடவில்லை என்பதை மனப்பூர்வமாக உணர்ந்து கொண்ட பின் தனது குலதெய்வத்தின் மகிமையையிட்டு பெருமைப்பட்டுக் கொண்டான் மயூரன்.

'இந்த பாரிய பரிசுத்தமான வீதியை அதிகாலையில் தவறினால் மாலையில்.... கூட்டிப் பெருக்கும் அவள்' காலை உதைத்துக் கொண்டான் மயூரன்.

மண்ணின் மேற்பரப்பில் புடைத்திருந்த ஆலமர வேர், அவனது உதையை அலட்சியமாக ஏற்றுக் கொண்டது.

மீண்டும் உதைத்தான். மீண்டும் மீண்டும் உதைத்தான். பாதம் வலித்தது. வேர் நிலைத்தது. மனதில் ஒரு உறுத்தல்.

"மரத்திற்கு வேர், மனிதனுக்கு மனம். உறுதியிழந்தால் மரமுமில்லை. மனிதனுமில்லை' அவன் பெருமூச்சு விட்டான்.

வெள்ளை வொயில் சேலை, வாரிவிட்ட கூந்தலின் மேல், பச்சை வேப்பங்கொத்து பரவியிருக்க, அதன் மேல் கற்பூரச்சட்டி,

அதைத்தாங்கி நிற்கும் தளிர் விரல்கள், நெற்றியில் இளம்பிறைபோல் விபூதிக்கீற்று, இதழ்கள் விரிந்து 'அரோகரா'....' கடலம்மன் காட்சி தந்தால் இப்படித்தான் இருக்குமோ?"

மனதுள் மானசீகமாக மட்டும் வழிபடும் அவன்... அவளை அந்தக் கோலத்தில் கண்ட அன்று தான் முதல், முதல் மற்றவர்களுக்குக் கேட்கும்படி 'அரோகரா' போட்டான்.

இப்போது இந்த இயற்கை இசையமைப்பின் இடையே 'அரோகரா' போட்டான்.

அந்த எளிமையான வசீகர வட்ட முகம், அவனை, இல்லை அந்த ஆலமரத்தைச் சுற்றி வட்டமிடுவது போன்ற உணர்வு அவனுக்கு.

அவனுக்குள் உற்சாகம். 'உயிர் கொடுத்தவள். உயிராகி நின்றவள்' நெஞ்சு வறண்டது. வறட்சி இருமலாகி இடைஞ்சல் கொடுத்தது.

அவளும் இப்படித்தான் இருமுவாள். இடை இடையே இருமுவாள். 'இருமலில் நான் இப்போ உன்னோடு இணைந்து கொண்டிருக்கிறேன்.' இந்த நினைவு அவன் இதயத்திற்கு இதமாக இருந்தது.

"ஐயோ பாம்பு" அபயக் குரல். திடுக்கிட்டு விழித்தான் மயூரன். மாலை மங்கிக் கொண்டிருந்தது. மங்கையவள் வீழ்ந்து கிடந்தாள்.

மணலில் பாம்பின் தடம். பதை பதைத்துப் பார்த்தான் மயூரன். கோயில் பாம்பு ஆலமரத்தில் வேகமாக ஏறிக் கொண்டிருந்தது. விபரீதம் நடந்து விட்டது. வியர்த்துக் கொட்டியது அவனுக்கு.

விஷம் ஏறுமுன் விரைந்து செயற்பட வேண்டும்.

சாரத்தைக் கிழித்து கையில் எடுத்தபடி, அவள் காயத்தைத் தேடினான் மயூரன்.

பாதத்தில் இல்லை. கையில் இல்லை. முகத்தில் இல்லை. முதுகில் இல்லை. கலைந்திருந்த சேலையை உயர்த்தி காலைப் பார்க்க முயற்சித்தான் மயூரன்.

தன்னைச் சுதாரித்துக் கொண்டு வேகமாக எழும்பியவள் 'ஈனப்பிறவி' வார்த்தை ஈட்டியால் வசதியாகக் குத்தி விட்டு வேகமாக விரைந்தாள் அவள்.

நிலை தடுமாறி நின்றான் மயூரன். 'பாம்பென்று சொன்ன பாவை என்மீது ஏன் தான் பாவம் தீர்த்தாள்?' பரிதாபமாக அவள் செல்லும் திசையையே வெறிக்கப்பார்த்துக் கொண்டிருந்தான்.

"கடல் அம்மையே நான் நிரபராதி என்று உனக்கு நிச்சயமாகத் தெரியும். உனக்கு மஞ்சள் அரைத்துத் தொண்டு செய்த என் தாய்...... அது தான் என்னை ஈன்று விட்டு இறந்து விட்ட என் தாய் உத்தமி...... அதன் பின் எனக்கு எல்லாமாக இருக்கின்ற என் தந்தை...... உத்தமன்.... ஈனச்செயல் எதிலும் எனக்கு ஈடுபாடு கிடையாது தாயே..... இதை அவள் இதயத்துள் இறைத்து விடு தாயே.....' மானசீகமாகக் கண் கலங்க கைகூப்பிக் கொண்டான் மயூரன்.

அதன் பின் அவளை நேருக்குநேர் கண்டபோதும், அவளைக் கண்காணித்தபோதும், அவன் கவலை போக்கக் கூடிய போக்கு அவளிடம் காணவில்லை.

'அன்று நடந்தது என்ன?' என்பதை அறிய அவன் ஆர்வம் அதிகரித்துக் கொண்டே இருந்தது. அவனால் ஆவன செய்ய முடியவில்லை.

அன்று வெள்ளிக்கிழமை. அவள் ஆலயத்துக்கு வந்தாள். கற்பூரம் கொளுத்தி, கைகூப்பி நின்றாள்.

அவன் தீர்மானித்தான். கடலம்மனுக்கு நான் மனதுள் கேட்பது கேட்கவில்லை. இனி 'அரோகரா' பாணியில் வாய் விட்டு ஒப்புவிக்க

வேண்டியது தான். மூன்றாம் நபர் எவருமில்லை. முந்திக் கொண்டான் மயூரன்.

அவகாசம் எடுத்து அழுத்தம் திருத்தமாக, அந்தச் சம்பவம் நடந்த அன்று அம்மனை மானசீகமாக வேண்டிக் கொண்டதை, வெளுத்து வாங்கினான் என்பதை விட அந்தரித்து மந்திரித்தான் என்பதே பொருத்தமாகும்.

கண்மூடி நின்றவள், கண்விழித்து, ஒட்டுமொத்தமாக, ஓரக்கண்ணால் ஒரு தடவை பார்த்தாள். ஒய்யாரமாக 'கலகல' வென்று சிரித்தாள். அவன் கலங்கி நிற்க காணாமல் போனாள்.

'சிரித்தது அம்மனோ என அவன் சீரியஸாக சிந்தித்து, தானும் சிரித்துக் கொண்டான். அருள்பாலித்து விட்டதா? அல்லது பாதித்து விட்டதா என்பதைப்பற்றியெல்லாம் அவன் ஆராய்ச்சி செய்யவில்லை.

அலட்சியச் சிரிப்பா.......? அகங்காரச் சிரிப்பா.....? ஆழமான சிரிப்பா? அல்லது அர்த்தமுள்ள சிரிப்பா? என்று அடையாளம் கண்டு அலறவோ ஆனந்திக்கவோ விரும்பாமல் 'சிரித்து விட்டாள்' என்று மட்டும் சிரித்துக் கொண்டான்.

சிந்தனையில் சிறைப்பட்டிருந்த மயூரனை ஓடையில் பட்டுத்தெறித்த பலமான காற்று அவனை உண்மையில் சிலிர்க்க வைத்தது.

உறுமித் துப்பியும் சளி வெளிவர மறுத்தது. தொண்டைக்-குழியில் தொல்லையும் ஆரம்பித்து விட்டது. செருமிக் கொண்டான். ஆனாலும் அவன் தந்தை சொல்லியது போல் 'செப்பமாக இல்லை'

தலைநகர் வாழ்க்கை, இதைத்தான் அவனுக்குத் தாரைவார்த்துக் கொடுத்தது. தனி அறை. அனல் காற்று. அங்கிருந்து தான் ஆரம்பிக்கும். அதை மின்விசிறி இன்னும் அதிகரிக்கும். தெரு வாகனப் புகையும் புழுதியும் அதை இன்னும் அதிகரிக்கும். இருமல் ஆட்டுவிக்கும்.

அவளுக்கு இந்தத் தொல்லைகள் இல்லாமலே இயற்கைச் சூழலிலே எப்படித் தொற்றிக் கொண்டது.? இளமையில் இருந்தா....? இடையில் இருந்தா? அல்லது பரம்பரையாகவா?

"அப்படியென்றால் என் தாய்க்கும் தந்தைககும் இல்லாதது எனக்கு எப்படி வந்தது.?" நோயைப்பற்றிச் சிந்தித்து அந்தக் கோயிலும் கூட..... அவனுக்கும், அவளுக்கும் உள்ள அடிப்படை ஒற்றுமைகளை ஒத்துப் பார்க்க அவன் மனம் ஓடி..... ஓய்ந்து..... திரும்பியது.

அவள் அன்று சிரித்த பின்னரும் கூட எவ்வளவோ சந்தர்ப்பங்கள் வாய்த்தும் கூட, ஒரு வார்த்தை கூட, சிந்தவில்லை. ஆனாலும் அவளிடமிருந்து வெறுப்பான நடவடிக்கைகள் எதுவும் வெளிப்படுவதுமாக இல்லை.

அன்று முழுக்க கடலம்மனைத் திட்டித் தீர்த்தபடி இருந்தான் மயூரன். அவள் அம்மன் தரிசனத்திற்காக அன்று நிச்சயமாக வருவாள் என எதிர்பார்த்தான். வந்தாள்.

"இன்றாதல் வரம் கிடைக்க வழி செய் தாயே!" திட்டிய அம்மனிடமே அடைக்கலமானான்.

தூண்களைச் சுற்றி வந்த தூயவளை, துல்லியமாக இனம் கண்டு, அவளெதிரே கைகூப்பி நின்றான் மயூரன். அவளும் கற்பூரம் ஏற்றி கைகூப்பி நின்றாள்.

அவள் முகத்தை ஆசை தீர முகர்ந்தன அவன் கண்கள். அவள் கண்களில் அந்த அரவத்தின் அசைவு அச்சமூட்டியது.

அது நேர் கோட்டில் அசைந்து வந்தால்..... நிச்சயமாக அவள் பாதத்தை நெருங்கும். அவன் உள்ளம் நெருடியது.

"பாம்பு! விலகுங்க....." அவள் சொல்லி முடிப்பதற்குள், அவன் பாதத்தையே நெருங்கி விட்டது. பாய்ந்து விழுந்தான் மயூரன்.

அவள் நிலைமையை ஊகித்துக் கொண்டாள். விழுந்த மயூரன் எழுந்திருக்க முடியாமல் தடுமாறினான்.

காலில் இரத்தம் பொசிந்தது. கலவரத்துடன் மயூரனைப் பார்த்தாள் அவள். அவன் கண்கள் கலங்கின. அப்பாவிபோல் அவளைப் பார்த்தபடியே நின்றான்.

"நான் ஈனப் பிறவி இல்ல....." அவன் வேதனையை வெளிப்படுத்தாமல் சிரித்தபடி கூறினான்.

"விஷம் ஏறப்போகுது" சேலைத்தலைப்பை கிழித்தபடி அவன் காலருகே குனிந்தாள் அவள்.

"அவசரப்படாதீங்க கல்குத்தித்தான் காயம். பாம்பு ஓடிற்று." அவன் கண்ணியமாகக் கூறினான்.

"காயத்தைக் கட்டிக் கொள்ளுங்கள்." அவள் கிழித்த சேலைத் துண்டை நீட்டினாள்.

"இவ்வளவு கருணை உள்ளம் கொண்ட நீங்கள் ஏன் அன்று என்னை கடுமையாக தாக்கினீங்க." அதை வாங்கிக் கட்டியபடி கேட்டான்.

"அவசர முடிவு"

"ஏன்?"

"அன்று அந்த ஆலமரத்தின் கீழ் ஆழ்ந்த நித்திரையில் இருந்தீங்க.... பாம்பு சீறும் சத்தம் கேட்டு... திரும்பிப் பார்த்தேன். உங்கள் மார்பில் ஒரு தவளை. அருகே படம் எடுத்தபடி பாம்பு... பயத்தால் அலறி மயங்கி வீழ்ந்து விட்டேன். மயக்கம் தெளிந்த போது... நீங்கள் என் உடலைத் தீண்டும் உணர்வு...."

"தவறான எண்ணத்தோடு நான் உங்கள் உடலைத் தீண்ட வில்லை. பாம்புக் கடியைத் தேடினேன். பாம்பு உங்களைத் தீண்டி விட்டது என்ற திகிலோடுதான்...."

"அன்றைய சம்பவத்திற்காக வருந்துகிறேன். மன்னித்துக் கொள்ளுங்கள்" நாணம் நளினமாக நெளிந்தாள்.

"உயிர் காப்பு பணியில் ஆளையாள் மிஞ்சிச் செயற்பட்டிருக்கின்றோம்"

"இல்லை ஒருமித்துச் செயற்பட்டிருக்கின்றோம்"

"இனிமேலும் ஒருமித்துச் செயற்படலாமா?" அவன் ஒருவித ஆதங்கத்தோடு கேட்டான்.

அவள் தலையைத் தாழ்த்திக் கொண்டாள். விழுந்து கிடந்த கற்பூரத்தை எடுத்து...... கல்லில் வைத்துக் கொளுத்தினாள்.

கற்பூரம் எரிந்து அணையும் வரை இருவரும் அதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். மௌனம். அவள் தலையை நிமிர்த்தினாள். நிதானமாக அவனைப் பார்த்தாள். அதே இடத்தில் அமர்ந்தாள். மண்ணில் அவள் கை விரல்கள் பதிந்தது.

"முதலும் முடிவும் நீங்க தான்" அழகாக மண்ணில் எழுதி விட்டு ஓடினாள்.

அவனும் எழுந்து முதலில் இதை யாரிடம் சொல்வது என வீடு நோக்கி ஓடினான்.

"எனக்காக தன் இளமையிலேயே ஒறுத்து... ஒரு குறையுமில்லாமல் என்னை ஆளாக்கி விட்ட தந்தையிடம் தான் இதை வெளிப்படுத்த வேண்டும்..." மயூரன் தந்தையின் முன் நின்றான்.

"அடக்கமான பெண்" அவன் ஆரம்பித்தான்.

"அறிந்திருக்கன்"

"அழகான பெண்"

"பார்த்திருக்கன்"

பக்தியுள்ள பெண்"

"நிச்சயமாக"

"அப்போ உங்களுக்கு பிடிச்சிருக்கா அப்பா?"

"ஒன்றைத் தவிர அவளிடம் எல்லாமே பிடிச்சிருக்கு"

"என்னப்பா அது?" ஆற்றாமையுடன் கேட்டான் அவன்.

"அடிக்கடி ஆஸ்பத்திரிக்குப்போவது!" அவர் அழுத்தமாகக் கூறினார்.

"ஏன் அப்பா?" அதிர்ச்சியுடன் கேட்டான் மயூரன்.

"அவளிடமே கேள்!" அவர் அதற்கு முற்றுப்புள்ளி வைத்த மாதிரியே கூறியது மயூரனுக்கு மிகவும் சங்கடமாய்ப் போய் விட்டது.

அவர் முகம் சுருண்டு விட்டது. "அவர் முன் இனி கோரிக்கைகளை முன்வைக்க முடியாது." அவனுக்கு ஏக்கமாகவே இருந்தது.

தந்தையின் நோக்கம் அவனுக்குத் தெளிவாகவே தெரிந்தது. அவளை மருமகளாக அவர் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. நீண்ட பெருமூச்சு நினைவுகளை நிறுத்தியது.

குளிர் மேலும் கூடிக்கொண்டிருந்தது. அவனது தொண்டை ஆரவாரங்களும் அதிகரிக்கத் தொடங்கியது. அவஸ்தை அரங்கேறத் தொடங்கி விட்டது.

பொக்கற்றுக்குள் கையை விட்டான். அதை மூக்குக்கு நேரே பிடித்து, அடித்து உறிஞ்சிக் கொண்டான். அந்த 'வெண்ரோலின்' பாம் அவனது உபத்திரவத்தை உறிஞ்சி ஆறுதலளித்தது.

மணலும் பனியால் ஈரலித்தது. அவனது நெற்றியும் வியர்வையால் அப்படியே இருந்தது. காற்றும் கடுமையாக இருந்தது. உடல் நடுங்கும் குளிர்.

பயங்கர இருமல் படுமோசமான இழுவை. அவனால் தாங்க

முடியவில்லை. இனிமேல் எதுவும் தாக்குப்பிடிக்காது.

"ஓடையில் பாய்வோமா?" அவன் மனது மறுதலித்தது. "அது பாவம்... அப்பா பாவம்... அவளும் பாவம்...."

தவண்டு சென்றேனும் ஆஸ்பத்திரியில் தஞ்சமடைவோம். தன்னைத் தயார்படுத்திக் கொண்டான். நடப்பதும் வேலிகளைப் பிடித்து நிற்பதுமாக... நீடித்த அவனது பயணம்... ஆஸ்பத்திரியில் தரித்தது.

"அடுத்த அதே 'கேஸ்' ஒண்டு வருகுது" ஆஸ்பத்திரி ஊழியர் ஒருவர்.... "அர்த்த ராத்திரி தூக்கத்தை.... அநியாயப்படுத்தும் ஜென்மங்கள்" எனச் சபித்தபடி அலுத்துக் கொண்டே சகாவைத் தட்டி எழுப்புகின்றான்.

"காலநிலை மாற்றம் இதே 'கேசு'களாக குவியுது" அவனும் வேதம் ஓதுகிறான்.

வழக்கமான நடைமுறை மயூரனின் இரத்தத்தோடு 'சேலைன்' துளிகள் சேர்ந்து கொண்டிருந்தது. கையை ஆட்டாமல் அசையாமல் வைத்திருப்பதும் அவஸ்தைதான்.

அந்த 'வாட்' முழுக்க அதே அவலம் தான். மேல் மூச்சு.. கீழ் மூச்சு சளியின் அட்டகாசத்தை அடக்குவதற்காக அனைத்துக் கட்டில்களிலும்... ஆட்களே தான்.

"அப்போ இத்தனை பேரும் தனிக் கட்டைகள் தானா? வாழ்க்கையைத் தள்ளி வைத்தவர்களா..... அல்லது தவற விட்ட-வர்களா?" மயூரனின் கண்கள் ஒவ்வொரு கட்டிலாக மேய்கின்றன.

"மாமா நல்லா இருக்கா... அப்பா நல்லா இருக்கா? அண்ணா நல்லா இருக்கா? அத்தான் நல்லா இருக்கா?" உறவின் அழுத்தங்கள் அங்கே ஆக்கிரமிக்கின்றன. அது நோயாளிகளுக்கு ஆறுதல் அளிக்கின்றது.

"சேலையின் தீர்ந்து கழற்றப்படுகின்றது. திருப்தி தெரிகின்றது.

எழுந்து நடந்தான் மயூரன்.

அந்த ஆஸ்பத்திரி நடைபாதையில் எதிரும் புதிருமாக மயூரனும் அவளும்

"நீங்க இந்த நேரத்தில..." வாஞ்சையோடு கேட்டான் மயூரன்.

"வழக்கமான வாடிக்கை. இரண்டு 'சேலைன்' போட்ட பிறகுதான் கொஞ்சம் இளகியிருக்கு" கையில் பஞ்சை வைத்து அழுத்தியபடி கூறினாள் அவள்.

"எனக்கு ஒண்டோடு சரி" மயூரன் மகிழ்ச்சியோடு கூறினான்.

"விக்கிரகம் போன்ற பெண்ணையே இந்த நோய்க்காக அவர் விலக்கி வைத்தார்... அவர் மகனுக்கும் இப்போ அதே நோய் தானே" 'வாட்டில் உள்ளே இருந்தும் ஒரு பொதுவான குரல் ஒலித்தது.

(யாவும் கற்பனை)

# அன்று நடந்தது இன்று...

இவ்வளவு காலமும் நாணயமும் நம்பிக்கையுமாய் வேலை செய்த அந்தத் தம்பி இப்படிச் செய்திருக்குமோ?" அந்த ஆச்சி அனுதாபத்துடன் பக்கத்தில் நின்றவனிடம் கேட்டாள்.

"ஆச்சி..... ஆசை...... யாரைத்தானெணை விட்டு வைத்தது" அவன் ஏளனமாகக் கூறிவிட்டுச் செல்கிறான்.

அங்கு குழுமி நின்ற கூட்டத்தில், அந்த ஆச்சி ஆராய்ந்து பார்த்ததில் அவனுக்குச் சாதகமாக, அல்லது அவளைச் சாந்தப்படுத்த யாருமே இல்லை.

பொலீஸ் ஜீப் அவனை ஏற்றிக் கொண்டு புறப்படுகிறது. ஆச்சியின் கண்களிலிருந்து கண்ணீர் "பொல பொல" வென்று கொட்டுகிறது.

பத்து மாதம் சுமந்து பல வருடங்கள் பராமரிப்பதால் மட்டும்தான் பாசம் உருவாகி விடுமா? ஒரு நாள் பழக்கத்திலும், பிரிவிலும் கூட பரிசுத்தமான பாசம் உருவாகி விடுகின்றதே.

உத்தியோகம் பார்க்கும் இரண்டு ஆண் பிள்ளைகள் வெளியிலிருந்தும், ஒரு நாள் பழக்கத்தால் மட்டும் சொந்த மகனை

விட உயர்ந்து நிற்கும் அவனை அவதூறாகப் பேசியவர்களை அருவருப்புடன் பார்த்தாள் ஆச்சி.

ஆச்சியின் மனது அலை பாய்ந்து கொண்டிருந்தது. எந்த அலையாலும் மூழ்கடிக்க முடியாத அவனைப்பற்றிய நம்பிக்கை, அவளுக்குள் சுடர் விட்டுப் பிரகாசிக்கத்தான் செய்தது.

கூட்டம் கலையத் தொடங்கி விட்டது. அந்தக் கூட்டத்தில் கடைசியாகத் தன்னையொத்த வயதுடைய பெண் ஒருத்தி வந்து கொண்டிருப்பதை அவதானித்த அந்த ஆச்சி அவளை அணுகினாள்.

"இது....... ஒருவேளை உண்மையாக இருக்குமோ....?" ஆற்றாமையுடன் கேட்டாள் ஆச்சி.

"இந்தக் காலத்தில ஒருத்தரையும் நம்பக்கூடாது.... ஆனால் அந்தப் பொடியன்ர முகத்தைப் பார்த்தால்......செய்யக் கூடியவன் மாதிரி இல்லை......"

பல நாள் பட்டினி கிடந்த ஒருத்திக்குப் பஞ்சாமிர்தம்.... கிடைத்த நிறைவை நீடிக்க விடாமல் அந்தப் பெண் தொடர்ந்தாள்.

"வேலை பாரமெடுத்து ஆறு மாதத்திற்குள் ஏழு பவுணில் தாலி கட்டுவதென்றால்... அது இப்படி பொதுக்காசில் கொள்ளையடித்துத்தான் கட்ட வேண்டுமா?

ஆச்சியின் முகத்தில் நம்பிக்கை ரேகைகளை அரும்ப விட்டவளே.... அதை அடியோடு அழித்து விட்டுச் செல்கின்றாள்.

ஆச்சிக்கு அதற்கு மேல் அந்த வீதியில் நிற்கப் பிடிக்கவில்லை.

அவனுடைய வீட்டிற்கு விரைந்து சென்றாள் ஆச்சி.

ஒரு வயதுக் குழந்தை நிம்மதியாகத் தூங்க அவனுடைய மனைவி, சிறு குழந்தைபோல் விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். அவளைத் தேற்ற அங்கு யாரும் இல்லை.

ஆச்சியைக் கண்டதும் அவள் மரண வீட்டில் நெருங்கிய உறவினர்கள் வரும்போது கதறி அழுபவர்களைப் போல் அழுதாள்.

"தங்கச்சி எல்லாம் மனிதர்களுக்குத்தானம்மா......அழாத..." அவள் தலையை ஆதரவோடு கோதிவிட்டவாறே ஆச்சி ஆறுதல் கூறினாள்.

அவள் கழுத்தில் கிடந்த தாலிக்கொடி ஆச்சியின் கண்களை உறுத்துகின்றது.

"இந்தத் தாலிக்கொடி எப்ப மோனே கட்டியது...."

"போன மாசம் தான் ஆச்சி.... அந்த ராசிதான் என்ர ராசாவை பொலிசுக்கு அனுப்பியிருக்கு...."

"அப்படியெல்லாம் சொல்லக் கூடாது மகள்.... ஒரு பெண்ணுக்கு பெருமை தருவதும், ஆணுக்கு வலிமை ஊட்டுவதும் தாலிதானம்மா...."

குழந்தையின் தீடீர் விழிப்பு அவர்களை திசை திருப்புகின்றது.

ஆச்சி குழந்தையை தூக்கி அணைத்துக் கொள்கிறாள். அவள் அணைப்பில் சுகம் காணாத அந்தக் குழந்தை தொடர்ந்து அழுகின்றது.

ஒட்டியிருந்த குழந்தையின் வயிற்றைப் பார்த்த ஆச்சி, குழந்தையை அவளிடம் கொடுத்து விட்டு குசினுக்குள் நுழைகின்றாள்.

"தங்கச்சி லக்ஸ்பிறேயும, சீனியும் எங்கே இருக்குது மகள்.......?

"எல்லாம் தீர்ந்து போச்சு......."

"இந்தக் கிழமைதானே மகள் கடைக்கு லக்ஸ்பிறே வந்தது?

"சங்கத்தில் வேலை செய்யும் நெருங்கிய அவருடைய நண்பரின், ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் தாய்க்கு

லக்ஸ்பிறே தேவைப்பட்டதால்...... பிள்ளையின் பேமிற்றுக்குரிய லக்ஸ்பிறேயை அவருக்கு கொடுத்து விட்டார்"

"தன் பச்சைக் குழந்தைக்குரிய பால்மாவை இன்னொரு-வருக்குக் கொடுத்து உதவிய இவனா இப்படிச் செய்திருப்பான்......."

ஆச்சி சமாதானமடைந்தவளாக தன்னுடைய சேலைத் தலைப்பை அவிழ்த்துப் பார்த்தாள். ஒரு ரூபா இருந்தது.

பக்கத்துக்கு கடைக்குச் சென்று சீனியும் தேயிலையும் வாங்கி வந்து குழந்தையின் பசியைப் போக்கினாள்.

"தங்கச்சி.... எப்படியும் தம்பியை இன்றைக்கு பிணை எடுக்க வேண்டும்.....

"முழுக்காசும் கட்டினால் தான் பிணையில் விடுவார்களாம்."

"எவ்வளவு காசாம்......."

"ஏழாயிரத்து சொச்சமாம்"

"இதுக்கு எங்க மகள் போவது....?

கையில் பத்துச் சதம்கூட இல்லை ஆச்சி.... இந்தப் பெரிய தொகைக்கு எங்க போவது....?

"இந்தக் கொடியை விற்றுக் கட்டினால் என்ன மகள்....."

"தாலி மட்டும்தான் ஆச்சி... தங்கம், கொடி கிலிட்"

ஆச்சியின் இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் அவனைப் பற்றி படர ஆரம்பித்த சந்தேகம் சடுதியாக அகன்று விட்டது.

"மகளே, அந்தக் காசுக்கு நான் ஒழுங்கு செய்கிறேன்"

"அதை எப்படி ஆச்சி எங்களால திருப்பிக் கொடுக்க முடியும்...."

"அவன் யோக்கியன்.... வசதியைப் பொறுத்துத் திருப்பித் தருவான்.... நான் எந்தச் சந்தர்ப்பத்திலும் திருப்பிக் கேட்கவே மாட்டேன்...."

ஆச்சியின் கால்களைக் கண்ணீரால் கழுவிக் கொண்டிருந்தாள் அவள்.

"எனக்கு வாழ்வு கொடுப்பதற்காக வசதியான தனது குடும்ப அங்கத்தவர்களை வெறுத்து வந்தவர் அவர். இரத்த உறவு இல்லாவிட்டாலும் இரக்க சிந்தனையுடன் கைகொடுத்துக் காக்கும் ஆச்சி... இருவருமே கடவுளின் அவதாரங்களோ?"

அவள் இதுவரை சிந்திய கண்ணீர் ஆனந்தக் கண்ணீராக மாறி அவளைப் புல்லரிக்கச் செய்கின்றது.

பொலீஸ் நிலையத்தை ஆச்சியுடன் அவள் அடைந்தபோது, அங்கு அவனது உதவியாளனாகப் பணி புரிந்த ராமு மட்டும்.... இருப்புக் கொள்ளாதவனாக அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தான்.

ராமு காசைப் பெற்றுக்கொண்டு துரிதமாகச் செயற்பட்டான்.

சொற்ப நேரத்தின் பின் அவன் விடுவிக்கப்பட்டதும் அந்த ஆச்சியின் கால்களைத் தொட்டு வணங்கிக் கொண்டான்

அவனுக்கும்.... அந்த ஆச்சிக்கும் இடையே ஏற்பட்ட அந்த, அன்றைய சந்திப்பை நோக்கி அவன் எண்ணங்கள் மிதந்தன....

அன்று மாலை 6.00 மணியிருக்கும். பஸ் ஒன்று வந்து நின்றது. அந்த ஆச்சி பக்குவமாக இறங்கி அந்த இடத்திலேயே தன்னந்தனியாக அங்கலாய்த்துக் கொண்டு நிற்கின்றாள்.

இருள் பரவிக் கிடந்த அந்த வீதியில், அந்த ஆச்சியால் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. இரவில் ஆச்சிக்குப் பார்வை குறைவு போல் தோன்றுகிறது.

அந்த வழியால் வந்துகொண்டிருந்த சிறுவனிடம் அந்த ஆச்சி இரந்து கேட்கிறாள்....

"மோனே எனக்குப் பார்வை சரியாகத் தெரியவில்லை... உனக்குப் புண்ணியம் கிடைக்கும்.... என்னை ஒருக்கால் காந்தித் தெருவில் கொண்டுபோய் விட்டு விடுகிறியோ மோன.

"ஆர் இது குருட்டு மனிசியா.....? இதுக்குப் பின்னாலை போனோமென்றால் படத்திற்குப்போக முடியாது வாடா போவம்" எனக்கூறியவாறு நண்பனையும் அழைத்துச் சென்றான் சிறுவன்.

அவசர வேலையாக எங்கோ போக வந்த அவன்... இருவரினதும் உரையாடலைக் கேட்டு ஆச்சியின் கையை ஆதரவாகப் பற்றினான்.

"ஆச்சி.... வாருங்கோ உங்களை வீட்டில் கொண்டுபோய் விட்டு விடுகிறேன்.

"தம்பி நீ யார் மோனை"

"நான்தான் ஆச்சி.... இந்தச் சங்கக் கடைக்குப் புதிதாக வந்திருக்கும் மனேச்சர்....."

வீடு சேர்ந்ததும், 'அடிக்கடி இங்கு வந்து போகவேண்டும்' என்று கேட்டுக் கொண்டாள் ஆச்சி.

இருளில் பாதை காட்டியதற்கு; தள்ளாடும் வயதிலும் தைரியமாகப் பொலீஸ் நிலையம் வரை வந்து பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொண்ட ஆச்சியைப் பார்க்க அவனுக்குப் பெருமையாக இருந்தது.

தன்னால் பெரிதும் பயனடைந்தவர்கள் இன்று பாராமுகமாக இருப்பது குறித்து அவனுக்கு வேதனைதான்.

நால்வரும் வீடு நோக்கி விரைகின்றனர்.

"தம்பி! ஆறு மாதத்தில் இவ்வளவு சோர்வு உனக்கு எப்படி வந்தது?" ஆச்சி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

அந்தப் பெரிய வீட்டில் நின்று கொண்டிருந்த அந்தப் பெரியவரைத் தற்செயலாகக் கண்டபோது அவனுக்குள்ளே சிரித்துக் கொண்டான்.

"தம்பி! சீனி இருபது றாத்தல், ரின்மீன் ஆறு, வீவா ஒன்று, பருப்பு ஐந்து றாத்தல்"

எல்லாவற்றையும் பெரியவர் வாங்கியதும் பற்றுச்சீட்டை நீட்டுகிறான் அவன்.

தனது பெரிய ஷேட் பொக்கற்றுக்குள் அவருடைய பெரிய கையைப் போட்டுத் துளாவுகிறார்.

"தம்பி! காசை விட்டுவிட்டு வந்துவிட்டேன். போய் அனுப்புகிறேன்."

"அண்ணை இவர் இப்படித்தான். முந்தின மனேஜரிடமும், காசை அனுப்புகிறேன் என்று சொல்லி விட்டுச் சென்றவர் இன்றுதான் வந்திருக்கின்றார்." அவர் சென்ற பின்னர்தான் அந்தத் தகவலை அவனிடம் கூறினான் ராமு.

"இந்தப் பெரிய மனிதர் என்று சொல்லிக் கொள்கின்ற இவர் போன்ற எத்தனை பெரிய மனிதர்களை நான் சந்தித்து விட்டேன்" என எண்ணியபோது அவனுக்குச் சிரிப்பு வந்தது.

வேகமாக வரும் ஒரு காருக்கு வழிவிட்டு ஒதுங்கி நிற்கின்றனர். ஸ்டோர் கீப்பரே காரை வேகமாகச் செலுத்திக் கொண்டிருந்தார்.

"அண்ணை! போன மாதம் கொண்டு வந்த மிளகில் சரியாக ஏழரை றாத்தல் குறைந்திருந்தது. ஸ்டோரில்தான் குறைந்திருக்க வேண்டும்" என்று கூறினான் கடை உதவியாளர் ராமு.

"நம்முடைய கடையில் வைத்தே காய்ந்திருக்கலாம், இல்லையா ராமு" என்றார் மனேஜர்.

"அண்ணை, அந்த ஏழரை றாத்தலையும் வாடிக்கையாளரிடமிருந்து கொஞ்சம் கொஞ்சமாகப் பிடித்து வந்தால் என்ன" என்றான் ராமு.

"ராமு! சீல் பண்ணி தராசும், படிகளும் என்னைப் பார்த்துப் பரிகசிக்கக்கூடிய விதத்தில் மட்டும் எந்தக் கஷ்டம் வந்தாலும் செய்து விடாதே."

"நீங்கள் சரியாகச் செய்தால் கூட உங்களைச் சமூகம் சாடாமல் விடாது. ராமு அனுபவப்பட்டவன்போல் கூறினான்.

"ராமு, கடமையைச் சரியாகச் செய்தோம் என்ற திருப்தி இருந்தால் போதும். எப்போதும், எதிலும் அதிருப்தி கொள்கின்ற கூட்டம் ஒன்று எங்கும் இருந்து கொண்டுதான் வருகின்றது. அதை என்றுமே திருப்திப்படுத்த முடியாது. எவராலுமே திருப்திப்படுத்த முடியாது." அவன் நிதானமாகக் கூறினான்.

அந்தக் கார் புழுதியைக் கிளப்பிக் கொண்டு சென்று விட்டது.

அந்தக் கார் மறையும் வரை, பார்த்துக் கொண்டே சென்றான் கார் மறைந்ததும் அவன் தனக்குள்ளே சிரித்துக் கொண்டான்.

அன்று மாலை, அவனோடு வேலைக்குச் சேர்ந்த மற்றும் சங்கக் கடைகளைச் சேர்ந்த மூவர் அவனைத் தேடி வந்தனர்.

அவர்கள் வந்த விதத்தில், தன்மீது ஏதோ ஒரு குற்றச்சாட்டைச் சுமத்தத்தான் வருகிறார்கள் என்பதை அவன் இலகுவில் புரிந்து கொண்டான்.

மூவரும் ஏகோபித்த குரலில் "நீர் பங்கீட்டுப் பொருள்களை எல்லாம் நீதி, நேர்மையாகப் பகிர்ந்தளிப்பதால் எங்களுடைய ஆட்களுக்குப் பொய்சொல்ல முடியாமல் இருக்கிறது. நான் கெடுகிறேன், பந்தயம் பிடி என்றால் யார்தான் தடுத்து நிறுத்த முடியும். நீ உலகம் தெரியாதவனாய் இருக்கிறாய் உன்ரை நீதி, நேர்மை எல்லாவற்றையும் கொண்டுபோய்க் குப்பையில் போட்டுவிட்டு வாழும் வழியை இனிமேல் பார்த்துக்கொள்" என்று அவர்கள் கூறியது அவனின் ஆத்திரத்தைக் கிளறி விட்டது.

மறுகணம் அவன் "பங்கீட்டுப் பொருள்களைப் பாவனையாளர்களுக்குச் சரிவரப் பகிர்ந்து கொடுப்பதற்காகத்தான் சங்கம் எனக்குச் சம்பளம் தருகிறது"

"அந்தச் சம்பளத்தோடு சீவியம் நடத்தலாமென்று நினைக்கிறாயா?" என்று இடைமறித்தான் ஒருவன்.

"கிடைப்பதைக் கொண்டு கஞ்சி குடிப்பதைத் தவிர, பொதுமக்களைச் சுரண்டிப் புரியாணி சாப்பிட விரும்பவில்லை" என்று பதில் அடி கொடுத்தான் அவன்.

"ஆசைப்படாமல் இருக்கலாம். ஆனால் வலியக் கிடைப்பதை அனுபவிக்கத்தான் வேண்டும். அதில் எந்தவித தவறுமில்லை. வழியில் நாம் நிலையாக நின்றால் என்றும் வாழ்க்கை கேள்விக்குறியாகத்தானிருக்கும். நேரான வழியென்றாலும் அதிலும் சில குறுக்கு வழிகளையும் கையாளத்தான் வேண்டும். அதில்தான் நம் உயர்வுகள் தங்கியிருக்கிறது" என்று வாதாடினான் மற்றொருவன்.

"என் உணர்வுகள் உயிர் பெறுவதைத்தான் என் உயர்வுகளாகக் கருதுகிறேன். நேர் பாதைதான் என் இலட்சியம். ஏழைகளைச் சுரண்டுவதால்தான் நான் மதிக்கப்படுவேனென்றால், என்னை யாருமே மதிக்க வேண்டியதில்லை"யென்று ஆத்திரத்துடன் கூறினான் அவன்.

"நீ வழிக்கு வர வெகு நாளாகும். அதுவரை நீ எங்களைப் பொறுத்தவரை முட்டாள் மட்டுமல்ல, விரோதியும் கூட" அன்று அவர்கள் பொரிந்து தள்ளிவிட்டுச் சென்றார்கள்.

நீண்டநேர மௌனத்தைக் கலைப்பது போல் ஆச்சியே குரல் கொடுத்தாள்.

"தம்பி! நான் கேட்ட கேள்விக்கு நீ இன்னும் பதில் சொல்லவில்லையே....!"

பல சம்பவங்களை அசைபோட்டுப் பார்த்த அவன் ஆச்சியை அர்த்தத்தோடு நோக்கினான்.

அவன் பதில் சொல்ல விரும்பாதவனாய் தனக்குள்ளேயே சிரித்துக் கொள்கிறான்.

(யாவும் கற்பனை)

# தெய்வ காணிக்கை

மதியபோசனம் உட்பட வீட்டு வேலைகள் அனைத்தும் பூர்த்தியாகி விட்டன. பிருந்தா இன்னும் எழவில்லை. எனக்கு ஆபீஸுக்குப் போவதற்கு இன்னும் ஒரு மணித்தியால அவகாசம் இருக்கின்றது.

அதற்குள் அப்பாவின் உடுப்புக்களை கழுவி விட்டால் அவருக்கு உதவியாக இருக்கும் என்பது என் எண்ணம். அம்மா இருந்திருந்தால் என்னுடைய உடுப்புக்களையும் அவளே கழுவித்தருவாள். அதற்குத்தான் கொடுத்து வைக்கவில்லையே!

நான் பிறந்து இருபது வருட இடைவெளியின் பின்னர்தான் பிருந்தா பிறந்தாள். அவள் அம்மாவின் உயிரைப் பறித்துத் தான் பிறந்தாள். அப்பாவுக்கும் எனக்கும் பிருந்தா மீது கொள்ளை ஆசை.

"பிருந்தாவே அம்மாவின் வடிவெடுத்து - இன்னும் பல்லாண்டு அம்மாவாகவே வாழ வந்திருக்கிறாள் என்ற திருப்தி. அதனால் பிருந்தா மீது நாங்கள் கொண்ட பாசம் அபாரமானது.

அப்பாவின் உடுப்புக்களை உதறி வாளிக்குள் போடுகின்றேன். ஒவ்வொரு ஷேர்ட்டிலிருந்தும் இரண்டு, மூன்று பற்றுச்சீட்டுகள் விழுகின்றன.

நீரில் அவை நனைந்து விடாதபடி எடுக்கின்றேன். மூன்று பற்றுச்சீட்டுக்களும் புதிதாக அமைக்கப்பட இருக்கும் ஒரு ஆலயத்தின் பெயரையே குறிக்கின்றன.

இந்தக் கிராமத்தில்தான் எத்தனை ஆலயங்கள் ஏதாவது ஒரு தெய்வத்தின் பெயரைச் சொன்னால் போதும். அப்பா பக்தி பரவசமாகி விடுவார்.

எனக்கு ஒரே சிந்தனை - ஒரேயொரு உடுப்புக்காக முழு சோப் கட்டியைக் கரைத்து விட்டேனே. தலையில் குட்டிக் கொண்டு காரியத்தில் கண்ணாயிருக்கின்றேன். அப்பா வாசலில் இருந்து குரல் கொடுக்கின்றார்.

"'பிருந்தா.....! சுருட்டையும் தீப்பெட்டியையும் எடுத்துக் கொண்டு வா மகள்....

கிணற்றடியில் பிருந்தாவும் நிற்கின்றாள் என்று அப்பா எண்ணிவிட்டார். பக்கத்து வீட்டு ரேடியோவில் பிறந்த நாள் வாழ்த்து நடைபெறுகிறது. பிருந்தா இன்னும் எழவில்லை. சின்னவள்தானே பாவம் தூங்கட்டும்!

உடுப்பைத் தண்ணீருக்குள் போட்டு அலம்பிவிட்டு. அறைக்குள் போகின்றேன். அப்பாவிடம் சுருட்டையும் தீப்பெட்டி-யையும் நீட்டுகின்றேன்.

"உனக்கேன் மகள் கஷ்டம்.... இவள் பிருந்தா இன்னும் எழும்பலையா.... அவளுக்கு செல்லம் நல்லா கூடிப்போயிற்று.... இதே போக்கில போனாள் எண்டா, பொறுப்பில்லாம வளர்ந்திடுவாள்...' அப்பா கூறிவிட்டுச் சுருட்டைப் பற்றவைக்கிறார்.

"இந்தச் சின்ன வயசில, அவளிட்ட எப்படியப்பா பொறுப்புக்களை எதிர்பார்க்கிறது? பாண் வெட்டிற கத்தியால பட்ட மரத்தை வெட்ட நினைக்கிறதும், பிருந்தாட்ட பொறுப்புக்களை எதிர்பார்க்கிறதும் ஒன்றுதான். அவள் வளரட்டும்..." அப்பாவைச் சாந்தப்படுத்திவிட்டு கிணற்றடிக்கு விரைகிறேன்.

காலை நேரத்தில் என்னோடு இயந்திரம் கூட போட்டி போட முடியாது. அவ்வளவு வேகம். பாணை வெட்டி, ஜாம் பூசி விட்டு, பிருந்தாவை எழுப்புகின்றேன்.

கண் விழித்த பிருந்தா, என் கழுத்தில் தாவுகின்றாள். கன்னத்தில் ஒரு 'இச்' - "பிருந்தா டார்லிங், அக்கா, வேலைக்குப் போகணும்"

என் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு சுறுசுறுப்படைகின்றாள் பிருந்தா. காலைக்கடனெல்லாம் முடித்துவிட்டு, சாப்பாட்டு மேசையில் அமர்ந்து விட்டாள்.

மூவரும் பாணைச் சாப்பிட்டு விட்டுப் பாலையும் பருகுகின்றோம்.

என் காரியாலய வேலைகள் ஆரம்பிக்க இன்னும் பதினைந்து நிமிஷங்கள் இருக்கின்றன. காரியாலயத்தை அடைய ஐந்து நிமிஷங்கள் போதும்.

புத்தம் புதிய மஞ்சள் றோஸ் ஒன்றைப் பிடுங்கி வந்து கதிரையில் ஏறி நின்று, என் கூந்தலிற் சூடிவிடுகின்றாள் பிருந்தா. அப்பா ஓடி வந்து பிருந்தாவைப் பிடித்துக் கொஞ்சுகின்றார்.

"அப்பா....! மத்தியானம் இரண்டு பேரும் வேளைக்குச் சாப்பிடுங்கோ, நான் சாப்பாடு கொண்டு போகிறேன். அப்பா சந்தையில அரிசியும் வாங்கவேணும், காய்கறியும் வாங்குங்கோ, மீனும் வாங்கி வந்து அவிச்சி வையுங்கோ. நாளைக்கு குழம்பு வைக்கலாம்.

நாய் பலமாகக் குரைக்கின்றது. வாசலில் ஒரு நொண்டி. "ஹான்ட் பேக்"கைத் துளாவுகின்றேன். ஐம்பது சதத்தைத் தவிர சில்லறை இல்லை. சிறுவனாக இருக்கின்றான். பரவாயில்லை. ஐம்பது சதத்தை அவனிடம் கொடுத்து விட்டு திரும்புகின்றேன்.

"அவன் காலையில.... கடன் கொடுத்த வீட்டுக்கு வாறமாதிரி

வாறான். இவ... கௌரவமாக கொடுத்தனுப்பிற்று வாறா....." அப்பா சினத்தோடு என்னைப் பார்த்துக் கூறுகின்றார்.

"அவன் பாவம் அப்பா.." அவனுக்காகப் பரிந்து பேசுகின்றேன்.

"பாவமாம்.... பாவம்.... நகத்தால ஓவியம் வரைந்து உழைக்கிறவங்க கூடஇருக்கிற இந்தக் காலத்தில.... இந்த நொண்டியால மட்டும் உழைச்சி சாப்பிட முடியாதோ....?" அப்பாவும் கொஞ்சம் ஆத்திரத்தோடுதான் பேசுகின்றார். எதுவுமே புரியாமல் விழிக்கின்றாள். கதை வளர்ந்ததில் நேரம் கடந்து விட்டது கைக்கடிகாரம் என்னை எச்சரிக்கின்றது.

"அப்பா நேரமாயிற்று வருகிறேன். பிருந்தா... டாட்டா"- நான் அப்பாவின் பதிலுக்கு அவகாசமளிக்காமல் புறப்படுகின்றேன்.

பிருந்தா எனக்கு முன்னால் ஓடிப்போய் வாசலில் நிற்கின்றாள். அம்மா செய்து வந்ததை அவளே செய்கின்றாள். கேற்றைக் கடக்கும்போது அம்மா இல்லையே என்ற ஆதங்கம் எழும். பிருந்தாவின் முகம் ஆறுதல் அளித்து அனுப்பும்.

காரியாலயத்திற்கு சென்ற எனக்கு எந்த வேலையும் ஓடவில்லை. அப்பாவிடம் அப்படி வாக்குவாதம் பட்டிருக்கக்கூடா-தென்றே மனது சொல்லிக் கொண்டிருந்தது. அதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

எனது பேச்சு அப்பாவுக்கு மனத்தாங்கலை ஏற்படுத்தி-யிருக்குமோ? அம்மாவின் இழப்பால் இதயம் உடைந்து போயிருக்கும் அவருக்கு, ஆறுதல் அளிக்க வேண்டிய நானே, ஆத்திரம் கொள்ளலாமா?

பரிதாபமாக வந்து நிற்கும் நொண்டி மீது பாய்ந்து விழுகின்றாரே....! அவருடைய இதயத்தில் இரக்கமில்லையா? அப்படியென்றால் பிருந்தா மீது இவ்வளவு பிரியமாக இருக்கமாட்டாரே!

என் மனது ஒரு நிலையில் இல்லை. அரை நாள் லீவு போட்டுவிட்டு வீடு திரும்புகின்றேன்.

பிருந்தாவிற்கு என்னைக் கண்டதும் சரியான மகிழ்ச்சி. நேரத்தோடு வந்து விட்டேன் என்பதால் அப்பாவின் முகத்தைப் பார்க்கின்றேன். அதில் எவ்வித மாற்றமுமில்லை. திருப்தி.

மூவரும் மதியபோசனத்தை ஒருமித்து இருந்தே அருந்து-கின்றோம். அப்பா வழக்கம்போல பிருந்தாவுடன் விளையாடியபடியே சாப்பிடுகின்றார். இது எனக்கு மேலும் திருப்தியை அளிக்கின்றது.

நானும் பிருந்தாவும் விறாந்தையில் சிறிது நேரம் இருக்கின்றோம். பூச்சட்டிகளில் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்த றோஜாக்களை பிருந்தா எண்ணிப் பார்க்கின்றாள். முதலில் எல்லாவற்றையும் தமிழில் எண்ணுகின்றாள்.

"பிருந்தா... இங்கிலீசில் எண்ணுங்கோ டார்லிங் பார்க்கலாம்...." நான் அவளைக் கேட்கின்றேன்.

"சரியா எண்ணினா என்ன அக்கா செய்வீங்க..." அவள் மழலைமொழியில் செல்லமாகக் கேட்கின்றாள்.

"என்ன செய்ய வேணும்? பிருந்தா டார்லிங் சொல்ற மாதிரியே செய்வேன்..."

"என்ன இண்டைக்கு கோயிலுக்கு கூட்டிப்போக வேணும்..."

"இண்டைக்கு பூசை இல்லையே...."

"கோயில்ல போய்.... கடவுளிட்ட கேட்டுவந்தா... அம்மாவை ஒருநாளைக்கு கடவுள் கூட்டிக் கொண்டு வருவார்... எண்டு... அப்பா சொன்னவர்..."

"ஓ அப்படியா.... கட்டாயம் போவோம்..." என் கலங்கும் கண்களை பிருந்தா கண்டு கொள்ளாமல் முகத்தைத் திருப்புகின்றேன். "றெடி பூக்களை எண்ணுங்கோ பார்க்கலாம்..."

அவள் ஒழுங்காக எண்ணிக் கொண்டே வருகின்றாள். அவளுடைய வேகம் குறைகின்றது.

"சிக்ஸ்ரீன்... செவண்ரீன்...

எயிற்றீன்... நைன்ரீன்... ருவன்ரீன்...

என்னை மறந்து சிரித்து விட்டேன் நான். பிருந்தாவிற்கு வெட்கம். "ருவன்ரீன் இல்ல டார்லிங் ருவன்ரீ...." அவளைத் திருத்துகின்றேன். அவள் அத்தோடு நிறுத்திக் கொண்டாள். அவள் எண்ணம் முழுக்க கோயிலுக்குச் செல்வதிலேயே இருக்கின்றது.

"அக்கா... கடவுளுக்கு மஞ்சள் றோஜாவா... சிவப்பு றோஜாவா விருப்பம்...." பிருந்தாதான் கேட்கின்றாள்.

"உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது.." - என்று சொன்னால் அவளால் அதைப் புரிந்து கொள்ள முடியுமா? அந்தளவு அறிவும், பக்குவமும் அரும்ப முடியாத பருவத்திலல்லவா அவள். அவளுக்கு என்ன பதில் சொல்வதென்று சிந்திக்கின்றேன்.

"பிருந்தா.... அப்பா என்ன நிறம்......"

"வெள்ளை...."

"அக்கா (நான்) என்ன நிறம்...?"

"கறுப்பு..."

"உனக்கு அப்பாவா விருப்பம்.... அக்காவா விருப்பம்...?"

"இரண்டுபேரும் விருப்பம்..."

"அதுபோலத்தான் கடவுளுக்கு மஞ்சள் றோசும் பிடிக்கும். சிவப்பு றோஜாவும் பிடிக்கும். எல்லா நிறமும் பிடிக்கும். எல்லா மலரும் பிடிக்கும்... எல்லோரையும் பிடிக்கும்.."

"அப்போ... இண்டைக்கு கோயிலுக்கு மஞ்சளும், சிவப்பும் கொண்டு போவோமா அக்கா...?"

"பின்னேரம் போகும்போது இரண்டையும் கொண்டு போவோம். இப்போ அச்சாபிள்ள மாதிரி, போய் கொஞ்சநேரம் கட்டில்ல... படுங்கோ....".

கட்டில் பேச்சு எழுந்ததும் அவள் முகத்தைச் சுழிக்கின்றாள். எனினும் கோயிலுக்குப் போகும் ஆசையில்... கட்டிலுக்குச் செல்லப் புறப்படுகின்றாள். அந்தவேளை பார்த்து கேற்றில் ஒரு சிறுமி.

"பிருந்தா அந்தப் பிள்ளையை கூட்டிக்கொண்டு வாங்கோ...."

அவள் மிகவும் உற்சாகத்தோடு ஓடிச்சென்று அழைத்து வருகின்றாள். அந்தச் சிறுமி பக்கத்து தெருவில் இருக்கும் ஒரு ஏழைத்தாயின் ஒரே மகள்.

அழுக்கடைந்த சட்டை, பரட்டைத்தலை. வறுமையின் பிரதிபலிப்பான முகம். எனக்கு முன்னால் அந்தச் சிறுமி வந்து நிற்கின்றாள். அவளை அனுதாபத்துடன் பார்க்கின்றேன். "என்ன மகள்?" நான் பரிவோடு அவளைக் கேட்கின்றேன்.

"அக்கா! அம்மாவுக்கு அம்மாள் இளனி ஒண்டு தரட்டாம்". - ஒரு ரூபா நாணயத்தை என்னிடம் நீட்டியபடி அவள் கேட்கின்றாள்.

சூறாவளியின் பின் எங்கள் கிராமத்தில் தென்னை மரங்களே இல்லை. ஒரு சில வீடுகளில் மட்டும், ஒன்றிரண்டு அருமையாகத் தப்பிப் பிழைத்திருக்கின்றன. எங்கள் வீட்டுச் சுற்றாடலிலும் எங்கள் வீட்டில் மட்டும்தான் ஒன்றே ஒன்று தப்பி தலைநிமிர்ந்து நிற்கின்றது.

அதில் ஒரேயொரு இளநீர், சூறாவளிக்குப் பின் முதன் முதலாகப் பிடித்திருக்கின்றது. அதனால் அதை அப்பா கோயிலுக்கு நேர்த்திக்கடனாக விட்டிருக்கின்றார்.

இந்த நிலையில் அப்பாவிடம் இது பற்றிக் கேட்கவும் பயம். சிறுமியோ பரிதாபமாக நிற்கின்றாள். அவர்களுக்கு தேடிச்சென்று வாங்கிக் கொடுக்க யாருமே இல்லை. "நாளை காரியாலயத்திற்குச் செல்லும்போது, யாரையாவது பிடித்து ஒரு இளநீர் எடுத்துக்

கொடுப்போம் - என்று எனக்குள் நானே தீர்மானிக்கின்றேன். இந்த இளநீரைப் பிடுங்கிக் கொடுப்பதற்கு அப்பா அனுமதிக்க மாட்டார் என்று தெரிந்தும் - அவரிடம் ஒரு தடவை கேட்டு... ஒருவேளை அவர் சம்மதித்து விட்டால்...

நான் அப்பாவை எழுப்புகின்றேன். விஷயத்தைக் கூறுகின்றேன் அவர் என்னிடம் எதுவுமே கூறாமல் வாசலுக்கு வருகின்றார். இளநீரைப் பிடுங்கிக் கொடுக்கப் போகின்றாரோ...? எனக்குள் சலனத்தோடு கூடிய மகிழ்ச்சி. என் சந்தோஷம் சாம்பலாகின்றது. அவர் சிறுமியை ஒரே விரட்டாக விரட்டி விட்டார்.

சிறுமிக்கு ஆறுதல் சொல்லி அனுப்ப அவகாசம் அளிக்காமலே அவளைத் துரத்தி விட்டார். அந்தத் தாயின்... சிறுமியின் துயர் துடைக்க... யாருக்குத்தான் துணிவு வருமோ?

கோயிலுக்குப் போகும் போது, அப்பாவிற்குத் தெரியாமல் அந்தச் சிறுமியையும் தாயையும் சந்தித்து.... ஆறுதல் வழங்கி.... ஆவன செய்ய வேண்டுமென்ற ஆதங்கம் எனக்கு.

அதனால் அவசரமாகவே கோயிலுக்குப் போக புறப்படு கின்றோம். பிருந்தாவை வெளிக்கிடுத்தி விட்டேன். அவள் வாசலில் றோஜாக்களோடு நிற்கின்றாள். நான் வெளிக்கிட்டுக் கொண்டிருக்கின்றேன்.

திடீரென்று ஏதோ விழும் சத்தம் கேட்டது. அப்பா வேகமாக வெளியே ஓடி வந்தார். அங்கே அணில் அரித்த இளநீரின் மோதலுக்கு தாக்குப் பிடிக்காமல் சிதைந்து போய்க் கிடந்தது புதிதாகத் தளிர் விட்ட மாதுளம் செடியொன்று!

அப்பா அதை அன்புடன் வளர்த்து வந்தார். அதற்குத் தண்ணீர் ஊற்றுவதை ஒரு தெய்வ பூஜையாக எண்ணியிருந்தார். அவரது கண்களில் இருந்து நீர் வடிந்தது.

சில வினாடிகள் சிலைபோல் நின்றார்.

என்ன நினைத்தாரோ தெரியவில்லை. "மகள்! கொஞ்சம் முந்தி இளனி கேட்டு வந்த பிள்ளையின் வீடு எங்கே?" என்று கேட்டார்.

நான் வழியைக் காட்டுகின்றேன் அப்பா. இளநீரை எடுத்துக் கொண்டு நடக்கின்றார்.

அவரது இந்தச் செயல் என்னுள் ஒரு நம்பிக்கை ஒளியைத் தோற்றுவித்தது.

(யாவும் கற்பனை)



மட்டக்களப்பு பெரியகல்லாற்றை பிறப்பிடமாகக் கொண்ட ரவீந்திரன் மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவுச் சபையின் செயலாளர், ரவிப்ரியா, வள்ளிமைந்தன் ஆகிய புனைபெயர்களில் நாடகம், சிறுவர் நாடகம், சிறுகதை, நாவல், கவிதை, நகைச்சுவை எனப் பல்வேறு தளங்களில் எழுதி வருபவர். விஞ்ஞானதீபம், சுகந்தம், மலரும் வாழ்வு, இணைகரம் சஞ்சிகைகளினதும், இணைகரம் பத்திரிகையின் ஆசிரியரும் கூட. இவரின் சந்தன றோஜாக்கள், ஒரு வானவில் றோஜாவாகிறது இரு நாவல்கள் நூல்வடிவம் பெற்றுள்ளன. இவர் எழுதிய பிறவிகள் தோறும் பிருந்தா நாடகம் 25 வாரங்கள் தொடராக இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகியது. இறைபக்தியும் நேர்மையும் சமூக நோக்கும் பொறுமையும் அடக்கமும் கொண்ட இவரின் பல சிறுகதைகள் தேசிய ரீதியில் பரிசில்களை வென்றிருப்பினும், இதுவே இவரின் நூலுருப்பெறும் முதலாவது சிறுகதைத் தொகுதி யாகும்.

ஓ.கே. குணநாதன்

ISBN 978-955-8715-10-7

250/=